சேகரிக்கவேண்டும், தினம் பிக்ஷையெடுக்கவேண்டும்॥
183— வேதாத்யயனம் (யஜ்ஞ) யெக்ஞானுஷ்டானம்,
ஸ்வதர்மானுஷ்டானம் செய்யும் க்ருஹஸ்தர்
களின் க்ருஹங்களில் அடக்கத்துடன் ப்ரஹ்
ம்மசாரி பிக்ஷையெடுக்கவேண்டும்॥
184— ஆசாரியர்க்கு ஞாதிகள் பந்துக்கள், மாமன் முதலான

வர்களுடைய கிருகங்களில் பிக்ஷையெடுக்கக்கூடாது
வேறு கிருகம் கிடைக்கவில்லையானால் பந்து, ஜ்ஞாதி,
குருகுலம் இவர்களின் கிருகம் என்று முறையே, எடுக்கலாம்॥

185 — மேற்சொல்லியபடி யோக்ய கிருகங்களில் பிக்ஷை கிடைக்கவில்லையானால், எந்த கிருகங்களிருக்கிறதோ அவைகளில் மஹாபாபங்கள் செய்தவர்களின் கிருகங்களைத் தவிர பாக்கியிருக்கிற கிருகங்களில் சுத்தனாகவும் மௌனமாகவும் பிக்ஷையெடுக்கலாம்॥

186 — தூரத்திலிருந்து ஸமித்துக்களைக் கொணர்ந்து பந்தலில் வைத்து காலைமாலை ஸமித்துக்களால் அக்னியுடன் ஹோமம் செய்யவும்॥

187 — தான் வியாதியில்லாமல் இருக்கும்பொழுது ஏழுநாள்கள் பிக்ஷையெடுக்காமலும் ஹோமம் செய்யாமலுமிருந்தால் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும்॥

188 — ப்ரம்மசாரி நித்யம் பிக்ஷையெடுத்தே ஜீவிக்கவேண்டும், ஒருவனுடைய அன்னத்தை புசிக்கக்கூடாது, ப்ரம்மசாரிக்கு பிக்ஷையெடுத்து ஜீவிப்பது உபவாஸத்திற்கு ஸமம் என்று சொல்லப்பட்டிருக்கிறது॥

189 — ப்ரம்மசாரி, தேவர்களுக்கு உத்தேசித்துச் செய்யப்படுகிற யஜ்ஞங்களில்

ஒருவரால் ப்ரார்த்திக்கப்பட்டால் நியமத்துடன் போ
ஜனம் செய்யலாம், அவ்வாறே யதிகார்யங்களில்
வரிக்கப்பட்டால் ஸந்யாஸியைப் போல் எண்ணிக்கொ
ண்டு போஜனம் செய்யலாம், அதனால் பராச
ரண நியமலோபம் கிடையாது॥

190 — முன்கூறிய, தைவமாத்ரகார்யங்களில் அதிகிருச்சத்
தில் போஜனம் செய்யலாம் என்று வாதிகராமண மதி
நம்பசாலிக்கு மட்டுமே வாதிக்கப்பட்டிருக்கிறது॥

191 — இது தக்தராமாட்டாரும் தக்கரமாட்டாரும் தின
த்தோறும் அத்யயனம் செய்வதிலும் ஆசார்யர்க
ளுக்கு அனுகூலமான காரியங்களிலும் மெய்ந்நிலைய

192 — யவேண்டும்॥ சரீரம் வாக்கு ச்ரோத்ரேந்த்ரியங்
கள் மனது இவைகளை யடக்கி கைகூப்பி அஞ்ச
லி செய்து குருவின் முகத்தைப் பார்த்துக்கொண்டு

193 — நிற்கவேண்டும்॥ எப்பொழுதும் உத்தரீயமேல் வ
ஸ்த்ரத்திற்கு வெளியே வலதுகையை வைக்கப்
படியாகவும், ஸதாசாரமுள்ளவனாகவும் வஸ்தி
த்தரன் சரீரத்தை மூடிக்கொண்டும், உட்கார் என்று
குரு சொன்னபிறகு குருவின் முகத்தை நோக்

194— கி உட்கார வேண்டும்// எப்பொழுதும் குருமேன்
னிலையில் அவரைக்காட்டிலும் ஏழ்மையான அன்ன
வஸ்திரவெகுஙக்களுடன் இருக்கவேண்டும், காலையில்
குருவை எழுந்திருக்கும் முன் எழுந்திருக்கவேண்டும்
இரவு அவர் தூங்கியபின் தூங்கவேண்டும்//
195— குருவினுடைய உத்தரவை அங்கீகரிக்கும்பொழு
தும், அவருடன் ஸம்பாஷணை செய்யும்பொழுதும்,
படுத்துக்கொண்டோ, உட்கார்ந்துகொண்டோ,
சாப்பிட்டுக்கொண்டோ, நின்றுகொண்டோ,
குருவைப் பார்க்காமலோ இருக்கக்கூடாது/ குருவு
டைய உத்தரவையோ ஸம்பாஷணையோ மற்றுயே நிலை
196— யில் செய்யக்கூடாது// குரு உட்கார்ந்து ~~நின்று~~ கொண்டு உத்தர
வு செய்தால் எழுந்து பதில்சொல்லவேண்டும்,
நின்றுகொண்டிருந்தால் ஸமீபம் சென்று மேத்
தைப் பார்த்தும், அவர் வந்தால் எதிர்கொண்டு செ
ன்றும், அவர் ~~[illegible]~~ ஓடினால் பின்னால் ஓடிச்செ
197— ன்றும் பதில் கூறவேண்டும்// குரு மறைவாக்கூ
ந்தால் நேரில் சென்றும், தூரத்திலிருந்தால் ஸமீபம்
சென்றும், படுத்துக்கொண்டிருக்கும்பொழுது

நமஸ்காரஞ் செய்தும், ஸமீபத்திலிருந்தால்
வாயைத்தொடனும் உத்தரவைக்கேட்டுப்பெறவே
198— ண்டும்॥ குருவுக்குமுன்னால் சிஷ்யனுடைய
படுக்கை ஆஸனம் தணிவாகவேயிருக்கவேண்
டும்; குருவின் பார்வையிற் காலை நீட்டுதல் முத
லானயதேஷ்ட சேஷ்டை செய்யக்கூடாது॥
199— மறைவாகவுங்கூட குருவுடைய பெயரைச்
சொல்லக்கூடாது, அவருடைய நடை உடை
பாவனை இவைகளை சிஷ்யன் அபிநயமும்
200— செய்யக்கூடாது॥ எந்த இடத்தில் குரு
வுடைய குற்றத்தைக் கூறுகிறார்களோ, எந்த
இடத்தில் குருவிடமில்லாததைக் கூறி நிந்தைசெய்
கிறார்களோ, அந்த இடத்தில் காதுகளைப்
பொத்திக்கொள்ளவேண்டும், அல்லது அ
ங்கிருந்து வெளியே செல்லவேண்டும்॥
201— குருவைக் குறைகூறுபவன் கழுதையாகப் பிறப்பான்
அவரை நிந்திப்பவன் நாயாகப் பிறப்பான்;
முறையில்லாமல் குருவினுடைய தனத்தால் ஜீ
விப்பவன் புழுவாகப் பிறப்பான், குருவிடம்

சீலை-யொருமை பூண்டவன் பூசிப்பானாகப் பெறுபவான்॥

202- தனக்கு, சக்தி இருக்கும் பொழுது எதுவுங் கிறின்று
வேறொருவனைக் கொண்டு தெய்வக் கைங்கரியம் செ
ய்யக்கூடாது, ஒரு கோபத்துடனிருக்கும் பொழு
தும் ஸ்திரீயுடன் இருக்கும் பொழுதும் தான் பூ
ஜிக்கக்கூடாது; தான் வாஹனத்திலோ ஆஸனத்தி
லோ இருந்தால் கீழே இறங்கி தெய்வ வந்தனம்
203- செய்ய வேண்டும்॥ ஒரு கோவிலுக்குப் பின்னிருந்து
காற்று வந்தாலும், இவ்வண்ணம் முன்னிருந்து கா
ற்றடித்தாலும் இவ்வண் தெய்வத்தின் ஸமீபமாக இரு
க்கக்கூடாது, ஒருவன் காதில் படாமல் ஒருவனை
ப்பற்றியோ மற்றவனைப்பற்றியோ ஒன்றும் பே
204- சக்கூடாது॥ மாட்டுவண்டி, குதிரைவண்டி, ஒட்
டகைவண்டி, பெரிய மெத்தை, மாளிகை, ஊஞ்சல், பாய்,
பாறை, பெஞ்சு, தோணி இவைகளில் ஒருவ
205- ன் இவ்வண் உட்காரலாம்॥ ஒருவனுடைய கு
லதெய்வத்தின் சந்நிதியில் இருந்தால் அவரை இவைப்போ
ல் அபிவாதனம் செய்யவேண்டும், இதைக்க
த்தில்லாக்கும் பொழுது இவ்வண் ஒருவனுடைய

அநுமதியில்லாமல் தன்னுடைய தாயார்
தகப்பனாரைக்கூட வந்தனம் செய்யக்கூடாது॥
206— தன் ஆசாரியனிடத்தில் போலவே, மற்ற வித்யா
குருக்களிடமும், தகப்பனுடைய
ஸோதரர்கள் மேலானவர்களிடமும், பாபம்
செய்யாமல் தடுப்பவர்களிடமும் தர்மோபதே
சம் செய்பவர்களிடமும் நடந்துகொள்ளவேண்
207— டும்॥ வித்யை தபஸ்ஸுகளால் பெரியோ
ர்களிடமும் யோக்யமான தனக்கு வயதில்
மூத்தவனான குருபுத்ரனிடமும், குருவுடை
ய பந்துக்களிடமும் எப்பொழுதும் குருவிட
ம் போல் நடந்துகொள்ளவேண்டும்॥
208— குருவின் புத்ரன் வயதில் சிறியவனாகவோ, ஸம
வயதுள்ளவனாகவோ பெரியவனாகவோ இருந்து பூர்ண
மாக வேதம் படித்து இதருக்குச் சொல்லிக்கொடுக்
கும் திறமைவாய்ந்தவன். யாகத்தில் ருத்விக்காக
வோ தெரிசனத்திர்க்காகவோ வந்தால் குருவைக்
குப்போல் மரியாதை செய்ய வேண்டும்॥
209— அங்க- உடம்பு பிடித்துவிடுதல் ஸ்நானம்

செய்வதற்கு உச்சிஷ்ட போஜனம், பாதப்ரக்ஷா
ளனம் இவைகள் கிடையாது குருபுத்ரனுக்கு ॥

210 — ஸமான வர்ண குருபத்னிகளுக்கு குருவுக்கு ஸம
மாக மரியாதை செய்யவும், வேறு வர்ணமாக இரு
ந்தால் எழுந்து வணங்கி மட்டும் மரியாதை செய்யவும்

211 ~~111~~ — குருபத்னிக்கு, எண்ணெய் ஸ்நானம் செய்வித்தல், உடம்
பு துடைத்துவிடுதல், ஸ்நானம் செய்வித்தல், தலைவாரி
கூந்தல் பின்னலிடுவன செய்யக்கூடாது ॥

212 ~~112~~ — குணதோஷங்களை அறிந்த இருபது வயதான இளை
யன் யுவதியான குருபத்னிக்கு காலைத் தொட்டு

213 ~~113~~ — வணங்கக்கூடாது ॥ ஏனெனில் — ஸ்திரீக
ளுக்கு இவ்விதம் அலங்காரசேவையால் புருஷர்களை மய
க்குவது ஸ்வபாவம், ஆகையால் புத்திசாலி
ன்மையைக் கருதி ஸ்திரீகள் விஷயத்தில் ஏமார

214 ~~114~~ க்கூடாது ॥ லோகத்தில், ஸ்திரீகள், வேதமு
ள்ளவனையோ, (பண்டிதனையோ) இல்லாதவனை
யோ, காமக்ரோதங்களுக்கு உட்பட்டவனை
நல்வழியிலிருந்து நழுவச்செய்வதற்கு
ஸாமர்த்யமுள்ளவர்கள் ॥

215 — ஆகையால் — புருஷன், மாதா, ஸஹோதரீ,
பெண், இவர்களுடன் தனிமையாய் இருக்கக்
கூடாது, ஏனெனில், சக்திவாய்ந்த இந்திரி
யங்கள் சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்ட
வனையும் தப்புவழியாய் இழுத்துச் செல்லும்।
216 — குருபத்நீ யுவதியாகவும் தான் யுவாவாக
இருந்த போதிலும், சிஷ்யன் காலைத்தொடா
மல் தன்பெயரைச் சொல்லி விதிப்படி வந்த
217 — னம் செய்யலாம்॥ சிஷ்யன் குருபத்நீ
விஷயத்தில் அயலூர் சென்றுவந்தால் பாதா
பிவந்தனமும், தினந்தோறும் அபிவாதனமும்
பெரியோர்களின் தர்மத்தை நினைத்து செய
218 — ய வேண்டும்॥ எவ்வாறு மனிதன் மண்வெ
ட்டியால் பூமியைத் தோண்டி ஜலத்தைப் பெறுகி
றானோ அவ்வாறே சிஷ்யன் சுச்ரூஷையால்
குருவிடமுள்ள வித்யையைப் பெறுகிறான்॥
219 — ப்ரம்மசாரி, மொட்டையடித்துக் கொண்
டோ, ஜடையை போட்டுக்கொண்டோ சிகையை வைத்து
ஜடையுடனோ இருக்கலாம், கிராமத்தில் அவன்

தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது ஒருக்காலும்
ஸூர்யன் அஸ்தமனத்தையோ உதயத்தையோ
220— அடையக்கூடாது॥ ப்ரும்மசாரீ அஜாக்ரதை
யால் ஸூரியன் உதிக்கும்பொழுதோ அஸ்தமி
க்கும்பொழுதோ தூங்கிவிட்டால் காயத்ரீஜபம்
செய்து பகலில் உபவாஸமிருந்து கொண்டுதான்
221— போஜனம் செய்ய வேண்டும்॥ ஏனெனில் —
ஸூரிய உதயாஸ்தமனகாலத்தில் தூங்கியவ
ன் ப்ராயச்சித்தம் (அநுஷ்டியாம) செய்யாவிடி
ல் பெரிய பாபத்தால் நரகமடைவான்॥
222— தினந்தோறும் ஆசமனம் செய்து பரிசுத்தனாகி
வேறு சிந்தையில்லாமல் சுத்தமான ப்ரதேசத்தில்
காயத்ரியை ஜபித்துக்கொண்டு காலைமாலை ஸ
ந்த்யாவந்தனத்தை விதிவத்தாக அனுஷ்டிக்கவேண்டும்
223— ஸ்திரீயோ சூத்ரனோ நல்லகாரியத்தையார் செ
ய்தாலும் அவையெல்லாவற்றையும் சிரத்தையு
டன் செய்ய வேண்டும், சாஸ்திரவிரோதமில்லாத
மனதிற்குப்படுத்த காரியங்களையும் செய்யலாம்॥
224— புருஷார்த்தங்களுக்குள், ஸுகத்திற்க்குக் காரண

மானதால் தர்மமும் அர்த்தமும் மேலான
து என்று சிலர் கூறுகிறார்கள், அர்த்தமும் கா
மமும்தான் மேலானது ஸுகத்திற்க்குக் கார
ணமானதால் என்று சிலர், அர்த்தமும் காம
மும் ஸாதனமானதால் தர்மமே மேலானபுரு
ஷார்த்தம் என்று சிலர், ஆனால் தர்மம் அ
ர்த்தம், காமம் என்னும் மூன்று புருஷார்த்
தங்களும் சேர்ந்துதான் ஸுக ஸாதனமா
கும் என்பதுதான் சித்தாந்தம். இங்கு கூறிய
மோக்ஷத்தையும் அவைகளைக் குறித்து இம்மூன்
றுக்கு மேலாயும் சிறந்த புருஷார்த்தமாகும்.

225— ஆசாரியன், பிதா, மாதா, ஜ்யேஷ்டப்ரா
தா, இவர்களை எந்தவித கஷ்டமான நிலை
யிலும் எவரும் அவமதிக்கக்கூடாது,
அதிலும் ப்ராமணன் விசேஷமாக (கட்டாயமாக)
அவமதிக்கக்கூடாது. ஏனெனில் —

226— ஆசாரியர் பரப்ரும்மத்தின் ஸ்வரூபம்,
பிதா ப்ரும்மாவின் ஸ்வரூபம், மாதா பூமி
தேவியின் ஸ்வரூபம், ப்ராதா தன்னுடைய

+ ஒரு மனிதனை ப்பெற்று வளர்த்த மாதா பிதாக்க
ளின் சிரமக் கடனை நூறு ஜன்மங்களில் கூட தீர்க்க
முடியாது!

அவர்களை
எவ்வரூபம், ஆகையால் சமர்த்திக்கப்படாது॥

227 — ஒரு மனிதன் பிறந்து வளர்வதற்கு, மாதா பிதாக்க
ள் அனுபவித்த சிரமத்திற்கு, அந்தக் கடனைத்
தீர்க்க முடியாது நூறு ஜன்மங்களிலும்!

228 — ஆகையால் மாதா பிதா குரு இவர்களுக்கு எப்பொ
ழுதும் நல்லதையே செய்ய வேண்டும், அப்பே
ரவர்கள் சந்தோஷமடைந்தால் எல்லா தர்ம
ங்களும் பலனளிக்கும்॥

229 — மாதா பிதா குரு மூவர்களுக்கும் செய்யும் சே
வை மேலான தபஸ் ஆகக் கூறப்படுகிறது, அவ
ர்களுடைய அனுமதியில்லாமல் வேறு தர்மத்தை

230 — ச் செய்யக் கூடாது॥ அந்த மூவர்களுமே
மூன்று லோகங்கள், (பூ: புவ: ஸுவ:) அவர்களே
மூன்று ஆச்ரமங்கள், அவர்களே மூன்று வேதங்
கள், அவர்களே மூன்று அக்நிகள், என்று சொல்ல

231 — ப்படுகின்றன॥ பிதா கார்ஹபத்ய அக்நி, மா
தா தக்ஷிணாக்நி, குரு ஆஹவனீயாக்நி, இம்மூன்

232 — று அக்நிகளும் மேலானவைகள்॥ இந்த மூன்று
அக்நிகளையும் ச்ரத்தையுடன் உபாஸிக்கும்

ப்ரம்மசாரி யோகிகளைத்தேடுமென்று
லோகங்களையும் அடைவான், அப்ப
ரகாசமான சரீரத்துடன் தேவர்களைப்
போலஸ்வர்க்கத்தோவழமாக வஸிப்பான்॥
233— மாத்ருபக்தியால் இந்த பூலோகத்தையும்;
பித்ருபக்தியால் அந்தரிக்ஷலோகத்தையும்;
குருசுச்ரூஷையால் ப்ரம்மலோகத்தை
234— யும் அடைவான்॥ எவனால் இந்த
மூவர்களும் உபசரிக்கப்படுகிறார்களோ
அவனுக்கு ஸகல தர்மங்களும் பலன் கொடு
க்கும்; எவனால் உபசரிக்கப்படவில்லையோ அ
வன் செய்யும் தர்மங்கள் பலனளிக்காது॥
235— அந்த மூவர்களும் ஜீவிக்கும்வரையிலும்
அவர்களுடைய அனுமதியில்லாமல் வேறு
தர்மங்கள் செய்யக்கூடாது, அவர்களுடை
ய ப்ரீதியையும் நன்மையையும் தேடி
அவர்களுக்கு நித்யம் ஸேவை செய்யவே
236— ண்டும்॥ அவர்களுடைய ஸேவைக்கு
விரோதமில்லாமல், மனதுவாக்கைய்

+சண்டாளாதிகளிடமிருந்தும் லௌகிகவித்தை தெரிந்து கொள்ளலாம் என்று மேதாதிதி பாஷ்யம்

னையால் பரலோகத்திற்கு வேண்டிய எந்தக
ர்மாவைச் செய்தாலும் [illegible] அவர்களிடம் தெரிய
237— க்க வேண்டும்॥ ஏனெனில், இவ்விதம் [illegible]
சுச்ரூஷையைச் செய்தால் மனிதன் ச்ருதி ஸ்ம்ருதி
களில் கூறிய ஸகல தர்மங்களையும் அநுஷ்டித்த
பலனையடைகிறான், ஆகையால் இந்த தர்மம்,
ச்ரேஷ்ட (ப்ரத்யக்ஷமான) மேலான தர்மம், மற்ற தர்
மங்கள் உபதர்மங்கள் (அதைப்பற்றியவை)॥
238— ஞானத்தை திவாகீர்த்தி செய்யும் ஞானமேலான
லௌகிக சூத்ரனிடமிருந்தும் ச்ரத்தையுடன்
தெரிந்து கொள்ளலாம், கர்மவசத்தால் ஜாதி
ஸ்மரணைக்கு ஞானியாக சண்டாளனாகப் பிறந்த
வனும் அவனிடம் ஞானம் (பரமஞானம்)
பெறலாம், தன்னைக்காட்டிலும் தாழ்ந்த குல
த்திலிருந்தாலும் வைவாஹத்திற்கு நல்ல ஸ்த்ரீயை
(கன்னிகையை) பெற்றுக் கொள்ளலாம்॥ +
239— விஷத்திலும் அம்ருதம் கலந்திருந்தால் விஷத்தை விலக்
கி அம்ருதத்தை எடுத்துக்கொள்ளலாம், சிறுவனி
டமிருந்தும் நல்வார்த்தையை எடுத்துக்கொள்ள
லாம்,

விரோதியிடமிருந்தும் ஸதாசாரத்தைக்
கைக்கொள்ளலாம்; அமேத்யத்திலிருந்
தும் தங்கத்தை எடுத்துக்கொள்ளலாம்॥

240— கன்னிகைகள், ரத்னங்கள், வித்யை, தர்மம்,
சௌசம், நல்வார்த்தை, சிற்பவகை மு
தலான பலவித சில்பங்கள், இவைகள் யாரிடமிரு
ந்தும் கைக்கொள்ளலாம் (பெற்றுக்கொள்ளலாம்)

241— பிராமணன், அத்யயனம் செய்ய பிராமண
ன் கிடைக்காவிடில், க்ஷத்ரியனிடமிருந்தும் அல்
லது வைசியனிடமிருந்தும் அத்யயனம் பெற
லாம், ஆனால், குருவுக்கு பணிவு செல்லுதல்
சுச்ரூஷை அத்யயனம் முடியும்மட்டும்॥

242— மோக்ஷத்தை விரும்புகின்ற ப்ரம்ம
சாரி, பிராமணனைத் தவிர மற்றவரிடத்திலும்,
ஸாங்க வேதாத்யயனம் செய்யாத பிராமண
னிடமும் யாவஜ்ஜீவம் இருக்கலாகா
க்கூடாது॥

243— நைஷ்டிகன் யாவஜ்ஜீவம்
குருகுலவாஸத்தை விரும்பினால் குருவுக்கு
சுச்ரூஷை செய்து கொண்டே வாஸிக்க வேண்
டும்॥

+ தர்மஸிந்த

244— எந்த வைஷ்ணவன் மரணபரியந்தம் கைங்கர்ய
ஸேவை செய்கிறானோ அவன் அந்திமஸ்ம்ருதியில்லாதபோதிலு
ம் ப்ராப்தியை நேரிடையாக அடைகிறான்॥

245— + உபகாரவான பகவத்ஸ்வாமிசாரி, வித்யாப்யாஸமுத
தியவற்றுக்கு குருக்களுக்கு உபகாரம் செய்ய
வேண்டும் என்பது அவசியமில்லை, ஆனால் வித்
யாப்யாஸம் பெற்றுவரும் ஸமயம் செய்யும்
பண்பு குருவானவருக்கு யதாசக்த்
யாசகம் செய்தாவது குருதக்ஷிணை கொடு

246— க்கவேண்டும்॥ பூமி, தங்கம், கிராமம், குதி
ரை, குடை, பாதரக்ஷை, ஆஸனம், தான்யம்,
காய்கறி, வஸ்திரம், இவைகளில் ஸ்வய
ன் சக்தியை அனுஸரித்து மெய்புத்தனைத் தெளிவு
யாகக் கொடுத்து குருவைத் திருப்தி செய்
விக்கவேண்டும்॥

247— வைஷ்ணவ ப்ரஹ்மசாரி, குரு இறந்துவிட்டால்
வித்வானாக இருந்தால் குருபுத்ரனிடமோ, இல்லா
விட்டால் குருபத்னியிடமோ, அல்லது குருவின்
ஞாதியிடமோ குருவிடம்போல் சுஸ்ரூஷை
செய்யவேண்டும்॥

248— மேற்கூறியபடி அவரெவருமில்லாவிட்டால்
நைஷ்டிகன் ஸஞ்சிதஸ்வதர்மங்களைச்
செய்துகொண்டும் அக்நிக்கு வேண்டு
ஹோமாதிகள் செய்வதின் மேலும் சுச்ரூஷை
செய்துகொண்டு தன் தேஹம் மோக்ஷப்ராப்
திக்கு யோக்யமாகச் செய்துகொள்ளவே
249— ண்டும்॥ இவ்விதம் மேற்கூறியபடி எந்த
ப்ராம்மணன் நைஷ்டிக ப்ரம்மசர்யவ்ர
தத்தை தவறாமல் அனுஷ்டிப்பா
னோ அவன் புனர்ஜன்மா இல்லாத மோக்ஷ
ப்ராப்தியை அடைவான்॥
இரண்டாவது அத்யாயம் முற்றிற்று॥

மூன்றாவது அத்யாயம்—

1— ப்ரம்மசாரீ(உபகுர்வாணன்) மூன்று வேதங்க
ளையும் படிக்க குருகுலத்தில் முப்பத்தாறு வரு
ஷங்கள், அல்லது பதினெட்டு வருஷங்கள், அல்ல
து ஒன்பது வருஷங்கள் அல்லது அத்யயனம்
முடியும்வரை ப்ரம்மசர்ய நியமம் அனுஷ்டி
க்க வேண்டும்॥

2 — தன்னுடைய வேதசாகையை அத்யயனம் செய்து,
சக்தியை அநுஸரித்து, மூன்று, அல்லது இரண்டு அல்லது
ஒன்று வேதசாகைகளை அத்யயனம் செய்த பிறகும்
ப்ரஹ்மசர்யத்தில் வழுவாமல் அனுஷ்டித்து, பிறகு க்ரு
ஹஸ்தாச்ரமத்தையடைந்து அதற்குரிய தர்மங்களை அ
3 — னுஷ்டிக்க வேண்டும்॥ பிறகும் ப்ரஹ்மசர்ய வ்ரதானு
ஷ்டானத்தால் பரிசுத்தனும் பிதாவிடமிருந்தோ
வேறு ஆசார்யரிடமிருந்தோ வேதமாகிய தனத்
தைப் பெற்றவனும் (ஸமாவர்த்தனம் செய்து) புஷ்
பமாலையணிந்து உயர்ந்த படுக்கையில் (கட்டிலில்)
உட்கார்ந்திருக்கும் அவனுக்கு விவாஹத்திற்கு
முன் பிதாவோ ஆசார்யனோ மதுபர்க்க பூஜை
4 — செய்ய வேண்டும்॥ குருவினுடைய அனுமதி
பெற்று முறைப்படி ஸ்நானம் ஸமாவர்த்தனம் செய்துகொ
ண்டவன், தனக்கு ஸமான வர்ணமும்
நல்ல லக்ஷணமுள்ளவளுமானவளை பார்யை
யாக விவாஹம் செய்துகொள்ள வேண்டும்॥
5 — மாதாமஹனுடைய ஜ்ஞாதிகள் பிதாவின் ஜ்ஞாதிகள்
இவர்களின் கோத்ரத்தினைத் தவிர்க்கக்கு

6.— ௬ விவாஹத்திற்குரியவன் ॥ பசு ஆடுமாடு
தனதான்யங்கள் இவைகள் ஏராளமாக
இருந்தபோதிலும் விவாஹ விஷயத்தில் சொல்லப்
போகும் பத்து குலங்களை விலக்கவேண்டும் ॥

7— ௭ அதாவது — ஜாதகர்மாதிகளான ஸம்ஸ்காரக்கிரி
யைகளில்லாதது, ஆண்ஸந்ததியில்லாதது, வே
தாத்யயனமில்லாதது, மிகவும் நீண்டதலை
ரோமமுள்ளது, மூலவியாதியுடையது, க்ஷயரோ
கமுள்ளது, அக்நிமாந்த்யம், அபஸ்மாரம்,
வெண்குஷ்டம், குஷ்டம் இவைகளுடை
யது. இந்த குலங்கள் விலக்கத்தக்கன ॥

8— ௮ சிவப்புகறுப்புக்கலந்த சிகையுடையவள்,
அதிகமான விரல் முதலான அங்கங்களையுடைய
வள், ரோகமுள்ளவள், ரோமமேயில்லாதவ
ள், அதிகமாக ரோமமுள்ளவள் அதிகமாகப் பு
ணப்பேச்சுப் பேசுபவள், பொன்னிறமான கண்
களையுடையவள், இவ்வாதி கன்னிகையை விவா
ஹம் செய்துகொள்ளக்கூடாது ॥

9— ௯ நக்ஷத்திரம், விருக்ஷம், நதி, ம்லேச்ச, பர்

வதம், பக்ஷி, ஸர்ப்பம், வேலைக்காரி, பயங்கரம்,
இவ்வித பெயருடைய கன்னிகையையும் விவாஹம்
செய்து கொள்ளக்கூடாது ||

10 — குறையில்லாத அவயவங்களையுடையவளும்,
இனிமையான பெயருடையவளையும், ஹம்ஸ
ம் யானை போன்ற அழகான நடையுடையவளும், அதிக
ப்படியில்லாத ரோமம், தலைமயிர், பல்களி
னவைகளையுடையவளும், மிருதுவான அவய
வங்களையுடையவளுமான கன்னிகையை மண
க்கவேண்டும் ||

11 — ஸஹோதரனில்லாத பெண்ணை விவாஹம் செய்து
கொள்வதில் அவளுக்கு புத்ரன் உண்டானால் பெண்
ணுடைய பிதாவுக்கும் அந்த புத்ரன் வேண்டுமோ
என்று ஸந்தேஹத்திற்கிடமுண்டாகுமையால்
அவளையும், பெண்ணுடைய பிதா யாரென்று தெரி
ப்படாத தெரியாதவளையும் விவாஹம் செய்து கொ
ள்ளக்கூடாது ||

12 — ப்ராமண க்ஷத்ரிய வைஸ்யர்களுக்கு முதலாவது வி
வாஹத்தில் ஸவர்ண விவாஹமே மேலானது,

காமத்தால் செய்து கொண்டு மேலவாஹத்
தில் முறையாக அநுலோமவிவாஹம் மேல்॥
13 — சூத்ரனுக்கு சூத்ராதான் பார்யை, வைசிய
னுக்கு சூத்ரையும் வைச்யையும், க்ஷத்ரிய
னுக்கு சூத்ரா வைச்யா க்ஷத்ரியா, பிராம
ணனுக்கு சூத்ரா வைச்யா க்ஷத்ரியா, பிராமணீ
என்று பார்யை என் சொல்லப்பட்டிருக்கிறது॥
14 — பிராமணக்ஷத்ரியர்கள் ஸவர்ணாஸ்திரீ கிடைக்
காதிருந்தாலையாரும் சூத்ரா பார்யையாக
லாமென்று புராணத்தில் காண்கின்றபடியாகு॥
15 — பிராமணக்ஷத்ரியவைசியர்கள் சாஸ்திர
மறியாததால் சூத்ரஸ்திரீயைவிவாஹம் செ
ய்து கொண்டால் அவநுக்குப் பிறக்கும் புத்ர
திபரம்பரையை சூத்ரநாதியாகவே செய்கிறா
16 — ர்கள்॥ சூத்ரஸ்திரீயை விவாஹம் செய்து கொண்
ட பிராமணன் பதிதன், என்று அத்ரி கௌத
ம அபிப்ராயம், க்ஷத்ரியனும் பதிதனென்று
சௌநகாபிப்ராயம், வைசியனும் பதிதன்
என்று ப்ருகு மதம், (புத்ரோத்பத்தி ஏற்பட்டால்

(13) +ஸவர்ண ஸ்திரீஸம்பந்தத்தில் இல்லாத போதிலும்

17 — என்று இலக்) ॥ ப்ராமணன் தன் ஸவர்ணஸ்திரீ
யை விவாஹம் செய்து கொள்ளாமல் சூத்ரஸ்திரீயை
விவாஹம் செய்து கொண்டால் நரகத்தையடைவா
ன், அவனிடம் புத்ரோத்பத்தி ஏற்பட்டால் அவனு
க்கு ப்ராமண்யம் போய்விடுகிறது ॥

18 — சூத்ரஸ்த்ரீயை பார்யையாகக் கொண்டு தெய்
வ பித்ரு அதிதிகார்யங்கள் செய்யும் ப்ராமணனு
டைய பித்ருக்கள் கவ்யத்தையும், தேவர்கள் ஹ
வ்யத்தையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், ஸ்

19 — வர்க்கமும் கிடையாது ॥ சூத்ரஸ்த்ரீயுடைய
அதரபானம், சேர்ந்து சயனம், புத்ரோத்பத்தி
இவைகள் செய்த ப்ராமணனுக்கு ப்ராயச்சித்தமே
கிடையாது (சுத்தி கிடையாது ॥

20 — நான்கு வர்ணத்தவர்களுக்கும் இந்த லோகப
ரலோகங்களில் நன்மையோ தீமையோ கொடுக்
கும் எட்டு விவாஹங்களைப் பற்றி சுருக்கமாகக்
கூறுகிறேன் கேளுங்கள் ॥

21 — ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம்,
ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம்,

என்று எட்டுவிதம் பைசாசம் அதமம்॥

22 — எந்த வர்ணத்திற்கு எந்த விவாஹம் தர்ம
மானது, அந்தந்த விவாஹத்தின் குணதோ
ஷங்கள், அந்தந்த விவாஹத்தில் புத்ரோத்
பத்தியாகும் குழந்தைகளின் குணதோஷங்க
ள் இவைகளை உங்களுக்குச் சொல்லுகிறே

23 — ன்॥ ப்ராம்மணனுக்கு முதலாவதான ஆ
று விவாஹமும், க்ஷத்ரியனுக்கு ஆஸுர காந்
தர்வ ராக்ஷஸ பைசாசமும், வைசிய சூத்ரர்
களுக்கு ஆஸுர காந்தர்வ பைசாசமும்
இந்த விவாஹங்கள் தர்மமானவைகள்॥

24 — ப்ராம்மணனுக்கு முதல் நாலு விவாஹங்களும்
க்ஷத்ரியனுக்கு ராக்ஷஸமும், வைசிய சூத்திர
களுக்கு ஆஸுர விவாஹமும் மேலானது
என்று அறிவாளிகள் கூறுகிறார்கள்॥

25 — ப்ராஜாபத்யம் ஆஸுரம் காந்தர்வம் ராக்ஷ
ஸம் பைசாசம் இந்த ஐந்தில், ப்ராஜாபத்
ய காந்தர்வ ராக்ஷஸம் மூன்றும் தர்மவி
வாஹங்கள், பைசாசம் ஆஸுரம் இந்த

இரண்டும் எல்லாவற்றைத் தாங்கும் மேடையாகும்॥

26 — ஸாஸ்த்ரீய விவாஹ முறையால் நிர்ணீதமான
முறையிலோ கலப்பான முறையிலோ க்ஷத்ரியருக்
காந்தர்வ ராக்ஷஸமென்னும் தர்மவிவாஹ
மன்னருக்கு முறை - மேலாவது வதுவரர்கள்
இணைந்து பாணிக்ரஹணம் செய்த விவாஹம் செய்துகொ
ள்ளல் (அக்னிஸாக்ஷியாக ஸப்தபதி விவாஹமே

27 — கன்னிகைவரனுக்கு வேண்டியவைகளையும் ஸேவைமா
ன ஆடை அலங்காரங்கள் செய்து, வித்யை
ஆசாரமுள்ள வரனை, வீட்டில் அழைத்து
1 கன்னிகையை தானம் செய்வது ப்ராஹ்மவிவா
ஹம் எனப்படும்॥

28 — யாகம் நடக்கும்பொழுது ருத்விக்காக கர்மா
வை செய்பவனுக்கு, கன்னிகையை அலங்
2 கரித்து தானம் செய்வது தைவவிவாஹமெ
ன்று கூறுகிறார்கள்॥

29 — வரனிடமிருந்து, ஒருகோ, ஒருபசு, அல்லது இரண்
டுகோக்களைக் கன்னிகைக்காக (யாகாதி தர்
3 மகார்யம் செய்வதற்க்காக) ப்பெற்றுக்கொண்டு

அலங்கரித்த கன்னிகையை தானம் வாங்கித்
தாகர் செய்வது ஆர்ஷமெனப்படும்॥
30— கன்னிகையைப் பிதா கன்யாதான காலத்தில்
நீங்கள் இருவர்களும் தர்மோபதேசங்களைச்செ
4 ய்யுங்கள் என்று கூறி கன்யாதானம் ப்ராஜாபத்
யம் எனப்படும்॥
31— கன்னிகையின் பெற்றோர்களுக்கும் கன்னிகை
5 க்கும் *யதாசக்தி பணம் கொடுத்து இப்படி கன்யாதான
ம் ஆஸுரவிவாஹம் எனப்படும்॥
32— வதூவரர்கள் ஒருவருக்கொருவர் ஆசைப்
6 பட்டு ஸ்வயம் யோக்யதை விவாஹம் செய்
து கொள்வது காந்தர்வம் என்று அறியவும்॥
33— பலாத்காரமாக கன்னிகையை அபஹரிக்கும்
போது பெற்றோர்களின் எதிர்ப்பு ஏற்பட்டால்
அவர்களைக் கொன்றோ அங்கச்சேதம் செய்
1 தோ கோட்டைகளை இடித்தோ கிரஹமில்லா
மல் கன்னிகை அலறி அழும் பொழுதே
அபஹரித்துச் சென்று செய்யும் விவாஹம் ராக்ஷ
ஸமெனப்படும்॥

34— தூங்கிக்கொண்டோ, மத்யபானத்தால் மயங்
கியோ, தன்னைக்காத்துக்கொள்ளாதிருக்கையிலோ
இருக்கும் பெண்ணை தனியான இடத்திற்குத்
தூக்கிச்சென்று அவளுடன் சேருகின்றதே அந்
த விவாஹம் பைசாசம், என்ற விவாஹம். பாபமான
தும் விவாஹங்களுக்குள் கடைசியும் கேவலமானதும் ||

35— ப்ராம்மண விவாஹத்தில் ஜலம் விட்டு கன்யாதான
ம் செய்வதே மேலானது, மற்ற வர்ணத்தாருக்கு
பரஸ்பர இஷ்டப்படி வாக்கினால் சொல்லி கன்யா
தானம், ஜலம் விட்டும் செய்யலாம் ||

36— இங்கு கூறப்பட்ட விவாஹங்களுக்குள் எந்த வி
வாஹத்திற்கு என்ன குணம் மனுவால் சொல்லப்பட்
டிருக்கிறதோ அதை கூறுகிறேன் கேளுங்கள் ||

37— ப்ராம்ம விவாஹ முறைப்படி விவாஹம் செய்துகொண்ட
வளுக்கு பிறக்கும் புத்ரன் தர்மவானாக இருந்தால், தன்
பிதா வழியிலிருந்து பத்து தலைமுறைகளையும், தன் புத்ரனி
லிருந்து பத்து தலைமுறைகளையும் தன்னையும் சேர்த்து
இருபத்தியொன்று தலைமுறையாளுமான பித்ருக்களை பா
பத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் விடுவிக்கிறான் ||
அந்த விதத்தில் பாபமில்லாத புத்ரர்கள் பிறப்பார்கள்

38 — தைவவிவாஹம் செய்துகொண்டவனுடைய பு
த்ரன் முன் ஏழு பின் ஏழு தலைமுறைகளை
யும், ஆர்ஷவிவாஹம் செய்துகொண்டவனுடை
ய புத்ரன் முன் மூன்று பின் மூன்று தலைமுறைகளை
யும், ப்ராஜாபத்யவிவாஹம் செய்து கொண்டவன்
புத்ரன் முன் ஆறு பின் ஆறு தலைமுறைகளையும்,
தன்னையும் பாபவிமோசனம் செய்கிறார்கள்//

39 — ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம் என்ற
நான்கு விவாஹங்களில், வைதிகாத்யயனத்தாலு
ண்டான ப்ரம்மதேஜஸ்ஸுடனும், தார்மிகர்க
ளுக்கு ப்ரியமானவர்களுமான புத்ரர்
கள் உண்டாவார்கள்//

40 — அவர்கள், நல்ல அழகு, தைர்யமுதலான நல்ல
குணங்கள், தனம், புகழ், வஸ்த்ராபரணாதி
போகம், தர்மானுஷ்டானம், நூறுவருஷம்
ஆயுஸ் இவைகளுடன் ஜீவிப்பார்கள்//

41 — ப்ராம்மாதிகளைத்தவிர ஆஸுரம் முதலான நான்
கு விவாஹங்களில், க்ரூரச்செயல், பொய் பேசு
தல், வேதத்வேஷம், யாகாதிதர்மத்வேஷம்,

+ இல் வியாக்யானத்தின் சில குறிப்புகள் உள்ளது கவனிக்கவும்

இவைகளுடன் கூடிய புத்தகங்கள் பார்ப்பார்கள்||

42 — மனுஷ்யர்களுக்குத் தோஷமென்ன விவாஹத்தால் தோஷமென்ற ஸந்ததியும் தோஷமில்லாத விவாஹத்தால் தோஷமில்லாத ஸந்ததியும் உண்டாகும்||

43 — ஸவர்ண விவாஹத்தில் பாணிக்ரஹண ஸம்ஸ்காரம் விதிக்கப்படுகிறது, அஸவர்ண விவாஹத்தில் மேலே கூறப்போகும் முறையைத் தெரிந்து

44 — கொள்ளவும்|| ப்ராமண க்ஷத்ரிய கன்யையை விவாஹத்தில் அம்பும் அங்குசமும், வைச்ய கன்யையை ப்ராமண க்ஷத்ரியர்கள் விவாஹத்தில் தார்க்கோலையும், சூத்ர கன்யையை விவாஹத்தில் முதல் மூன்று வர்ணத்தாரும் வஸ்திர நுனியை கிரஹிக்க வேண்டும் (பிடித்துக் கொள்ள வேண்டும்)||

45 + தன் பத்நியுடன் ப்ரீதியுடன் எப்பொழுதும் ருது காலங்களில் (~~[illegible]~~) சேரவேண்டும்,

ஆனால் — ஏகபத்நீவ்ரதனுக்கு இதிற்கு அமாவாஸ்யை முதலான பர்வகாலங்கள் தவிர மற்ற நாட்களில் பத்நியின் விருப்பத்தை அநுஸரித்து ஸங்கமிக்கவும்||

46— ஸ்திரீகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரஜோதர்
சனத்திலிருந்து பதினாறு நாட்கள் மொத்தம் ரு
து காலம், இதில் முதல் நாலு நாட்கள் ஸ்திரீ ஸங்கமம்
கூடாது என்று பெரியோர்கள் விலக்கியிருக்கி
றார்கள், ஸ்திரீகளுக்கு ருதுகாலம் என்பது இய
ற்கையாக அமைந்தது॥

47— அந்த பதினாறு நாட்களில் முதல் நாலு நாட்க
ள் பதினொன்று பதிமூன்றுவது நாட்கள் தவிர
பாக்கி பத்து நாட்களே சேர மானவைகள்।

48— அந்த பத்து நாட்களிலும் இரட்டைப்படை நாட்களில் (
ஆறு எட்டு என்பன) புத்ரர்கள் பிறப்பார்கள், ஒற்றைப்
படை நாட்களில், (ஐந்து ஏழு என்பன) புத்ரிகள் பிறப்
பார்கள், ஆகையால் புத்ரனை விரும்புபவன் இரட்ட
த்த நாட்களில் ஸ்திரீயைச் சேர வேண்டும்॥

49— ஒற்றைப்படை நாட்களிலும் புருஷ வீர்யம் அதிகமாக
இருந்தால் புருஷப்ரஜையும், ஸ்திரீ வீர்யம் அதி
கமாகயிருந்தால் ஸ்திரீப்ரஜையும், ஸமமாக
இருந்தால் நபும்ஸக ப்ரஜையும், அல்லது இரட்
டை ப்ரஜையும் ஸ்திரீ புருஷர்களுடைய வீர்யம்

சக்தியில்லாமலிருந்தால் கர்ப்பமுண்டாகாது ||

50 — மேற்கூறியபடி ருதுகாலத்தில் விலக்கப்பட்டராத்ரிகள் த
விர மீதமுள்ள இரண்டு ராத்ரிகள் மட்டுமே ஸ்திரீஸங்கம்
செய்பவன் கிருஹஸ்தனாகவோ வானப்ரஸ்தனாகவோ
இருந்தாலும் ப்ரம்மசாரியென்னப்படுவான் ||

51 — சாஸ்திரமறிந்த கன்னிகையின் பிதா கன்னிகைக்கா
க வரனிடம் பணம் வாங்கிக்கொள்ளவோ அல்லது
கொடுக்கக்கூடாது, பணம் வாங்கினால் அவன் கன்னி

52 — கையை விற்பவனாவான் || கன்னிகையைச் சேர்ந்த
பர்த்தா பிதா தேவரனவர்கள், தன் பெண்ணுடையவோ
மனைவியுடையவோ, ஸொத்துக்களை, ஸொத்து
க்கள் வேலைக்காரி, வாஹனம், வஸ்திரம் முதலியன அறியாமை
யால் அனுபவிக்கிறார்களோ அந்த பாபாத்மாக்கள் நரக

53 — த்தையடைவார்கள் || முன்கூறியபடி தைவவிவாஹ
ங்களில் ஆர்ஷவிவாஹத்தில் கன்னிகையின் பிதா
வரனிடமிருந்து ஒரு காளையும் பசுவும் வாங்கிக்கொ
ள்ளும்படி கூறியிருக்கிறது, அது தனலோபத்தாலல்ல
ஆசாரத்தை அனுஸரித்து ஆகையால் அது சுல்கம்
அல்ல, அதனால் தோஷமில்லை (பாபமில்லை) ||

54— வரன்கன்னிகையிடம் பிரியமாயும் ஒருவராயும்
வரனுக்கன்னிகைக்குக் கொடுக்கப்பட்டவையாகிய
பெற்றோர்கள் தாங்கள் எடுத்துக் கொள்ளாமல் கன்
னிகைக்கே கொடுத்துவிடுகிறார்களோ அது கன்னி
யாவிக்கிரயமென்றதோர் தோஷமில்லை॥

55— அதிகமான ஸம்பத்தை விரும்புபவர்கள், (ஸவாநுகா
லம் தவிர வேறு காலங்களிலும்) என்றுடைய பெண்
டீர்களின் ஸஹோதரர்கள், பர்த்தா, பர்த்தாவைச்
சேர்ந்தவர்கள் போஜனம் வஸ்திராபரணாதிக
ளால் பெண்களுக்கு மரியாதை செய்ய வேண்டும்॥

56— எந்தக் குடும்பத்தில் ஸ்திரீகள் மரியாதை செய்யப்படு
கிறார்களோ அங்கு தேவதைகள் ஸந்தோஷப்படு
கிறார்கள், எங்கு மரியாதை செய்யப்படவில்லையோ
அங்கு செய்யும் யாகத்தின் பலனளிக்காது॥

57— எந்தக் குடும்பத்தில் ஸஹோதரி முதலான பந்துக்கள்
துக்கப்படுகிறார்களோ அந்த குடும்பம் சீக்கிரம்
ஏழையாகிவிடும், எங்கு அவர்கள் துக்கப்படவில்
லையோ அந்தக் குடும்பம் நித்யமாய் விருத்தி
யடையும்॥

58— எந்த வீடுகளில், ஸ்ரோத்ரீயர்களான பந்துக்கள் தங்க
ளுக்கு மரியாதை கிடைக்காத கோபத்தால் சபிக்கிறா
ர்களோ. அந்த வீடுகள் பேயால் பிடிக்கப்பட்டது போல் ஸகல
59— சொத்துக்களுடன் அழியும்॥ ஆகையால் பந்துக்
கள், போஜனம் ஆடையாபரணங்களால் எப்பொ
ழுதும் - [illegible] திவா சேவல் கண்ணை
களின் மரியாதை செய்யத்தக்கவர்கள், அது மனித
ர்களுக்கு ஐச்வர்யத்தைக் கொடுக்கும்॥
60— எந்த வீட்டில் பார்யையால் பர்த்தா ப்ரீதியுடன் ஸந்
தோஷமாக இருக்கிறாரோ, பர்த்தாவால் பார்யையும்
அவ்வாறே, அந்த வீட்டில் நித்ய கல்யாணம் நி
61— ச்சயம்॥ ஸ்த்ரீ ஆடையாபரணங்களால் அலங்கரி
க்கப்படவில்லையானால் புருஷனுக்கு ஸந்தோஷமே ஏற்
படாது, அவனுக்கு ஸந்தோஷமில்லையானால் ப்ரஜோத்
62— பத்தி ஏற்படாது॥ ஸ்த்ரீ ஆடையாபரணங்களால்
ப்ரகாசமாக இருந்தால் அந்த குலம் முழுவதும் ப்ர
காசமாக இருக்கும், அவள் ப்ரகாசமாக இல்லாவி
ட்டால் அந்தக் குலம் முழுவதும் அழுக்காகும்,
தோஷமுடையதாக ஆகிவிடும்॥

63— ஆஸுரம் முதலான தகாத விவாஹங்களாலும்,
ஜாதகர்மா முதலான கர்மாக்களைச் செய்யாததாலும்,
வேதாத்யயனம், ப்ராம்மணபூஜை இவைகளைச் செய்
யாததாலும் ப்ரஸித்தி பெற்ற குலம் கூட அழிவுபடும்||
64— சித்திரம் வரைதல் முதலான சில்பத்தொழிலாலும், வட்
டிக்குப் பணம் கொடுப்பதாலும், சூத்ரஸ்த்ரீயா
லும், பசுக்கள் குதிரைகள் வாஹனங்கள் இவைகளை
விற்பதாலும் (வியாபாரம்) விவசாயம் ராஜஸே
65— வை இவைகளாலும்|| தகாதவர்களுக்கு யாகாதி
வைதிககர்மாக்களைச் செய்விப்பதாலும், சாஸ்
திரீயகர்மாக்களுக்கு பலனில்லை என்ற நாஸ்திகத்
தாலும், வேதாத்யயனமில்லாமையாலும் குலங்
கள் சீக்கிரம் அழிவுபடும்|| (அழிவு அடையும்)
66— தனம் குறைவாக உள்ள குலங்களாக இருந்த போ
திலும், வேதத்தின் அத்யயனம், அர்த்தஞானம்
கர்மானுஷ்டானம் இவைகளில் ஈடுபட்டிருக்கு
மேயானால் அந்த குலங்கள் உத்தம குலங்களில்
எண்ணப்படும் மேலான புகழையும் ஸம்பாதித்து
க்கொடுக்கும்||

சில சூத்ரக்காரர்களுக்கு

67 — கிருஹஸ்தன் ஸமாவர்த்தனம் செய்த அக்னியில் (ஔபாஸநாக்னியில்) கிருஹ்ய ஸூத்ரத்தில் சொல்லப்பட்டுள்ள பாகயஜ்ஞம் மேலான கர்மாக்களையும், வைச்வதேவத்தையும் மேற்படி செய்யவேண்டும், தினந்தோறும் சமையலும் செய்யவேண்டும்॥

68 — கிருஹஸ்தனுக்கு ஹிம்ஸாஸ்தானங்கள் ஐந்து, அடுப்பு, அம்மி, துடப்பம், உரல் உலக்கை, ஜலபாத்ரம் இவைகளை உபயோகிப்பதால் பாபம் ஏற்படுகிறது॥

69 — முறையாக அந்த ஹிம்ஸா பாபங்கள் நிவ்ருத்தியாவதற்கு தினந்தோறும் பஞ்ச மஹாயக்ஞங்கள் மஹரிஷிகளால் கிருஹஸ்தனுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன॥

70 — அத்யயனம் அத்யாபனம் ப்ரஹ்ம எனவும், பித்ரு எனவும் தர்ப்பணம், அக்னியில் ஹோமம் செய்வது தேவ எனவும், பூதபலி பூத எனவும், அதிதி பூஜை மனுஷ்ய எனவும்॥

71 — கிருஹஸ்தன் இந்த பஞ்ச மஹாயக்ஞங்களை விடாமல் யதாசக்தி செய்தால் (தினந்தோறும்) ஹிம்ஸா தோஷம் நிவ்ருத்தியாகும்॥

72— எந்த கிரஹஸ்தன், தேவர்கள், அதிதி, காப்பாற்ற வேண்டிய குடும்பத்தினர்கள், பித்ருக்கள், தான், இந்த ஐந்து பேர்களுக்கும் அன்னம் கொடுக்கவில்லையோ அவன் உயிருடனிருந்தாலும் இறந்தவனுக்கொப்பானவன்॥

73— இவர் அஹுதம், ஹுதம், ப்ரஹுதம், ப்ராம்ஹ்யம் ஹுதம், ப்ராசிதம், என்று ஐந்து மஹாயக்ஞங்களை

74— என்று கூறுகிறார்கள்॥ அதாவது— அஹுதம் ஜபயக்ஞமும், ஹுதம் தேவயக்ஞமும், ப்ரஹுதம் பூதபலி, ப்ராம்ஹ்யம் ஹுதம், அதிதி பூஜையாகிய மனுஷ்யயக்ஞமும், ப்ராசிதம் பித்ரு தர்ப்பணம், என்பவை ஆகும்॥

75— தாரித்ரியத்தால் அதிதி பூஜை முதலியன செய்ய முடியாவிட்டாலும், ப்ரம்மயக்ஞத்தையும் ஹோமமாகிற தேவயக்ஞத்தையும் தினந்தோறும் விடாமல் செய்ய வேண்டும், தெய்வயக்ஞமாகிற ~~ஹோ~~ ஹோமத்தைச் செய்பவன் இந்த உலகத்தைக் காப்பாற்றுகிறான்॥

76— எப்படியெனில்— அக்நியில் நன்கு ஹோமம்

செய்யப்பட்ட ஆஹுதியானது ஆதித்யனை அடை-
கிறது, ஆதித்யனால் மழை உண்டாகிறது, மழையால்
அன்னமும் அதனால் பிரஜைகளும் உண்டாகின்றனர்॥
77 எல்லா பிராணிகளும் எவ்விதம் மேல்காற்றை
பற்றி ஜீவிக்கிறார்களோ அவ்விதமே கிருஹஸ்
தனை ஆச்ரயித்து மற்ற ஆச்ரமிகள் ஜீவிக்கிறார்கள்॥
78 மற்ற ஆச்ரமிகள், வேதார்த்தவ்யாக்யானத்தாலும்
அன்னதானத்தாலும் கிருஹஸ்தனால் காப்பாற்றப்
படுவதால் கிருஹஸ்தாச்ரமியே மேலானவன்॥
79 அழிவற்ற ஸ்வர்க்கஸுகத்தை விரும்புபவனும், இ
ந்த லோகத்தில் ஸ்திரீஸுகம் நல்ல போஜனங்க
ளை விரும்புபவனும் எவ்விதத்திலாவது கிரு
ஹஸ்தாச்ரமத்தை அனுஷ்டிக்க வேண்டும்,
அந்த கிருஹஸ்தாச்ரமம் இந்திரிய நியமமில்லாத
வர்களால் அனுஷ்டிப்பது கஷ்டம்॥
80 ரிஷிகள் பித்ருக்கள் தேவர்கள், பிராணிகள், அ
திதிகள் இவர்கள் எல்லோரும் குடும்பிகளான கிரு
ஹஸ்தர்களிடமிருந்து ப்ரயோஜனத்தை எதிர்
பார்க்கிறார்கள், ஆகையால் அறிவுள்ளவன

கிருஹஸ்தன் அவர்களுக்கு வேண்டிய
காரியத்தை நிறைவேற்ற வேண்டும்॥
81— அத்யயனத்தால் ரிஷிகளையும், ஹோமங்களால்
தேவர்களையும், சிராத்தங்களால் பிதுருக்களை
யும், அன்னத்தால் மனுஷ்யர்களையும், பலி
யால் பூதங்களையும் பூஜிக்க வேண்டும்
82— பிதுருக்களின் திருப்திக்காக ஒவ்வொருநாளும் அன்
னத்தினாலாவது ஜலத்தினாலாவது மூலம் பால்
கிழங்கு பழங்களாலும் சிராத்தம் செய்ய வேண்டும்॥
83— பஞ்சமகாயக்ஞங்களுக்குட்பட்ட பித்ரு திருப்திக்
காக ஒரு பிராமணனையாவது போஜனம் செய்விக்க
வேண்டும், ஆனால் வைச்வதேவத்திற்காக இல்லை
84— ஸகல தேவதைகளையும் உத்தேசித்து செய்யும் கர்மா
ஆனபடியால் வைச்வதேவமென்பதாகும், ஆவஸத்
யம் என்ற அக்னியில் மேலே சொல்லப்போகும்
தேவதைகளைக் குறித்து விதிப்படி த்விஜன்
தினந்தோறும் ஹோமம் செய்ய வேண்டும்॥
85— அக்னி, ஸோமன், அக்னீஷோமர்கள், விச
86— வேதேவர்கள், தன்வந்திரி, குஹூ, அனுமதி,

ஹரஞாபதி. திரயோவா பகேதிஷ், அத நிவ்வாலிட்டகித்;
87 — இவ்விதம் தேவதைகளைக் குறித்து ஹோமம் செய்து
கிழக்கு தொடங்கி நின்று திசைகளைக் குறித்து
பலி போடவேண்டும், மருத்துக்களுக்கென்று வாசலி
(திவ) ஐம்; ஹோமேப்ய: என்று பாவத்திரும், வனஸ்பதிப்ய: என்று
88 ஷெல்லைக்குள்ளும், இ சனாபுத்ராயாய புஸ்னிக்கி
ஸ்வர்க்ரியை, என்றும், நிருதிக்கில் அவுதமையரா
திர்ரூபத்தக்கராய, என்றும், கிழக்குதிசைப்பக்கமே
89 — லாஸ் ப்ரஸ்பதயே என்றும் ஊட்டலேப்யோ தேவேப்ய:
90 — என்றும் ப்ருதிவீகாசத்திரும், திவா சரேப்ய: பூதேப்
91 — யோ ரிப்ய: பூதேப்ய: என்றும் மேல்முடுயல்லாவாத்த
தயே என்றும் பலிபோடவேண்டும், யக்ஞோபவீதா
தெற்கில் பித்ருக்களுக்கு ஸ்வதா என்றும் போடவும்॥
92 — நாய்களுக்கும், பதிதர்களுக்கும், சண்டாளர்களுக்கும்,
பாபரோகிகளுக்கும், காக்கைகளுக்கும், புழுக்களுக்கு
93 — ம் மெதுவாக பூமியில் பலி போடவேண்டும். இவ்விதம் தர்
மபூர்வமான தினத்தோறும் அப்ரமணிகளுக்கும்
பூஜை செய்கிறவனை அவன்பாகாசமானத்திற்கு
ன் ஸ்வர்க்கலோகத்தை பரம்பரையாக அடைகிறான்॥

94— இவ்வாறு பலகார்யங்களைச் செய்துவிட்டு அதிதிக்கு
கொடுப்பது போஜனம் செய்விக்கவேண்டும்; வேறும்
பயத்திக்கும் [illegible] பண்ணு போடவேண்டும்
95— இருக்கிறதைப் போஜனம் செய்தால் உண்டா
னபலனே, கிருஹஸ்தன் பண்ணுபோகிறதால் அடை
96— கிறான்॥ ஆசனமாக போஜனம் செய்விக்க வேண்டா
மென்றும் வேதத்தில் [illegible] யாருடைய
ப்ராமணனுக்கு திக்கு) வாதிப்படி எதுவானாலும் மானமல்லது
நுவைத்து கொடுக்கவேண்டும்॥
97— வேதாத்யயனம் செய்தவனாய் அனுஷ்டானம்
இவைகளில்லாத ப்ராமணனுக்கு, பக்ஷிக்கும் தேவ
ர்களுக்கு இவைகளை [illegible] கொடுக்கிறதா
னம், அறியாமையால் செய்வது, சாம்பலில் செ
ய்த ஹோமம் போல வீண்; பலனைத் தராது॥
98— வேதத்யயனமில்லாதவனான ப்ராமணனை
க்காத்துக் கொடுக்கும் [illegible]
ராதவனாதிகள் [illegible] போஜனம் [illegible]
[illegible] இவைகளில் [illegible]
ஷம்॥

99 — வீட்டுக்கு வந்த அதிதிக்கு யதாசக்தி ஆஸனம்
ஜலம் அன்னம் இவைகளை முறைப்படி உபசரித்துக்
கொடுக்கவேண்டும்॥

100 — சிலோஞ்சமென்கிற ஏழ்மையான ஜீவனத்துடனும்
பஞ்சாக்னிகளில் ஹோமம் செய்துகொண்டிருந்த
போதிலும் வந்த அதிதிக்கு உபசாரம் செய்யாவிட்டா
ல் அதிதி உபசாரம் செய்யாதவனுடைய புண்ணியத்தை
யெல்லாம் கொண்டு போகிறான்॥

101 — வந்த அதிதிக்கு போஜனம் செய்விக்க சக்தியில்லா
விட்டாலும் உட்கார படுக்கப் பாய், இனிய வார்த்தை
(கள்) கால் அலம்ப ஜலம் ப்ரிய வசனம் இவைகள்
தார்மிகர்களுடைய க்ருஹத்தில் எக்கால
மும், அதிதிக்கு இல்லாமல் போகக்கூடாது (கொடுக்கவேண்டும்)

102 — ராத்திரி வீட்டில் ஒரு நாள் தங்கும்
பிராமணனுக்கு அதிதி என்று பெயர். அநித்தியமாக
அவன் அந்த வீட்டில் தங்குவதால் அவன் அதிதியென்று
சொல்லப்படுகிறது॥

103 — ஒரே கிராமத்தில் வசிப்பவனும்
பரிஹாஸங்களைச் செய்து கொண்டு போகிறவனும் பார்
யை அக்னியுடன் கூடவே தேவகாலத்தில் வந்தாலும் அவ

அதிதிகளைக்கவனிப்பவர்கள்॥

104 — அறிவில்லாத எந்த கிரஹஸ்தர்கள் பரான்னபோ
ஜனத்திற்கு ஆசைப்பட்டு கிராமங்களுக்கு யாத்ரை
செய்கிறார்களோ. அவர்கள் இறந்தபிறகு அன்ன
மிட்டவர்களுக்கு பசுவாக ஆவார்கள்॥

105 — ஸூர்யாஸ்தமனத்திற்கு பிறகு வைச்வதேவ
காலத்திலோ, அல்லது சாப்பாட்டு நேரமோ,
தன்னிடம் திரும்பிப் போகமுடியாமல் வந்த அதிதிக்
கிரஹஸ்தன் அவச்யம் போஜனம் செய்விக்க
வேண்டும். அதிதி போஜனம் செய்யாமல் கிருஹத்தில்

106 — வஸிக்கக்கூடாது॥ நல்ல நெய்யாயினும் இவைக
ளை அதிதி வேண்டாமென்று மறுத்தாலும் அதை
சாப்பிடக்கூடாது, அதிதி பூஜை தனம், புகழ், ஆ
யுள், ஸ்வர்க்கம் இவைகளைக் கொடுக்கும்॥

107 — ஆஸனம், கால் அலம்ப இடம், படுக்கை, விருப்பப்
பதில், உபசாரம், இவைகள், ஒரே ஸமயத்தில் ப
ல அதிதிகள் வந்தாலும் அவரவர்களுடைய யோக்
யதைக்குத் தகுந்தபடி செய்ய வேண்டியது.
ஒரேமாதிரியாகச் செய்யக்கூடாது॥

108— வைத்த தெய்வம் ஆனபடியாலே வேறொரு சத்திரத்தா
ல் அவனுக்கு திருமெய்ப்பும் சமையல் செய்ய அன்ன
மாகிக்க வேண்டும், திருப்பணியே தொண்டு
109— வையாதே பரமனைத் தன்னுடைய போகன
லாபத்திற்காக சில கோத்ரங்கள் (தன்னுடைய)
ச்சேர்வல்லக் கிடைத்து, தொண்டில் அவன்தான்
வாழ்த்து செய்து அன்னத்தை ச்சாப்பிட்டவன் என்று
110— பலர் புத்ரர்கள் கூறுகிறார்கள்॥ பரமனை
யடைகிறதற்கு திவ்ய ப்ரியன் தேவரானவர்களும்.
லோகத்துக்கு திகழும் தேவரானவர்கள் அழித்தபாத
111— மட்டார்கள்॥ க்ஷத்ரியர்கள் யாதவர் தொண்டில்
அதிதியாக வந்தால் பரமனை ஆராய்ந்து பட்டதும்
அவனுக்கு வைத்து கொண்டு போகம் செய்து பல
112— லாபம்॥ பரமனை திருப்பத்திற்கு நேர வைத்து
கொண்டு அதிதி முறையாக வந்தால் அவர்களுக்கு
தயவை தன்னிட்டு வைக்கிறார் ஆனால் பொது
113— நம் செய்கைக்கு॥ தன் கிருத்திக்கு பரிதி
புடைவந்தவர்கள் தேவரானவர்களுக்கு வந்தாத
திவ்ய போகம் அவர் செய்து பார்வைக்கொண்டு

போஜனம் அளிக்கவேண்டும்॥

114 — ⊕ புதிதாகக் கல்யாணமான பெண்கள், குமரிப் பெண், பெண்கள், கர்ப்பிணிகள், ரோகிகள், இவர்களுக்கு அதிதி போஜனத்திற்கு முன்பே ஸந்தேகமின்றிப் போஜனம் செய்விக்கலாம்॥

115 — இவர்களுக்கு முன்பு அதிதிக்குக் கொடுக்காமல் வேலைக்காரர்கள் வரையில் போஜனம் செய்வதைக் காலன் என்னறியாமையால் தான் இறந்தபின் தெரிந்துகொள்ளுகிறானோ அவன் மரணத்திற்குப் பிறகு நாய் கழுகுகளால் தின்னப்படுவதை அறிவதில்லை॥

116 — பிராமண அதிதிகள், தன் ஞாதிகள், தன் வேலைக்காரர்கள் சாப்பிட்டபிறகு மீதியுள்ளதைத் தம்பதிகள் புசிக்கவேண்டும்॥

117 — தேவர்கள், ரிஷிக்கள், மனிதர்கள், பிதிருக்கள், கிருக தேவதைகள் இவர்களைப் பூஜித்து (பஞ்சமஹாயக்ஞம் அனுஷ்டித்து) தேவபூஜை செய்தபிறகு மீதியை கிருஹஸ்தன் சாப்பிடவேண்டும்॥

118 — ⊕ எவன் பஞ்சமஹாயக்ஞம் செய்யாமல் தனக்கு போஜனத்திற்காக பாகம் செய்து போஜனம் செய்கிறானோ அவன்

பாபத்தைப் போக்குபவனாக ஆகிறான். சாஸ்த்ரக்காரர்களால்
உபதேச போதனை பாதிக்கப்பட்டிருப்பதால்॥

119 — க்ஷத்ரிய அரசன், வைச்யன், பாரதன் ஹனனம் செய்தவன்,
பாப்பாத்தீ, கோ, மாமனார், மாமா, இந்த ஐவரையும்
க்கும் அகால மரணத்திற்கு ஹேதுவானால் மூன்று பர்க்ருச்ரம்
120 — செய்ய வேண்டும்॥ ஆசார்யன், ராஜாவுக்கும் ஸ்த்ரீக்கும்
கும் அகால மரணத்திற்கு ஹேதுவானால் யாகசாலையில் வந்தால்
பட்டரும் ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும்॥
121 — ஸாயுஜ்ய கைவல்யம் செய்த அன்னத்தை பகதிரக்ஷ்
நியில்லாமல் பலிபோட வேண்டும்। அந்தவிதமே
வம் காலமாக இவைகளிலும் பாதிக்கப்படுகின்
றது॥
122 - அவ்வாறு பிராமணத்திரும் அமாவாஸ்யையன்று
பண்டாதிகளுக்கு கர்மாவைச் செய்து பாதி மாஸிக
123 - ஸ்ராத்த கர்மாவைச் செய்ய வேண்டும்॥ அந்தமாஸிக
ஸ்ராத்தம் அன்வாஹார்யம் எனப்படும்; அந்த
ஸ்ராத்தம் சாஸ்த்ரோக்த மார்க்கத்தால் சிரத்தையுட
124 — ன் செய்ய வேண்டும்॥ தேவ பராமணேஷு ப்ரயத்
னே அந்த ஸ்ராத்தத்தில் போஜனம் செய்விக்க

துக்கவர்க்கங்களும், சுகவர்க்கங்களும், எத்தனையோ
கள், எவ்வித போஜனம், அவைகளையெல்லாம்
125— சுருக்கினேன்॥ ஸ்ராத்தத்தில் விச்வேதேவஸ்தான
த்தில் இரண்டு பிராமணர்கள், பித்ருஸ்தானத்தில் மூன்
று பேர்கள், அல்லது விச்வேதேவஸ்தானத்தில் ஒரு
வர், பித்ருஸ்தானத்தில் ஒருவர் என்று போஜனம்
செய்விக்க வேண்டும், எவ்வளவு ஐச்வர்யவா
னாக இருந்தபோதிலும் இதைவிட ப்ராமணர்களை
வைத்து விஸ்தாரம் (அதிகமானவர்கள்) கூடாது॥
126— ஏனெனில், வஸ்திராதி உபசாரம், இடம், காலம்,
சுத்தி, யோக்யமான பிராமணலாபம், இந்த
ஐந்தையும் விஸ்தாரம் கெடுக்கிறது; ஆகையால், அதை
யால் விஸ்தாரம் கூடாது॥
127— இறந்த பிதா முதலானவர்களைக் குறித்து,
(அவர்களுடைய திருப்திக்காக;) செய்யப்படுவது
பித்ர்யம் என்று சொல்லப்படும்; அது ஸ்ம்ருதியில்
கூறப்பட்டுள்ளது, அதை அமாவாஸ்யை முதலா
ன காலங்களில் செய்ய வேண்டும், அவ்விதம் செ
ய்தால் நல்ல கீர்த்தி, புத்ர பௌத்ராதி ஸம்ருத்தி,

பலன்
தானதான்யாதி ஸம்பத்து கீர்த்திகளுக்கு கிடைக்கும் ||

128 — தேவர்கள், பிதுருக்கள் இவர்களைக் குறித்துச் செய்யும்
கர்மாக்களில், வேதாத்யயனம் ஸதாசாரம், நல்ல
குலம் இவைகளுடைய ப்ராமணனுக்கே போஜனாதி
ஸமர்ப்பிக்கவேண்டும், இவ்வித யோக்யருக்
குக் கொடுப்பது அதிக பலனைக் கொடுக்கும் ||

129 — தேவ பித்ரு கார்யங்களில் மேற்கூறிய யோக்யமான
ஒருவனை போஜனம் செய்வித்தாலே போ
தும், அதிக பலன் கிடைக்கும்; மேற்கூறிய யோக்யதை
யில்லாத அநேகம் பேர்களுக்கு போஜனம் செய்வித்தா
லும் பலனில்லை ||

130 — ச்ராத்த ப்ராமணவரணத்தில்
அவர் அத்யயன ஸதாசாரமுள்ளவரா நல்ல குலமா
என்று விசாரித்தறிய வேண்டும், அவ்வித ப்ராம
ணனைப் பார்த்து அவருக்குக் கொடுப்பது
அதிக பலன் கொடுப்பதால் அவர் அதிதியாகிறார் ||

131 — அத்யயனம் செய்யாத பத்து லக்ஷம் ப்ராமணர்
களுக்குச் செய்விக்கும் போஜன பலனை ஒருவே
தவித்தினுடைய போஜனம்; (பலனைக்) கொடுக்
கிறது ||

தர்க்கவாக்கியங்கள், திருஷ்டாந்தங்கள், எத்தனையோ
கள், எவ்வித பொருளை, அவைகளெல்லாம்
125— கூறுகின்றன॥ சிராத்தத்தில் விச்வேதேவஸ்தான
த்தில் இரண்டு பிராமணர்கள், பித்ருஸ்தானத்தில் மூன்
று பேர்கள், அல்லது விச்வேதேவஸ்தானத்தில் ஒரு
வர், பித்ருஸ்தானத்தில் ஒருவர் என்று போஜனம்
செய்விக்க வேண்டும், எவ்வளவு ஐச்வர்யவா
னாக இருந்தபோதிலும் இந்த பிராமணர்களை
[illegible] விஸ்தாரம் (அதிகமானவர்களை) கூடாது॥
126— ஏனெனில், வஸ்த்ராதி உபசாரம், இடம், காலம்,
சுத்தி, யோக்யமான பிராமணலாபம், இந்த
ஐந்தையும் விஸ்தாரம் கெடுத்துவிடும், ஆகை
யால் விஸ்தாரம் கூடாது॥
127— இறந்த பிதா முதலான முன்னோர்களைக்குறித்து,
(அவர்களுடைய திருப்திக்காக;) செய்யப்படுவது
பித்ர்யம் என்று சொல்லப்படும், அது ஸ்மிருதியில்
கூறப்பட்டுள்ளது, அதை அமாவாஸ்யை முதலா
ன காலங்களில் செய்ய வேண்டும், அவ்விதமே
ய்தால் [illegible] [illegible] ஸந்ததி,

பலன்
தனதான்யாதி ஸம்பத்து கீர்த்தி ஆயுள் கிடைக்கும் ||

128— தேவர்கள், பிதுருக்கள் இவர்களைக் குறித்துச் செய்யும் கர்மாக்களில், வேதாத்யயனம் ஸதாசாரம், நல்ல குலம் இவைகளுடைய ப்ராம்மணனுக்கே போஜனாதி களைச் செய்விக்க வேண்டும், இவ்விதம் யோக்யனுக் குக் கொடுப்பது அதிக பலனைக் கொடுக்கும் ||

129— தேவ பித்ரு கார்யங்களில் மேற் கூறிய யோக்யமான ஒவ்வொருவனை போஜனம் செய்வித்தாலே போ தும், அதிக பலன் கிடைக்கும்; மேற் கூறிய யோக்யதை யில்லாத அநேகம் பேர்களுக்கு போஜனம் செய்வித்தா லும் பலனில்லை ||

130— தூரத்து ப்ராம்மணனாயினும் அவர் அத்யயன ஸதாசாரமுள்ளவரா நல்லவரா என்று விசாரித்தறிய வேண்டும், அவ்விதம் ப்ராம் மணனே ஸத்பாத்திரம்; அவனுக்குக் கொடுப்பது அதிக பலன் கொடுப்பதால் அவர் அதிதியாகிறார் ||

131— அத்யயனம் செய்யாத பத்து லக்ஷம் ப்ராம்மணர் களுக்குச் செய்விக்கும் போஜன பலனை ஒரு வே தவித்துடைய போஜனம் (பலனைக்) கொடுக் கிறது ||

132— வேதவித்தையுள்ளவர்களுக்கே ஹவ்யகவ்யங்
கள் (பித்ருக்களின்) கொடுக்கவேண்டும், அந்தவி
த்தையல்லாதவர்களுக்குக் கொடுத்தால், ரத்தம்
தோய்ந்தகையை ரக்தத்தால் அலம்புதல் போல.
133— பலன் கிடைப்பு [illegible] // வேதவித்தையல்லாத ப்ரா
மணனுக்கு ஸ்ராத்தபோஜனம் செய்வித்த கர்த்
தா, மரணத்திற்குப்பின் யமலோகத்தில் மண்
ணீத்தத்தில் டேன் எத்தனை கபளம் அன்னம் போ
ஜனம் செய்தானோ அத்தனை காய்ந்த சூலங்
களை விழுங்க வேண்டியிருக்கும் //
134— ப்ராமணர்களில் சிலர் ஆத்மஞானிகள், சி
லர் தபஸ்விகள், சிலர் தபஸ் அத்யயனம் உள்ள
135— வர்கள், சிலர் யாகாதிகர்மநிஷ்டர்கள், // இவ்வித
நால்வர்களில், பித்ருக்களுத் தேசித்த போ
ஜனம் ஆத்மஞானிக்கே முக்கியமாய்
கொடுக்கவேண்டும், தேவர்களுத் தேசித்
த போஜனம் நால்வருக்கும் உரியதுபோல் கொ
டுக்கலாம் //

136— அநுவாதமுடையதா [illegible] த்யயனம் செய்ய

137— வைஸ்ய புத்ரன் அத்யயனம் செய்திருக்கிறான்,
புத்ரன் அத்யயனம் செய்யவில்லை பிதா அத்யய
னம் செய்திருக்கிறார், இவர்களில் பிதா அத்ய மேலானவர்
யனம் செய்து அத்யயனம் செய்யாத புத்ர
னே சிராத்த போஜனத்திற்கு மேல், அத்யயனம்
செய்த புத்ரனுக்கு அவன் படித்த வேதத்திற்காக
மரியாதை செய்ய வேண்டும்॥
138. சிராத்தத்தில் ஸ்நேகிதனை போஜனம் செய்வி
க்கக்கூடாது, ஸ்நேகிதனை பணத்தால் வெகுமா
னத்தில் திருப்தி செய்விக்கலாம், சிராத்தத்தில்
ஸ்நேகிதனும் விரோதியும் கூடாது॥
139— எவனுடைய சிராத்தாதிகளில் ஸ்நேகிதனை மு
ன்னிட்டதோ, அவனுடைய ஹவ்யகவ்யங்க
ள் பரலோகத்தில் பலன் கொடுக்காது॥
140— எவன் அறியாமையால் சிராத்த போஜன
ம் செய்வித்து எவனுடைய ஸ்நேகத்தை
ஸம்பாதிக்கிறானோ, அந்த பேயவா மனுஷ
141— க்கு ஸ்வர்க்கம் கிடையாது॥ நேர., திதி
முன்னிட்டுச் செய்யும் சிராத்தத்தில் கொடுக்க
கொடுக்கு

தக்ஷிணை கொடாது தக்ஷிணை பைசாசிகர் என
று மறு ஜென்மாவை அடைகிறார்கள், அத்த
க்ஷிணை இங்கேயே தான் பரலோகம் செல்லாது.
கிடைப்பது வேறுவீட்டுக்குச் செல்லாது போ
142— ல்॥ எவ்வாறும் உலக்ஷ்மியில்லாமைத் துவாதை
நோக்காதோ அவ்வாறு மேனைவதிகணிவ்வாறு
பராமணனுக்கு இராந்த போஜனம் செய்வித்து
வன்பலனையடையவடைடான் (கிளையாத
ச்ராத்தம் செய்தால், அவனுக்கு ஆயுள், புத்ர
ஜை, தனம், வித்யை, ஐஸ்வர்யம், மோக்ஷம்,
சுகம், ராஜ்யம், இவைகளெல்லாம் திருப்தியடை
ந்த பிதுருக்கள் கொடுக்கிறார்கள்) ஸாதிப்பு
143— வேதவாக்குக்கு தக்ஷிணை கொடுத்துச் செய்த
ச்ராத்தம் செய்தவனுக்கும் போக்தாவுக்கும்
இவ்வுலகிலும் மறு லகிலும் பலனை அளிக்கும்॥
144— வித்வானான பிராம்மணன் கிடைக்காவிடில்
குணவானான மித்ரனை ச்ராத்தத்தில் வரிக்கலாம்,
வித்வானுடைய ஸ்வ ஜோதிடனாய், வரோதியா
ன் ச்ராத்தத்தில் போஜனம் பரலோகத்திற்கு உதவா
து॥

145— ருக்வேதம் யஜுர் வேதம் ஸாமவேதம் இவைக
ளில் ஏதாவது ஒரு வேதம் ஸாங்கமாக அத்யயன
ம் செய்த ப்ராமணனை வரிப்பது நல்லது।

146— ஸ்ரோத்ரிய வேதங்களில் ஒருவர் எவனுடைய சி
ராத்தத்தில் உபசாரத்துடன் போஜனம் செய்வி
க்கப்படுகிறாரோ அந்த கர்த்தாவினுடைய பித்
ராதி ஏழு தலைமுறைவரை த்ருப்தியடை
வார்கள்॥

147— இதுவரை ஸ்ராத்த போஜனத்தில்
முக்யமாக சொல்லப்பட்டது, அதுவே யாவதால்
அடுத்தபடியாக ஸாதுக்கள் அநுகல்பத்தை
யைக் கூறுகிறேன்॥

148— மாமா, மாதாமஹர், மருமான், மாமனார், [illegible],
தௌஹித்ரன், மாப்பிள்ளை, பந்து அத்தான் மு
தலானவர்களை, ருத்விக், சிஷ்யன், இந்தப் பத்துப்
பேர்களை போஜனம் செய்விக்கலாம் ([illegible])।

149— தர்மத்தை அறிந்தவன் தெய்வ கார்யத்தில்
ப்ராமணனை பரீக்ஷிக்க வேண்டாம், பித்ரு கார்ய
த்தில் அதிகமாக பரீக்ஷை (யோக்யதையை) செய்ய
வேண்டும் ([illegible] பரீக்ஷை)॥

150— திருடன், பஞ்சமஹாபாதகங்களில் ஒன்
றைச் செய்தவன், நபும்ஸகன், நாஸ்திகன்,
இவர்களை தேவபித்ருகார்யங்களுக்குத்
தகாதவரா மனைவர்கள் என்று மனு கூறினார் ॥
151— வேதம் படிக்காத ப்ரம்மசாரி, சர்மரோகி,
சூதாட்டக்காரன், அதிகமான பேர்களுக்கு
வைதிக கார்யங்களைச் செய்து வைப்பவன் இவர்
கள் சிராத்த போஜனத்திற்கு தகாதவர்கள் ॥
152— வைத்யன், பணத்திற்காக தேவபூஜை தொழி
ல் செய்பவன், மாம்ஸம் விற்பவன், வ்யாபா
ரத்தால் ஜீவிப்பவன், இவர்கள் தேவபித்ரு
கார்யங்களுக்குத் தகாதவர்கள் ॥
153— ஒரு கிராமத்திற்கோ அரசனுக்கோ ஏவல் வே
லை செய்பவன், சொட்டை நகமுள்ளவன், கருத்
த பல்லுடையவன், குருவுக்கு விரோதமா
ன (நடத்தை) ஆசாரமுள்ளவன், அக்நிஹோத்ரம் செய்
யாதவன், வட்டியால் ஜீவிப்பவன், ॥
154— க்ஷயரோகமுள்ளவன், ஜீவனத்திற்காக பசு
ரக்ஷணம் செய்பவன், (ஆடு மாடுகள்)
மேய்ப்பவன்

ப்ரிவேத்தா, பரிவித்தி, வைசுதேவம் செய்யா
தவன், பராமன்ன, வேத, தேவதை மொழிபவன், ஸ
155 — ஸோமபானத்தை நிந்திப்பவன், தீர்த்தமை
செய்து நிந்திப்பவன், ப்ரதிக்ஷணம் செய்து பலம்
மசலி, யதிகள், பதிவ்ரதாக ஸ்த்ரீகளை வ
பலாத்காரம் செய்து கொண்டவன், விவாஹமான
ஸ்திரீயை பலாத்காரம் செய்து பார்த்தவன், தேவ
தோஷமொழிபவன், பத்தியான ஸூர்யநமஸ்கா
156 — கத்தில் வைத்திருப்பவன், பணத்தை வாங்கிக்கொ
ண்டு வேதம் போதிப்பவன், பணம் பெற்று வேத
ம் படித்தவன், வியாகரணத்தில் சாஸ்திரத்தில்
சூத்ரனிடமிருந்து படித்தவன் சூத்ரனுக்கு உப
தேசித்தவன், கடுமையாகப் பேசுபவன், கோட
157 — ள் கோளன், காரணமில்லாமல் மாதா
பிதா குரு இவர்களுக்கு சிச்ருஷை செய்யாதவ
ன், மஹாபாதகம் செய்து பதிதர்களோடு
அத்யயனம் விவாஹம் போன்ற ஸம்
158 — பந்தம் செய்பவன், வீட்டுக்கு தீ வைப்பவன்
விஷம் கொடுப்பவன், கொள்ளையடிப்

அன்னத்தைப் புசிப்பவன், கிளைகளுடைய
வும், (பார்த்தா ஜீவாக்கும் யோகேசுவரருக்குப்
பாரத்திவன் என்டன், பார்த்தா இறந்து யோகேசுவ
ரனுக்குப் பொறுத்தவன் கோணகன்) । வேதமலனை
வாழ்பவன், தேவனியைப் பெறுப்பயாதனை செய்
பவன், ஸ்துதி பாடுபவன், எண்ணெயாட்டு
159- பவன், பொய்ஸாக்ஷி பேசுபவன், ।। மாதாவோடு
வைராக்கியமாகவோ சாஸ்திரவிரூபமாகவோ
விவாதம் செய்பவன், தனக்கு கொடுக்கப்பட
உன சூதாட்டம் செய்பவன், மதுபானம் செய்
பவன், கெட்டவோக்கி, பாபியே।। என்று ஸத்
தேவத்திற்கு கெடானவன், வைணிவேதத்திற்
க்கு தர்ப்பணம் செய்பவன், தலவஸ்துக்களை வாங்
160- பவன், ।। வில் அம்புகளைச் செய்பவன், மேத்த
வர்கல்யாணமாகாமலிருக்க இளையவனுக்
கல்யாணம் செய்து கொண்டவன், மித்ர
னுக்கு துரோகம் செய்பவன், சூதாட்டம் நட
த்துபவன், புத்ரனிடம் வேதம்படித்தவன், ।।
161- காதினைவலியப் உன்னவன், கொட்டைமில்ரோ

குஷ்டமுள்ளவன், வெண் குஷ்டமுள்ளவன், கோள்
சொல்பவன், புத்தியில்லாதவன் (பைத்தியம்) குரு
162- டன், வேதத்தை நிந்திப்பவன், ॥ யானை, பசு, குதி
ரை, ஒட்டகம் இவைகளைப் பழக்கிப் பழக்குபவன்,
ஜ்யோதிஷத்தால் சொல்லி ஜீவிப்பவன், கூண்டில
டைத்து பக்ஷி வளர்ப்பவன், யுத்தத்திற்காக ஆ
163- யுதப் பயிற்சி செய்விப்பவன், ॥ நதி பிரவாஹத்
தை அணைகட்டி வேறு இடத்திற்கு ஜலத்தைக்
கொண்டு செல்பவன், ஜலத்தைத் தேக்கி வைப்
பவன், வாஸ்து சாஸ்திரத்தை (வீடுகட்டுமு
றை) ஜீவனத்திற்காக கற்பிப்பவன், தூதன்,
பணத்திற்காக மரம் நடுகிறவன், ॥
164- விளையாட்டிற்காக நாய் வளர்ப்பவன், கழு
கு வியாபாரம் செய்பவன், கன்னிகையை
க் கெடுப்பவன், ஸதா பிராணிஹிம்சை செய்
பவன், சூத்திரனை அண்டிப் பிழைப்பவன், கணதே
வதைகளைக் குறித்து யாகம் செய்விப்பவன், ॥
165- ஆசாரமில்லாதவன், தர்மகார்யங்களில் உத்ஸா
ஸாஹமில்லாதவன், நிரந்தரம் யாசகம்

ஹவ்யம் - தேவர்களுக்கு கொடுக்கும் அன்னம் -
கவ்யம் - பிதிருக்களுக்கு கொடுக்கும் அன்னம்

செய்து பாணைத் தன் புசிக்குபவன், ப்ராமண
னாயினும் வியாபாரம் செய்து பிழைப்பவன், வி
யாதியால் கால் வீங்கியவன் (மந்துக்கால்), ந
ல்லோர்களுடைய நிந்தைக்கு பாத்திர
166 — மானவன், ॥ ஆடு எருமைகளை வைத்
து ஜீவிப்பவன், விவாஹமான பெண்ணை விவா
ஹம் செய்துகொண்டவன், பணத்திற்காக பி
167 — ணம் சுமப்பவன், ॥ இதுவரை கூறப்பட்ட, பா
பாசாரமுள்ளவர்களும், பங்க்தி போஜனத்தி
ற்கு யோக்யதையில்லாதவர்களுமான
கெட்ட ப்ராமணர்களை, சாஸ்திரமறி
ந்த ப்ராமண ஸ்ரேஷ்டன் தேவபிதிர்கர்
மாக்களில் விலக்க வேண்டும் ॥
168 — வேதாத்யயனம் செய்யாத ப்ராமணன் புல்லி
லெரிந்த அக்கினியைப்போல, அவனுக்கு ஹவ்யக
வ்யங்கள் கொடுக்கக்கூடாது, கொடுத்தா
ல் சாம்பலில் செய்த ஹோமம் போல் நிஷ்ப
லம் ॥
169 — பங்க்தி போஜனத்திற்குத் தகாதவர்களுக்கு

ஹவ்ய கவ்யங்கள் கொடுத்தவனுக்கு என்ன
பலன் என்பதை முழுமையாகக் கூறுகிறேன் ॥

170 — வேதவ்ரதஸ்நானம் செய்யாதவர்கள், பரிவேத்தா முதலானவர்கள், மற்றும் பங்க்தி பொருணத்திரு க்குத் தகாதவர்களுக்குக் கொடுக்கும் ஹவ்யகவ் யங்களை (இவ்வுலகம்) ரக்ஷஸர்கள் சாப்பிடுகிறா ர்கள் (பலனொன்றுமில்லை) ॥

171 — தனக்கு மூத்த ஸஹோதரன் விவாஹம் செய்துகொ ள்ளாமலும், அக்னிஹோத்ரம் ஆரம்பம் செய்துகொள்ளாமலும் இருக்க எவன் விவாஹமும் அக்னிஹோத்ரம் செய்துகொள்கிறானோ அவ ன் பரிவேத்தா, மூத்தவன் பரிவித்தி என்று அறியவும் ॥

172 — பரிவித்தி, பரிவேத்தா, கன்னிகை, கன்னிகை யின் பிதா, செய்துவைக்கும் புரோஹிதர், ஐவர்க ளும் நரகத்தையடைவார்கள் ॥

173 — புத்ரனில்லாமல் மரணமடைந்த ப்ராதாவினுடை ய பத்நியிடம் புத்ரோத்பத்திக்கான நியோக மு றைதவறி இப்படி நடக்கிறானோ அவன் திதிஷு

பதினனப்படுவான், அவனும் சிராத்தயோக்

174— யனில்லை॥ பர்த்தா ஜீவிக்கும்பொழுது ஜாரனு
க்குப் பிறந்தவன் குண்டன், பர்த்தா இறந்தபி
றகு ஜாரனுக்குப் பிறந்தவன் கோளகன் எனப்படு॥

175— மேற்கூறிய குண்ட கோளகர்களானவர்கள்
பிறரால் தமக்குக் கொடுக்கப்பட்ட ஹவ்ய
கவ்யங்களை இந்த லோகத்திலும் பரலோகத்
திலும் உதவாமல் நாசம் செய்கிறார்கள்॥

176— சிராத்தாதிகளில் வைதிகர்களுக்குப் போ
ஜனம் செய்விக்கும்பொழுது, திருடர் முதலா
னபங்க்தி போஜனத்திற்குத் தகாதவர்க
ள் வந்து எத்தனை பேருக்கு அவர்கள் பா
ர்க்கிறார்களோ அத்தனை பேருக்குக் கொ
டுத்த அன்னதானபலன் எஜமானனுக்குக் கி
டையாது (நிஷ்பலம்॥ அவர் பார்க்கக்கூடாது)

177— குருடன் அன்னதானம் செய்யும்பொழுது,
பங்க்தியாக உட்கார்ந்திருந்தால் தொ
ண்ணூறு பேருக்கு அன்னதானம் செய்த பலனை
யும், கண் ஒன்றில்லாதவன் அறு

பதுமே பருக்குச் செய்த அன்னதானபலனையும், வெளி
இச்சிமிராவன்நாது, சூரிய ரோகி ஆயமைச் செய்து
தாதாவனன் அன்னதானபலனை நாசம் செய்கிறான்॥

178— சூத்திரனுக்கு வைதிககார்யம் செய்து வைக்கும் ப்ராம
ஹ்மணன் சிராத்தாதிபங்க்தியில் தள்ளத்தக்கவன். அவனுக்கு
தானாயுக்கும் மற்றவர்களுக்கும் சிராத்தபலன் கிடை
யாது। (ஆத்வயானுகனபங்க்திபோஜன அர்ஹதன்)

179— சவமாகத்தான ப்ராம்மணனும் கூட சூத்ர யாகனி
டம் தனதேவதாபத்தாப் (தக்ஷை) ப்ரதிக்ரஹம் செய்தால்
(தானம் வாங்கினால்) அக்கினியில் வேகாதபக்கா மண்
பாண்டம் போல் சீக்கிரம் அழிந்துபோவான்॥

180— சோமலதை (கொடி) விற்பவனுக்கு சிராத்தத்தில்
அன்னதானம் செய்தவன், மலத்தை சாப்பிடும் ப்ராணி
யாக மறுஜன்மத்தில் பிறப்பான், வைத்யனுக்குக் கொடு
த்த தானத்தால் (சீழ்) சலம் பருகும் ப்ராணியாக பிறப்பான்,
கனத்திற்க்கொண்ட தேவபூஜை செய்பவன், வட்டி வாங்
கிறவர்களுக்கு தானபலனில்லை॥

181— வியாபாரிக்குச் செய்த சிராத்த போஜனம் இவ்வு
லகிலும் பரலோகத்திலும் பலனளிக்காது,

புனர்ஜன்மத்துக்கு, சாம்பலில் செய்த ஹோம
182 - ம் போலேயன்றோ இவையாகில் || மேற்படி பங்க்தி போஜ
ன யோக்யதையில்லாதவர்களுக்கு தானம்
செய்த அன்னம் மறுஜன்மத்தில் ப்ரேத புக்தி
கொடிய ப்ரேதர்க்கும் மாம்ஸம் அஸ்திகளைக் கா
ரியமாக ஆகும் என்று பராசர ஸ்ம்ருதியில் கூ
றுகிறார்கள் ||
183 - பங்க்தி போஜன யோக்யதையில்லாத இடை
ன் மேலானவர்களால் (ஏ பங்க்தியில் இருந்து)
தெரிக்கப்பட்ட அந்த பங்க்தியை விட்டு ப்ர
ரிக்ஷித்தம் செய்யும் ஹோம மந்த்ரங்களாக
கூறுகிறான் / மே ஜகா—
184 - ப்ராஹ்மண வேதம் படித்தவர்கள், அத்துடன் ஸ்வ
ர்க்கம் படித்து பரிவசனம் செய்பவர்கள், பங்க்
தியில் வேறு யோக்யதை கல்பங்கள் பரிபவர்
185 கள், || த்ரிணாசிகேத வேதபாகம் அத்யயனம்
பண்ணியவன், த்ரிமதுசாக்யங்களை உ
ணர்ந்தவன், த்ரிஸுபர்ணம் என்ற வேதபாகம்
படித்தவன், வேதாங்கங்கள் ஆறையும்

வியாக்யானம் செய்பவன், ப்ராம்மவாக்யத்தில்
பாரங்கதன், ஜ்யேஷ்டஸாமகானம் செய்தவன்,
186— வேதார்த்தங்களின் அர்த்தமறிந்தவர், வேதார்த்த
ப்ரவசனம் செய்பவன், ப்ரம்மசாரி, ஆயிரங்கோ
தானம் செய்தவன், நூறுவயதானவன், இவர்கள்
ஸ்ரோத்திரிய ப்ராமணர்கள் பங்க்தியை சுத்தம் செய்
பவர்கள்॥
187— சிராத்தத்தினத்திற்கு முதல்நாளோ, அன்றோ, மேற்
சொல்லியபடி, மூன்றுக்குக்குறையாமல் ப்ராமணோத்தமர்க்
கு உபசாரம் செய்துவிக்க வேண்டும்॥
188— சிராத்தத்திற்கு நிமந்திரணத்திற்கு வரிக்கப்பட்ட ப்ராமண
னும், கர்த்தாவும் ப்ரம்மசர்யாதி நியமத்துடனிருக்
கவேண்டும், அத்யயனம் செய்யக்கூடாது॥
189— நிமந்திரணத்திற்கு வரிக்கப்பட்ட ப்ராமணர்களை, அ
ந்த பித்ருக்கள், ப்ராணவாயுவைப்போல் வெளியாய்
தோன்றும்படி அவர்களுடன் கூடப் பொருந்திச் செல்லு
கிறார்கள் உட்கார்ந்தால் கூட உட்காருகிறார்கள்॥
190— சிராத்தத்தில் ஒப்புக்கொண்டு வரிக்கப்பட்ட ப்ராமணன்
ஏதாவது காரணத்தால் போஜனம் செய்யாவிட்டால்

அந்த பயத்தால் அவன் பன்றியாக பிறப்பா
191— ன்|| ஶ்ராத்தத்தில் வரிக்கப்பட்டவன் சூத்ராஸ்தி
ரீ ஸம்போகம் (ஸ்திரீ ஸம்போகம் பொதுவாக) செய்தால்
ஶ்ராத்தகர்த்தாவின் பாபம் முழுவதையும் பெறு
192— வான்|| பிதிருதேவதைகள், கோபமில்லாத
வர்கள், உள்ளும் புறமும் சுத்தமானவர்கள்,
எப்பொழுதும் பிரம்மசர்யம் அனுஷ்டிப்பவர்
கள், சண்டையிடாதவர்கள், தயையுள்ளவர்,
எட்டு குணங்கள் உள்ளவர்கள் அனாதி தேவதை
மேன்மையானவர்கள் பிதுர்க்கள்||
193— இந்த பிதுருக்கள் எல்லோரும் எதிலிருந்து உ
ண்டானார்கள், எந்த பிதுருக்கள் எந்தவர்ணத்
தாரால் எந்தவாதத்தால் பூஜிக்கத்தக்கவர்களோ
என்பதைக் கேட்க கூறுகிறேன்||
194— ப்ரம்மதேவரான ஸ்வாயம்புவ மனுவு
டைய புத்ரர்கள் மரீசி முதலானவர்கள், அ
வர்களுடைய புத்ரர்கள் பிதுர்கணங்கள் என்று
கூறுகிறார்கள்||
195— விராட்புருஷன் புத்ரர்கள், ஸோமஸதர்கள்,

ஸௌம்யர்களின் பிதிக்கள், அக்நிஷ்வாத்தர்கள்

196 — என்று மரீசிபுத்ரர்கள் தேவ பிதிக்கள்॥ பர்ஹிஷத்
களென்ற அத்ரிபுத்ரர்கள், தேவர்கள் அசுரர்கள்
யக்ஷர்கள், கந்தர்வர்கள், உரகர்கள், ராக்ஷஸர்கள்,
ஸுபர்ணர்கள், கின்னரர்கள், இவர்களுக்கு பிதுக்கள்

197 — பிராமணர்களுக்கு ஸோமபர்கள், க்ஷத்ரியர்களுக்
கு ஹவிர்புஜர்கள், வைசியர்களுக்கு ஆஜ்யபர்கள்,
சூத்ரர்களுக்கு ஸுகாலிநர்கள், என்றுமேற்

198 — படி பிதிருக்கள்॥ ஸோமபர்கள் கவியின் புத்ர
ர்கள், அங்கிரஸின் புத்ரர்கள் ஹவிஷ்மான்கள்,
ஆஜ்யபர்கள் புலஸ்தியபுத்ரர்கள், வசிஷ்டரி
ன் புத்ரர்கள் ஸுகாலிகர்கள்॥

199 — அக்நிதக்தர்கள், அநக்நிதக்தர்கள், காவ்யர்கள்,
[பர்ஹிஷத்கள்]
பர்ஹிஷதர்கள், அக்நிஷ்வாத்தர்கள், ஸௌம்யர்கள்,
இவர்களெல்லாம் பிராமணர்களின் பிதிருக்களாக

200 — வேயும்॥ இங்கு கூறிய பிதிருகணங்களுடைய புத்
ர பௌத்ராதிகள் இவ்வுலகில் அனந்தமானவை॥

201 — ரிஷிகளிடமிருந்து பிதிருக்களும், பிதிருக்களிடமிரு
ந்து தேவர்கள் மனிதர்களும், தேவர்களிடமிருந்து

ஸ்தாவர ஜங்கம ரூபேண ஸ்தீயமானோ யாத்ரு //

202 — திர்யக் பதி ரக்ஷகர் தேசித்து வொள்ளிப்பாத
திரவ்ய அல்லது வொள்ளிகளைத் தர்ம சாஸ்த்ரம் சொ
லைகளால் கொண்டுபோய் ஜலத்தை மேய்ந்து
ம் கொண்டுதரும் அருமையான சக்தியைக்
203 — கொடுக்கும் // தர்மத்திற்கு தேவகார்யத்
தைக்காட்டிலும் பித்ருகார்யம் அவசியமாக
~~ச் செய்ய~~ வேண்டும் / தன்னில் தெய்வகார்
யம் பித்ருகார்யத்திற்கு அங்கமாய்ப் பண்ணப்பட்டு
பித்ருகார்யத்தைப் பூர்த்தி செய்கிறது //
204 — பித்ருக்களுக்கு ப்ரதானமாக நித்யம் ச்ராத்
தே தேவவரணம் செய்ய வேண்டும், ப்ரத்யக
ஷிச் வேதேவவரணமில்லாமல் செய்கிற ச்ரா
த்தத்தை ராக்ஷஸர்கள் அபஹரிப்பார்கள் //
205 — ச்ராத்தத்தில் விச்வேதேவர்களுக்கு ஸ்தால
வரணம் செய்து கண்டிப்பாய் ராஜவரண
ம் செய்ய வேண்டும், அவைப்பத்திரம் ~~கனை~~
களையும் பித்ருக்களுக்கு ஏற்படாது, அப்படி
ச் செய்தால் ச்ராத்த கர்த்தா வம்சத்துடன் அழிவான் //

206— சுத்தமானதும் ஏகாந்தமானதும் தெற்கே பள்ளம்
தணிந்ததும் உள்ள இடத்தை கோமயத்தால் சுத்தம் செ
207— ய்ய வேண்டும்॥ ஸ்வபாவமாக சுத்தமானவைப்
ப்ரதேசங்களிலும், நதிதீரங்களிலும், நிர்ஜனதேசங்
களிலும் செய்யப்பட்ட சிராத்தத்தினால்
பித்ருக்கள் திருப்தியடைகிறார்கள்॥
208— நன்கு ஸ்நானம் ஆசமனம் செய்த அந்த ப்ராமணர்
களை, தர்ப்பை பரப்பிய ஆஸனத்தில் தனித்தனி
யாக உட்காரச் செய்யவும்॥ [illegible]
209— அந்த ப்ராமணர்களை நல்ல வாஸனையுள்ள சந்
தனம் புஷ்பங்களால் பூஜிக்கவும். தேவஸம்பந்த
வே தேவர்களை முதலில் பூஜிக்கவேண்டும்॥
210— அந்த ப்ராமணர்களுக்கு பவித்ரத்துடன் அர்க்யம்
கொடுத்து அவர்களிடம் அநுமதி கேட்டுக்கொண்டு ஹோமம்
211— செய்யவும்॥ அக்னி ஸோம யமன் இவர்களுக்கு ஹோ
ஹோமம் செய்து பிறகு பித்ருக்களை திருப்தி செய்யவே
212— ண்டும்॥ ஔபாஸனாக்னி இல்லாவிடில் ப்ராம
ணனுடைய கையிலேயே ஹோமம் செய்யவேண்
டும், அக்னியே ப்ராமணன் என்று வேதம் அறிந்த

பிராமணர்களால் சொல்லப்படுகிறது॥

213-கிருத சாதகப் பிராமணர்களே, கோபமில்லாதவர்
கள், பரலென்ன வேலைகளைக் கவர்கள், பரம்பரை
யாகவே இயவர்கள், லோக க்ஷேமத்திற்காக
பாராயணம் செய்பவர்கள் என்று மனு முத
லானவர்கள் கூறுகிறார்கள்॥

214—
6-217 புண்ணிய இடம் போட்டுக் கொண்டு அக்கினி
யால் ஹோமம் செய்து, பூமியைத் தொளையாமல்
மேல் தீ வைத்து அதையும், ஹோமம் செ
ய்த பின் மாணவர்கள் பால் வோர்ப்பூரண
டங்கள் பழுத்தவைகளைக் கொண்டும்,
பருத்தி குயவகத் தீர்த்தில் வேர் மற்றவகை
பழங்களும் தொளையாமல் வேலை கட்டு
ம், கையில் பட்டுக் கொண்டிருக்கும் அ
ன்னத்தை தொளையாமல் துடைக்கவும்;
வடக்கிலே கொண்டு வந்து போட்டு
க்கொண்டு ஹோமம் செய்யவும், வேண்
டியவைகளைச் செய்யவும், ஆகுதி
களைக் கொடுக்கவும் கொள்ளவும் ஆகும்।

218— பட்டத்தின் மேல் பட்டமே போகபாக்கியம் [illegible]
ல-123— [illegible] பட்டத்தின் ஸம்பத்தில் பட்டமும், பட்டாபிஷே-
கம் பார்க்கவும், [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
'ப்ரதாபவதீ' என்று சொல்லிக் கொடுக்கவும். ||
224— பெருமாள் [illegible]
ல-228— [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

பாத்திரத்துடன் பூமியிலேயே வைக்கவேண்டு
ம். பலனை குலாசாரின் மேல்வைக்கக்கூடாது,
பலவிதமான பக்ஷ்ய போஜ்யங்களிருந்தாலு
ம் கள் சாதித்தபட்ட அன்னமானவைகளை
னதும் மேலியான கைகளைக் கைவல்லாம்
பாதமான மீபம் சொல்லப்பத்து
னமாகவே துபாக அனைத்தையும்
வைவையச் சொல்லி பரிமாறவும். ||

229 — போஜனகாலத்தில் கண்ணீர் விடக்கூடாது;
to 232 கோபிக்கக்கூடாது, பொய் சொல்லக்கூடாது,
காலால் பாத்திரத்தைத் தொடக்கூடாது, பட்டேசி
யசைக்கக்கூடாது, கண்ணீர்விட்டால் பிராம்மணர்
அன்னம் ப்ரேதங்களையும், கோபம், சத்
ருக்களையும் சேரும், பொய், நாய்க
ளை, பாதத்தால் பரிசம் ராக்ஷஸர்களை, அசைத்தல்
பாபிகளையும் அடையச் செய்யும் || ப்ராம்மண
ர்களுக்குப் பிரியமானதை பொறுமையுடன்
கொடுக்கவும், பரமாத்மாவுடைய கதைகளை
வேதம், தர்மசாஸ்திரம், வேதாந்தம்

[illegible]

233— [illegible]

234— [illegible]

235— [illegible]

236— [illegible]

237— [illegible]

135 34

இங்கு கூறப்பட்ட [illegible] பொதுவாகி, [illegible]

238 — தனியாயிருந்தவனை போஷித்துக்கொள்ளும்
தெய்வீகமாகவும் [illegible]
பொருளை [illegible]

239 — கள்ளச் செவிடம் // [illegible]
கோழி [illegible]
இவர்கள் [illegible]

240 — [illegible] // இவர்கள், [illegible]
[illegible]
பொருளை [illegible]
[illegible] //

241 — பன்றி கொல்வதாயும் கோழி இருக்கையான்
காற்றிலும் நாய்பாலையாயும், சுற்றி
ன் திரட்டாலும் [illegible] //

242 — தொன்டு பொட்டைக்காரனன், எருமை
மாடுடைய சுத்தவேலைக்காரன் [illegible]
யாரா [illegible] வன், இவர்கள் [illegible]
திம் செய்யுமிடத்தில் இருக்கக்கூடாது //

243 — இராத்திரிகாலத்தில் [illegible]
நிவேத்யமாயிவைகளுக்கு [illegible]

ன அருமையிலொன்று பொருளைச் செய்யக்கடவன்॥

244— அன்னம் உபவாசத்திற்காதல்லாவர்ஜனையும் பெ
ருக்கெடுத்து பருகப்பட்ட பாத்திரங்களின் மிஞ்சி
தர்ப்பத்தின்மேல் வைக்கப்பட்டு பூமியால் போடப்பட்ட

245— டும்॥ ஸம்ஸ்காரயோக்யமில்லாதபாலர்
கள் தோஷமில்லாமல் தியாகம் செய்யப்பட்ட ஸ்திரீ
ள் இவர்களுக்குக் கிரஹிக்கிறானவை॥

246— பூமியிற் சிந்தப்பட்ட பாகமெல்லாம் பிதிர்
சேஷம் வஞ்சகமில்லாத தாஸவர்க்கத்திற்கு

247— என்று கூறுகிறார்கள்॥ ஸபிண்டீகரணத்திற்கு
முன் செய்யும் மாசிகாதி சிராத்தங்களில் ஒரு
பிராமணனை ஏகபிண்டம் தெய்வமில்லாமல்॥

248— ஸபிண்டீகரணமான பிறகு வேதோக்த விதியுடன்
செய்யும் சிராத்தத்தில் தர்ச சிராத்த முறைப்
படி செய்ய வேண்டும்॥

249— சிராத்தம் புசித்தபின் உச்சிஷ்டத்தை சூத்திரனுக்
குக் கொடுப்பவன் காலசூத்திரமென்ற நரகத்தில்

250— தலைகீழாக விழுவான்॥ சிராத்தம் போஜனம் செய்த
வன் அன்று ஸ்திரீஸம்போகம் செய்தால் அவனுடைய

யதிகேக்கள் அவருடைய மனத்தில் ஒழுகுமே

251— அஹோர்சவார்கள் யராமனர்கள் திருத்திய
னைபுர்தஸ்காரர என்று சொல்லி (திருத்திகேட்டு)
"ஸ்வஸ்திதம்" என்று சொல்லி யாக செகமனம்செ
ய்வாதும் "பேர: ஸ்ரீமயதாம" கொடுப்படி செய்வ

252— ராம் என்றுச்சு வேண்டும் யாக யராமனர்
கள் கொள்ளத்தக்கவாடம் "ஸ்வாதாரஸ்து" எ
ன்று சொல்ல வேண்டும்; கொத்துப்பரப்பனம்
தேவானபதிசொர்யர்களில் ஸ்வஸ்தாசுஸ்தும்
யதிகேக்களுக்கு உயர்ந்த யராமர்த்தினை

253— யாக ஸ்ரீராமனர்களிடம் அன்னசேஷத்
தை என்ன செய்ய வேண்டும் என்று கேட்டு
அவர்கள் சொன்னபடி செய்ய வேண்டும்

254— யதிசொவாக்கத்தில் "ஸ்வஸ்திதம்" என்றும், ஸ
ம்ருத்திவாக்கில் "ஸங்கேதம்" நாற்கு சொத்தில்
"ஸம்பன்னம்" தெய்வ சொத்தில் "ஸ்ருதம்"
என்றும் சொல்ல வேண்டும்

255— அபராண்ணேவாம், தர்ப்பைகள், ஸ்வஸ்திகத்தி,
என், தாநாரணமாக பொருள ஸம்ஸ்காரம்,

யோக்யமான ப்ராமணர்கள், இவைகள் சிரா
த்தத்தில் ப்ரதானமானவைகள்॥
256 — தர்ப்பைகள், மந்திரங்கள், முற்பகல், ஹோமத்திரவிய
ங்கள், முன் சொன்ன பொருள்கள் தெய்வ கார்யங்
களில் சம்பத்தாக இருக்கவேண்டும்॥
257 — காட்டு நெல், பால், சோமலதைரஸம், நாற்றமில்
லாத மாம்ஸம், கல்லுப்பு இவைகள் ஸ்வபாவமாக ஹவி
ஸ் எனப்படும்॥
258 — இவ்வித ப்ராமணர்களை உத்வாஸனம் செய்து
மனம் ஒன்றி, பேசாமல், சுத்தனாக, தெற்கு திசை
யைப் பார்த்துக் கொண்டு, மேல் கூறப்போகும் வர
ங்களை பிதுருக்களிடம் ப்ரார்த்திக்கவேண்டும்॥
259 — எங்களுடைய குலத்தில் தானம் செய்பவர்கள் அபி
வ்ருத்தியடையவேண்டும்; வேதங்கள் வே
தோக்த கர்மாக்கள் வளர்ச்சியடைய வேண்டும்;
புத்ர பௌத்ராதி ஸந்ததிகள் விருத்தியடைய வேண்டும்;
வேதார்த்தத்தில் சிரத்தை குறையக்கூடாது, தானம்
செய்ய அதிகமாக த்ரவ்யம் கிடைக்கட்டும்॥
260 — பிண்டப்ரதானம் செய்து அந்தப் பிண்டங்களை

பசுவர்க்கோ பராமணருக்கோ, அடுக்கோ
கொடுக்கலாம், அல்லது அக்கினிஹோத்ரத்திலே
261— போட போடலாம்॥ இவர் பண்டபரதானத்தை
பொய்யாக் கள்ளோத்துடனாவடனே செய்ய
கிறார்கள், இவர் பண்டுகளை (கொள்ளைமுதலான)
பலவிதருக்கும் கொடுக்கிறார்கள் இவர் அக்கினியோ
ஹுவத்தியோடு போடுகிறார்கள்॥
262— ⊕ பதிவாரணத்தையும் தர்மபத்தியும் இராத்திரியோ
டல் இறந்தாலும் உன் ஈவன் புத்திராலயும் பாலும்
மத்யமபண்டத்தை (பதாமரு) மற்றும்பல்
263— நிசலப்பட வேண்டும்॥ அதனை தீர்க்காயுள்
கீர்த்தி, பில்வ புத்தி (மேதை) தனம், ஸந்ததி,
இவைகளோடு கூடியவனாய்ச் சகலமான ஆத்மா
சுபுத்திரனைப் பெறுவான்॥
264- பெண்கள் சுத்த மனைச் சுலபமாக
செய்து, உபசாரத்துடன் க்ஷத்ரியருக்கும், தா
பானைச் சேர்த்தவர்களுக்கும் பொறுமைய
265— ஸ்வாக்க வேண்டும்॥ பதராமணர்களைய றுப்
பயபாரு அவர்கள் சமர்ப்பட்டதற்கு அதிதும்

மாம்ஸ சிராத்தம் யுகாந்தரவாயம்
கலியுகத்தில் கூடாது

செய்ய வேண்டும்,, சிராத்தம் முடிந்தபிறகு
வைச்வதேவம் அதிதிபூஜை முதலியன செய்ய வேண்டும்॥
266 எந்த ஹவிஸ்ஸை (விதிப்படி) பிதிர்க்களுக்குக் கொடுத்தால், அவர்
களுக்கு அளவில்லாத வெகுகால திருப்தி ஏற்படுமோ
அதைக் கூறுகிறேன்॥
267— திலம், தான்யம், யவை, உளுந்து, ஜலம், கிழங்கு,
பழம், இவைகளை விதிப்படி சிரத்தையுடன் பிதிர்க்களு
க்குக் கொடுத்தால் மனுஷ்ய பிதிர்க்கள் ஒருமாதம் திரு
268— ப்தியடைகிறார்கள்॥ மத்ஸ்ய மாம்ஸத்தால் இரண்
to-271 டுமாதம், மான்மாம்ஸத்தால் மூன்றுமாதம், ~~வெள்~~
செம்மறி ஆட்டின் மாம்ஸத்தால் நான்குமாதம், பக்ஷிமாம்ஸ
த்தால் ஐந்துமாதம், வெள்ளாட்டின் மாம்ஸத்தால்
ஆறுமாதம், புள்ளிமான் மாம்ஸத்தால் ஏழுமாதம்,
கறுப்புமான் மாம்ஸத்தால் எட்டுமாதம், ருருவென்ற
மான்மாம்ஸத்தால் ஒன்பதுமாதம், காட்டுப் பன்றி
எருமை மாம்ஸத்தால் பத்துமாதம், முயல் ஆமை
மாம்ஸத்தால் பதினொருமாதம், பசுவின்பால் பாய
ஸத்தால் ஒருவருஷம், வார்த்ரீணஸம் என்ற ஆட்டின்
மாம்ஸத்தால் பன்னிரண்டு வருஷங்கள், திருப்தி
உண்டாகும்॥

272 - காலசாகம் (லகோதகீனா) மீனாருள்ள மீன்,
கட்கம் (காண்டாமிருகம்) என்ற மிருகம், செம்
மறியாடு இவைகளின் மாம்ஸம்; தேன், காட
டு அல் தான்யம் இவைகளால் அன்னவருந்திவப்
273 - திருப்திகிறது|| வஸிஷ்டருடைய புகாரத்தை
திடம் கூடிய திரயோதசியால் தேன் கலந்த
எள்ளைப் பொடி பித்ருக்களுக்குக் கொடுத்தா
லும் அனைந்து பலனைக் கொடுக்கிறது||
274 - மேற்கூறிய படி மகாளய பக்ஷ திரயோதசியன்று,
"இந்தினத்தில் தேன் நெய் பாயஸத்துடன் பிது
க்கு ஸ்ராத்தம் செய்யக் கூடிய பிள்ளை எவனும்
குலத்தில் பிறப்பானோ என்று பித்ருக்கள் எதிர்
பார்க்கிறார்கள்||
275 - பித்ருக்களை உத்தேசித்து சாஸ்திர விதிப்படி
சுத்தியான அன்னத்தை ச்ரத்தையுடன் கொ
டுப்பதால் பரலோகத்தில் பித்ருக்களுக்கு அக்ஷ
யமான திருப்தியை உண்டுபண்ணுகிறது||
276 - கிருஷ்ண பக்ஷத்தில் தசமியாதிகளில் ச்ரா
த்தத்தை பார்க்கின்றவர்கள் ஸ்ராத்தம்

செய்ய இசைவுட்டளைவைகள்।

277 — இரட்டித்த திதி வாட்டித்த தனத்திரயங்கள் இவைகளில்
சிராத்தம் செய்தால் பார் வேஷ்டமங்கலியுமணவாள
அன்னைப்படிதி திருத்திரயங்களில் சிராத்தம் செய்ப
வன் தனம்வாத்யை கணோர கோடிய ஸந்ததியை
278 — அடைவான்॥ சிராத்தம் செய்ய சகலபாத்
திரக்காட்டிலும் எப்படி இலைப்பாத்ரம் மேலோ
அவ்வாறும் ஒப்பகலிலக்காட்டிலும் பாரப்பகல் மேல்
279 — யதிகளாயுள்ளவர்கள் பெறுவதும் கையால் பாத்தணி
ர்ச்சு ஞாலிடம் பொட்டுக்கொண்டு யதிகளின்
த்த ஒப்பட (மறைத்து) சோமம் பல்கல்லாமலிருத்
தலுடன் ஒப்ப பூசெய்ய வேண்டும்॥
280 — ⊗ இரவில் சிராத்தம் செய்யக்கூடாது, செய்தால் அவ
ராக்ஷஸமாகும், இவைகந்தியாகாலத்திலும்,
பராதக்காலத்திலும் சிராத்தம் செய்யக்கூடாது॥
281 — தஸ்டிகுறியவதிப்படி இப்பமாஸம் ஆடிப்பமாஸ
ம் கார்த்திகைமாஸம் இவைகளில் சிராத்தம் செய்ய
வேண்டும்; வைகுவ தேவத்தில் பொன்னையதற்கு
க்கு மேற்கொண்டு பூசெய்ய வேண்டும்॥

282 — முன்புகூறிய பித்ருயஜ்ஞ ஹோமம் லௌகிகாக்னி
யால் செய்யக்கூடாது (ஔபாஸநாக்னியில் செய்யவேண்
டும். ஆஹிதாக்னிக்கு அமாவாஸ்யையன்று தர்சஸ்ரா
த்தத்தால் வேறு ஸ்ராத்தம் இல்லையாயினும், மாஸிகஸ்
ராத்தம் உண்டு॥

283 — பஞ்சமஹாயஜ்ஞத்தில் உட்பட்ட ஸ்ராத்தம் செய்ய இயலா
விட்டால் ஸ்நானம் செய்து பாகம் செய்யும் பதிவ்ர
மணத்தால் வேலையற்ற மனைவியின் ஸ்ராத்த பலத்தை
யடைகிறான்॥

284 — பிதிருக்களை வஸு தேவதைகளாகவும், பிதாம
ஹர்களை ருத்ரர்களாகவும், ப்ரபிதாமஹர்களை
ஆதித்யர்களாகவும் மனு தேவர் வர்ணிக்
கிறார். (ஸ்ராத்த கர்த்தா பிதா பிதாமஹ ப்ர
பிதாமஹர்களை வஸு ருத்ர ஆதித்ய தேவதைகளா
க த்யானம் செய்யவேண்டும்)॥

285 — நித்யம் வைகானஸாக்னியாகவோ அம்ருதாக்னியா
க வைத்திருக்க வேண்டும், ப்ராம்மணர்களுக்கு
போஜனம் செய்வதற்கு அந்த சேஷத்தைச்
ச ... "பங்க்தியவன் வைகானஸா ..." என்றும்

தர்ச பூர்ணமாஸயாகம் செய்து அதன் பேறு மான புரோடாசம் (மாவு) அசிக்கிறது; அதை ப்ராப்புபவன் "அமிர்தாசீ" என்றும் சொல்லப் படுகிறான்॥

286 — ப்ராம்மணர்களே, இதுவரை உங்களுக்கு பஞ்சமகா யக்ஞாதி முறைகளும் சொல்லப்பட்டது, இனி த்விஜர்களில் ச்ரேயமான ப்ராம்மணர்களுடைய வ்ருத்திகளின் முறையைக் கூறுகிறேன் கேளுங்கள்॥

மூன்றாவது அத்யாயம் ஸமாப்தம்॥

நான்காவது அத்யாயம் —

1 — முதலாவது ப்ரம்மசர்ய ஆச்ரமம் முடிந்த பிறகு த்விஜன் கிருஹஸ்தாச்ரமத்திற்கு வரவேண்டும்॥

2 — கிருஹஸ்த ப்ராம்மணன் ப்ராணிகளுக்கு ஹிம்ஸையில்லாமல் சிலோஞ்சம், அயாசிதம் என்ற வ்ருத்தியாலேயோ அல்லது கொஞ்சம் ஹிம்ஸையுள்ள யாசனம், யாஜனம், அத்யயனம் ப்ரதிக்ரஹம் இவைகளாலேயோ ஆபத்தில்லாத ஸாதாரண காலத்தில் ஜீவிக்க வேண்டும்॥

3 — சாஸ்திர முறைப்படி குடும்ப ஸம்ரக்ஷணம், நித்யகர்மானுஷ்டானம் செய்துகொண்டு, ஜீவனத்திற்கு மாத்திரம் வேண்டிய அளவு, சரீரத்தை அதிகம் சிரமப்படுத்திக்கொள்ளாமல், தனக்குரிய ஜீவனவ்ருத்தியால் தனம் சேர்த்துக் கொள்ளலாம்॥

4 — ருதம், அம்ருதம் இவைகளால் ஜீவிக்கவும், அல்லது ம்ருதம், ப்ரம்ருதம் இவைகளாலும் ஜீவிக்கலாம், அல்லது ஸத்யாந்ருதங்களால், வருயொமுசும், ச்வவ்ருத்தியால் (ச்வாவ்ருத்தி) ஜீவிக்கக்கூடாது॥

5 — மற்றவர்க்கிடைஞ்சல் இல்லாததும் வேலைபோடப்படாததும் அந்தமானதுமான மார்க்கத்திலோ (மார்க்கம் ரோடு வீதி) வயல்களிலோ சிந்திய தான்யத்தை ஒவ்வொன்றாக பொறுக்கி ஒன்றுசேர்த்துக்கொள்வது "உஞ்சம்" எனப்படும், நெல்லை கொத்தாக ஒன்று சேர்ப்பது சிலம், இவைகளால் ஜீவிப்பது "ருதம்" எனப்படும், யாசிக்காமல் கிடைப்பது "அம்ருதம்" என்பது,

பக்தியுடன் தமக்கும் பிறருக்கும் யாசகம்
செய்து கிடைக்கும் அரிசி "மிருதம்" (அன்னபா
னைக்கூடாது) தானாக வேளாண்மையில் வியவசாயம்
~~செய்பவர்க்கு~~, "பிரமிருதம்" எனவும்;

6— வியாபாரம் செய்பவர்க்கு நேரிடையாக, ஸ/
"ஸத்யாந்ருதம்", எனவும், தன்னையும் ஜீவிக்கலாம்,
பிறருக்கு சேவை (ஏவல்வேலை) செய்வது
"ச்வவிருத்தி" இதை பிராமணன் பிழைப்பும்
செய்யக்கூடாது॥

7— தன் பரிவாரங்களைக் காப்பாற்றிக் கொண்டு ஸ்வ
தர்மத்தையும் செய்து கொண்டு மூன்று வருஷம்
ஜீவனத்திற்கு வேண்டிய ஆகாரதானியத்தை
உடையவன் "குசூலதான்யன்" (குசூலம்
- நெல் குதிர்). ஒரு வருஷப்படி பெரியவருஷத்திற்
கு வேண்டிய ஆகாரமுள்ளவன் "கும்பீதான்
யன்" (கும்பீ - குதிர், பானை) மூன்று நாளைய
மூன்று நாட்களுக்கு வேண்டிய ஆகாரமுள்ளவன்
"த்ர்யஹைஹிகன்" எனவும், அன்றன்று தினங்களு
க்கு மட்டும் உள்ளவன் "அச்வஸ்தனிகன்" எனவும்
கூறப்படுகிறது॥

8 — இவ்விதம் கூறப்பட்ட நான்கு வேத ப்ராம்மணர்களுக்குள், முன்னவர்களைக் காட்டிலும் பின்னவர்கள் மேலானவர்கள், ஏனெனில் தன்வ்ருத்தியை (ஜீவனோபாயம்) குறைத்துக்கொள்பவன் அதிகமாக ஸ்வர்க்கத்திற்குரியவன்॥

மேற்கூறிய ப்ராம்மணர்களுக்குள் —

9 — அதிகஸம்ஸாரியான ப்ராம்மணன், கிருஹஸ்தன் (முன்சொன்ன, ருதம்[1], அம்ருதம்[2], ம்ருதம்[3], ப்ரம்ருதம்[4], ஸத்யாந்ருதம்[5], ச்வவ்ருத்தம்[6] (வட்டி) இவைகளால் ஜீவிக்கிறான், மற்றவன், யாஜனம் அத்யாபனம் ப்ரதிக்ரஹத்தால், ஜீவிக்கிறான், ஒருவன், யாஜனம் அத்யாபனத்தால், ஒருவன், நாலாமவன், அத்யாபனத்தால் மட்டுமே ஜீவிக்கிறான்॥

10 — சிலோஞ்ச வ்ருத்தியுள்ள கிருஹஸ்த ப்ராம்மணன் அக்னிஹோத்ர தர்சபூர்ணமாஸாதிகளை மட்டுமே செய்துவந்தால் போதுமானது, தனக்கு தனலாக வேண்டிய மற்ற கர்மாக்கள் தேவையில்லை॥

11 — ஜீவனத்திற்காக, கெட்டவர்களைப் புகழ்தல், தற்புகழ்ச்சி, டம்பம் இவைகளில்லாமல்

வேடிக்கையான கதை பேசுதல் இல்லாமலும்
உன்னதமான ப்ராம்மண வ்ருத்தியால் ஜீவிக்கவும்॥
12— தன் குடும்ப ஸம்ரக்ஷணம், தர்மானுஷ்டானம்
இவைகளுக்குப் போதுமான தனத்தால் ஸந்தோ
ஷத்தையடைந்து புலன் திருப்தியடைய வேண்டும்; அதி
கமாக பணம் ஸம்பாதிக்க வேண்டும் என்ற எண்
ணம் கூடாது, ஏனெனில் திருப்தியே ஸுகத்தி
க்குக் காரணம், திருப்தியின்மை துக்கஹேது॥
13— ஆகையால் கிருஹஸ்த ப்ராம்மணன் மேற்கூறிய வ்ருத்தியி
ல் (வ்ருத்தி ஜீவனோபாயம்) ஏதாவதொரு வ்ருத்தியால் ஜீவ
னம் செய்துகொண்டு ஸ்வர்க்கம் ஆயுள் யசஸ் கீர்
த்திகளைக் கொடுக்கும் வ்ரதங்களை அனுஷ்டிக்க வே
14— ண்டும்॥ ச்ருதிஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டதன்றா
னையவற்றுள் ஸ்வதந்த்ரத்திற்குரிய கர்மாக்களை ச்ரத்தை
யுடன் ஜீவத்காலம் முழுதும் அனுஷ்டிக்க வேண்டும்,
அவைகளைச் ச்ரத்தையுடன் அனுஷ்டிப்பதால் மோக்ஷமடைவான்॥
15— ப்ராம்மணன், பாட்டு வாத்யம் வாசித்தல் இவைகளால்
பணம் ஸம்பாதிக்கக் கூடாது, சாஸ்த்ரவிரோதமான
வையாவதும்; போதுமான தனம் இருக்கும்பொழுதும்

பணம் ஸம்பாதிக்க-சேகரிக்கக்கூடாது।
என்றவிதமான கல்வி~~க~~டதையையாரும் வேறுபா
யமின்றிக் கேள்வியோ டுபதிதர்களிடமிருந்து ப்ரதிக்
ரஹம் செய்வதும் கூடாது॥

16 - லோகவிஷயங்களில் (இந்திரிய விஷயங்களில்) இஷ்டப்ரே
ல் அதிகம் ஈடுபடக்கூடாது, இந்த விஷயங்கள் நிலைய
ற்றது, பர லோகவிரோதி என்பது போன்ற தோஷ
ங்களை மனதில் எண்ணி இவைகளை விலக்க வேண்டும்॥

17 - வேதவிரோதமான ஸகல பாரலௌகிகங்களையும் விட
வேண்டும், வேதாத்யயன அத்யாபனவிரோதமி
ல்லாமல் ஜீவிக்க வேண்டும், அத்யயன அத்யாப
னமே ப்ரதானம்॥

18 - தன்னுடைய வயஸ், செய்கை (ஸக்தி) பணம், படிப்
பு, குலம், இவைகளுக்கேற்றபடி, வேஷம் (ட்ரஸ்) ~~ஆடை~~ அலங்காரம்
பேச்சு, எண்ணம், இவைகளுடன் நடக்க வேண்டும்॥

19 - வேதத்திற்கு விரோதமல்லாதவைகளும் அறிவை வ்ருத் (ஸ்ரீகரம்)
தி செய்யக்கூடியதுகளுமான வ்யாகரணம் மீமாம்
ஸை ஸ்ம்ருதி புராணம் ந்யாயம் இவைகளையும், அர்த்த
சாஸ்திரங்களையும் வைத்ய ஜோதிஷ சாஸ்திரங்களை
யும் வேதார்த்த போதக க்ரந்தங்களையும் நித்யம்

20 — இருக்கவேண்டும்॥ மனுஷ்யன் எவ்வளவுக்கெவ்
வளவு நிஷ்டை சாஸ்திராப்யாஸம் செய்கிறானோ அவ்வளவுக்
களவு அறிவு வளர்ந்து இயல்படைகிறது, மற்றும் உலக அறிவும்
21 — தெளிவாகிறது॥ மேற்படி பஞ்சமஹாயஜ்ஞங்களை
கடைசிவரையில் அனுஷ்டிக்கவேண்டும் விடக்கூடாது॥
22 — சில கிருஹஸ்தர்கள், சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் க
ந்தம் என்ற ஐந்து விஷயங்களில் ஐந்து ஞானேந்திரி
யங்களைச் செல்லவிடாமல் தடுப்பதே பஞ்சமஹாயக்ஞம்
என்று தியான ரூபமாகச் செய்கிறார்கள்॥
23 — யக்ஞ ஞானிகளான சில கிருஹஸ்தர்கள், பேசும்போ
து வாக்கில் ப்ராணனை ஹோமம் செய்வதாகவும்,
பேசாதிருக்கும்போது வாக்கை ப்ராணனில் ஹோ
மம் செய்வதாகவும், இதே சாச்வதமான யக்ஞானு
ஷ்டானம் என்று எண்ணி தியானம் செய்கிறார்கள்॥
24 — வேறுசில ப்ராஹ்மணோத்தமர்கள், உபநிஷத் ஸாரத்தால்
உண்டான ஞானத்தால் பஞ்சமஹாயக்ஞங்களை
யும் ஞானமூலமாகப் பார்ப்பதால் பஞ்சயக்ஞபலனை
யடைகிறார்கள்॥ மூன்று ச்லோகங்களால் கிருஹஸ்தக்
ஞானிகளுக்கு விதி சொல்லப்பட்டது॥

25— இவர்களுக்கு ஸூரிய உதயத்திற்கு பிறகும் அஸ்தம
னத்திற்கு முந்தியும், இவர்களுக்கு ஸூரிய உதயத்திற்
கு முந்தியும் அஸ்தமனத்திற்கு பிறகும் அக்நிஹோத்ர
ஹோமம் செய்ய வேண்டும், தர்சம் பூர்ணமாஸம்
என்ற யாகங்களும் செய்ய வேண்டும்॥

26— புதிதாக நெல் அறுவடையான உடன் ஆக்ரயண இஷ்
டியும், நான்கு மாஸத்திற்கு ஒருதடவை சாதுர்மாஸ்
யயாகமும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை தக்ஷிணா
யன உத்தராயணத்தில் பசுபந்த யாகமும் வருஷ
த்தில் ஒருதடவை வஸந்தகாலத்தில் ஸோமயாகமும்
செய்ய வேண்டும்॥ — தீர்க்காயுஸ்ஸை
விரும்புகிற

27— ஆஹிதாக்நியான ப்ராம்மணன் ஆக்ரயண இஷ்டி
செய்யாமல் புதிய அன்னத்தை உபயோகிக்கக்கூ
டாது, பசுபந்தம் செய்யாமல் மாம்ஸபோஜனம் செய்யக்கூ

28— டாது॥ ஆஹிதாக்நியான அக்நிஹோத்ரி ப்ராம்ம
ஸோமயாகம்
ணன் ஆக்ரயண இஷ்டி, பசுபந்தம் செய்யாமல்
புதிய அன்னம், மாம்ஸம் சாப்பிட்டால் ப்ராணன்
அவனை அக்நிகள் சாப்பிட விரும்புகிறார்கள்॥

29— யதாசக்தி ஆஸனம் போஜனம் இவை

காலம் உபசரிக்கப்படாமல் அதிதி, கிருஹஸ்
தனுடைய வீட்டில் இருக்கக்கூடாது ||

30 — பாஷண்டிகள் - புத்தர்கள் ஜைனர்கள், வேதவிருத்த மான கொள்கையை ஸ்தாபிப்பவர்கள், பகவிருத்தி, பைடா லவிருத்தியுடையவர்கள் (டம்பக்காரர்கள்), பாவ ச்சூளி - வெளிவேஷதாரிகள், வேதத்தில் நம் பிக்கையில்லாதவர்கள், வேதவிரோதமாக தர் க்கம் பண்ணுபவர்கள், இவர்கள் அதிதியாக ஸமயத்தில் வந்தால் வார்த்தையால் கூட உபசாரம் சொல்லாமல் அன்னத்தை மட்டும் கொடுத்து அனுப்பவேண்டும் ||

31 — வித்யாவ்ரதஸ்நானம் செய்த ஸ்ரோத்ரிய க்ருஹ ஸ்தர்களை ஹவ்ய கவ்யங்களில் - தெய்வ பித்ருகா ரியங்களில் உபசரிக்கவேண்டும், மற்றவர்களை விலக்கவேண்டும் ||

32 — குடும்பத்திற்கு இடையூறில்லாமல் யதாசக்தி, யதி, ப்ரம்மசாரீ பாஷண்டர்கள், ஜீவராசிக ளின் மேல ப்ரேமங்கள் இவ்வாதனல்லா ப்ராணிகளை யும் கிருஹஸ்தன் போஷிக்கவேண்டும் ||

33— பசியால் வருந்தப்படும் ஸ்நாதகன் க்ஷத்ரிய
அரசனிடமிருந்தும், தான் யாகாதிகளைச் செய்வி
ப்பவர்களிடமிருந்தும், சிஷ்யர்களிடமிருந்து
ம் (தனம்) யாசிக்கிறதைச் செய்யலாம், மற்றவ
ர்களிடம் கூடாது என்று சொல்கிறார்॥

34— ஸ்நாதக ப்ராம்மணன் பசியால் ஒருக்காலும்
வருந்தப்படக்கூடாது, சக்தியிருந்தால் கிழிந்
த அழுக்கடைந்த வஸ்திரம் கட்டக்கூடாது॥

35— ஸ்நாதகன், க்ஷவரம் செய்து கொண்டு
நியமத்துடனும், அடக்கத்துடனும், வெள்
ளையான வஸ்திரம் தரித்துக்கொண்டு, உ
ள்ளும் புறமும் சுத்தமாகவும், (நித்யம்) வேதாத்யயன
ம் செய்து கொண்டும் ஸாவதானமாக
தன் சரீரத்தை ரக்ஷித்துக் கொண்டும் இருக்க
வேண்டும்॥

36— மூங்கில் கம்பு, ஜலபூர்ண கமண்டலு, யக்
ஞோபவீதம், தர்ப்பை, அழகான தங்க
குண்டலங்கள் காதுகளிலும் தரிக்க வேண்
டும்॥

ஜ்யோதிஷ [illegible] 31–4 [illegible]
[illegible]

37 — லக்னத்தின், உதயகாலம்; அஸ்தமனகாலம்; ம
த்யான்ன காலம், கிரகணாதி காலம், ஜலத்தில் ப
்ரதிபிம்பம் [illegible]

38 — [illegible] (...) [illegible]
[illegible]
[illegible]

39 — [illegible] (...)
[illegible]
[illegible]
[illegible] வேண்டும் ॥

40 — காமாதுர [illegible]
[illegible]
[illegible]

41 — [illegible]
[illegible]
[illegible] ஆயுஸ் [illegible] ॥

42 — ஜன்மலக்ன காலத்தில் [illegible]
[illegible] ॥

43 — பார்வையுடன் [illegible] பாகத்திரத்தில் [illegible]
[illegible]

அவள் போஜனம் செய்யும்பொழுதும், கொ
ட்டாவி விடும் பொழுதும், தும்மும் பொழுதும்,
தன்னிஷ்டமாக வஸ்த்ரமின்றி செய்து கொண்டிருக்கும்
பொழுதும் பார்க்கக்கூடாது॥
45— ஒரு வஸ்திரத்துடன், உத்தரீயமில்லாமல் போ
ஜனம் செய்யக்கூடாது, நிர்வாணமாக ஸ்நா
னம் செய்யக்கூடாது, மார்க்கத்திலும், சாம்
பலிலும், பசுக்கொட்டிலும் மலமூத்ரவிஸர்ஜ
46— னம் செய்யக்கூடாது॥ உழுதபூமியிலும், ஜலத்
திலும், அடுக்கிய செங்கல் மேலுமிலும், மலையி
லும், இடிந்த கோவிலிலும், புற்றிலும், எக்
காலும் மலமூத்ரவிஸர்ஜனஞ் செய்யக்கூடாது॥
47— ப்ராணிகளுள்ளனவான பொந்துகளிலும் (பள்ளம்), நட
ந்துகொண்டும் நின்றுகொண்டும், நதிக்கரை
களிலும் மலை உச்சிகளிலும் மலமூத்ரவிஸர்ஜனஞ்
48— செய்யக்கூடாது॥ காற்று அக்நி ப்ராமணன் ஆதித்ய
ன் ஜலம் பசு இவைகளுக்கெதிராக புரீஷஞ்செய்யக்கூடாது॥
49— காய்ந்த புல் கட்டை முதலியவைகளால் பூமியை ம
றைத்து அதன்மேல், வாய்பேசாமல் உடம்பை மறைத்து

நீக்கொள்ளேதிலனை துணியால் மறைத்துக்கொ
ண்டு மலமூத்ர விஸர்ஜனஞ் செய்யவும்॥

50- பகலிலும் ஸந்தியாகால இரண்டிலும் வடக்குதிக்கை
பார்த்துக்கொண்டு இரவில் தெற்கு நோக்கியும் மலவிஸர்ஜனம்॥

51- இரவில் இருட்டினாலும் பகலில் பனி மேகத்தா
லும் இருளாலும் திக்கு தெரியாத காலத்திலும் இஷ்
டம்போல் எந்த திக்கிலும் திரும்பியிருக்கலாம்॥

52- அக்னி ஸூர்யன் சந்திரன் ஜலம் ப்ராம்மணன் பசு, காற்று
இவைகளை எதிர் நோக்கி மலமூத்ர விஸர்ஜனம் செய்யலாகாது

53- நல்லறிவு அடையும்॥ அக்னியை வாயால் ஊதக்கூடாது,
ரதிகாலம் தவிர மற்றகால ஸ்திரீயில் தன் ஸ்திரீயையும்
நிர்வாணமாகப் பார்க்கக்கூடாது, மலமூத்ராதிகளை
அக்னியில் போடக்கூடாது அக்னியில் பாதத்தைத்
தூக்கி சூடுபடுத்தக்கூடாது॥

54- கட்டிலுக்கு கீழாக அக்னியை வைக்கக்கூடாது, அக்
னியை தாண்டக்கூடாது, படுக்கும்பொழுது கால்
பக்கம் வைக்கக்கூடாது, ப்ராணோபத்ரவமான காரி
யத்தையும் செய்யக்கூடாது॥

55- ஸந்தியாகாலத்தில், போஜனம் கிராமாந்திரத்

நீர்க்குச் செல்லுதல், தூக்கம் இவைகள் கூடாது
பூமியை (நகங்களால்) கிளறக்கூடாது, தானே கிழித்துப்
போட்டுக்கொண்ட மாலையை தானே கழற்றக்கூடாது॥
56— மலமூத்திரங்கள், கோழை, மலம் சம்பந்தப்பட்டவஸ்
திராதிகள் ரத்தம் விஷங்கள், இவைகளை ஜலத்
57— தில் போடக்கூடாது॥ ஒருவருமில்லாத வீட்
டில் தனியாகத் தூங்கக்கூடாது, படிப்பு பணத்தால்
தனக்கு மேலானவரை தூங்கும்பொழுது எழுப்பக்
கூடாது, ரஜஸ்வலையுடன் பேசக்கூடாது, அ
ழைக்கப்படாமல் யாகத்திற்குச் செல்லக்
கூடாது, தெரிசனார்த்தம் செல்லலாம்॥
58— அக்கினிசாலையிலும் பசுக்கொட்டிலிலும் பிராம்ம
ணர்களின் முன்னிலையிலும் அத்யயனம் செய்யும்
பொழுதும் போஜனகாலத்திலும் வலது கையை வெளி
யே போட்டுக்கொள்ள வேண்டும்॥
59— அயலான் பசு மற்றவனுடைய ஜலத்தையோ பா
லையோ குடிக்கும்பொழுது தடுக்கவோ பிறரிடம்
சொல்லவோ கூடாது, ஆகாயத்தில் வானவில்
லைப் பார்த்து மற்றவருக்குக் காட்டக்கூடாது॥

60— தீர்த்தங்களில்லாததும் அதிகமானவியாதியுள்ள
ஒருக்காலும்
ளதுமானகிராமத்தில்வஸிக்கக்கூடாது, ஒருபோ
துந்தனியாகவழிநடக்கக்கூடாது, மலையில்நெடு
நேரம்வஸிக்கக்கூடாது॥

61— ⊕ சூத்திரன் அரசனாகும் ராஜ்யத்திலும், பாபிகள்சூழ்ந்த
தும், புத்தசமணாதிபாஷண்டர் இருக்கைக்கூட்ட
டதும் சண்டாளாதிகளை உபத்ரவமுள்ளதுமா
னகிராமத்திலும்வஸிக்கக்கூடாது॥

62— ⊕ எண்ணெயெடுத்த பண்டத்துக்குமேலானவைகளை சாப்
பிடக்கூடாது, திருப்திக்குமேல் அதிகமாகபோஜன
ம்செய்யக்கூடாது, சூரியோதய, அஸ்தமனகா
லங்களில்சாப்பிடக்கூடாது, காலையில் அதிகமா
னதிருப்தி போஜனம்செய்தவன்மாலையில்சாப்பி

63— ⊕ டக்கூடாது॥ திறப்புகளானதில் ஜலபானமே
சேர்ந்திடக்கூடாது, இரண்டுகைகளையும்சேர்த்து
கைகளால்ஜலம்சாப்பிடக்கூடாது, பக்ஷணங்க
ளைமடியில்வைத்துக்கொண்டுசாப்பிடக்கூடாது,
ப்ரயோஜனமில்லாமல் அதைப்பார்க்கவேண்டும்
இதைப்பார்க்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கக்கூடாது॥

64 — சாஸ்திர விரோதமான, நர்த்தனம், கானம்,
வாத்யம் வாசித்தல் இவைகள் கூடாது, கையால்
தோளில் தட்டி சப்தம் எழுப்பக்கூடாது, பல்லைக்
கடித்து சப்தம் உண்டாக்குதல், ஆசையுடன் கழு
தை நாய் ஓலாண இவைகளைப் போல் சப்தம் எழுப்பு
65 — தல் கூடாது॥ எவ்வொருவரும் வெங்கலப் பாத்தி
ரத்தில் கால் அலம்பக்கூடாது, உடைந்த பாத்திரத்
திலும், மனதுக்கு ஸந்தேஹமானவற்றையும்
66 — சாப்பிடக்கூடாது॥ பாதரக்ஷை, வஸ்திரம்,
உபவீதம், அலங்காரம், புஷ்பஹாரம், ஜலபாத்திர
ம் இவைகள் மற்றவர்களுடையவைகளை உபயோ
67 — கிக்கக்கூடாது॥ அடக்கப்படாததுகளும், பசி
வியாதி உள்ளவைகளும், சேதமடைந்த கொம்பு
கண் குளம்பு வால் இவைகளையுடைய குதிரைகளோ
டு பூட்டிய வாகனங்களில் செல்லக்கூடாது॥
68 — அடக்கப்பட்டதுகளும், வேகமாகச் செல்லக்கூ
டியதுகளும், நல்ல லக்ஷணமுள்ளவைகளும்,
நல்ல நிறம் தோற்றம் இவைகள் உள்ளவைகளும்,
அதனதன் தேவானத்து பூட்டிய வாகனங்களிலான

அதிதியாக தான் இருந்தாலும் தெரியாமல் செல்ல வேண்
69 — டும்॥ இளம் காலை வெய்யில், பாடைப்புகை, உடை
ந்த ஆஸனம் இவைகள் கூடாது, நகங்கள் ரோமங்க
ள் இவைகளை நினைத்து வேளைகளில் வெட்டக்கூடாது,
நகங்களைப் பல்லால் கடிக்கக்கூடாது॥
70 — காரணமில்லாமல் மண்கட்டிகளை பொடி செய்ய
க் கூடாது (பாசக்கூடாது) நகத்தால் துரும்பு கிள்ளக்
கூடாது, உபயோகமற்ற கெட்ட எண்ணங்களை
தில் கூடாது, பரகாலத்தில் துன்பம் கொடுக்கும்
71 — செயல் கூடாது॥ கட்டை பொடி செய்பவன்
துரும்பு கிள்ளுபவன், நகம் கடிப்பவன், கோள் சொ
ல்லுபவன் உள் வெளி சுத்தமில்லாதவன் இவர்கள்
சீக்கிரம் தனது கிளையோடு அழிவார்கள்॥
72 — ⊕ அத்திரத்துடன், வைராக்கி, சாஸ்திர வாதங்கள்
செய்யக்கூடாது, தலைமுடிக்கு வெளியில் தெரியும்
புஷ்பம் சூடிக்கக்கூடாது, எருதோ பசுவும்
காளையின் முதுகின் மேல் ஏறிச் செல்லக்கூடாது॥
73 — அடைகிராமத்திற்குள்ளோ, வீட்டிற்குள்ளோ
நேர்வாசல் வழியே செல்லவேண்டும்;

குறுக்கு வழியாகச் செல்லக்கூடாது, இரவில்
மரத்தடியில் தங்கக்கூடாது॥

74 — வெறியொழுக்கும்
~~[illegible]~~ சூதாடக்கூடாது, தன் ஆடை
யை யாதொன்றுக்கின் கையால் எடுத்துச் செல்லக்
கூடாது, படுக்கையில் இருந்துகொண்டும், கை
யில் வைத்துக்கொண்டும், ஆஸனத்தில் பாத்தி
ரத்தை வைத்துக்கொண்டும் போஜனம் செய்ய

75 — க்கூடாது॥ எள்ளுஸம்பந்தமுள்ளவைகளை
இரவிலும் அஸ்தமனத்திற்குப் பிறகு சாப்பிடக்கூ
டாது, நிர்வாணமாகத் தூங்கக்கூடாது, எச்சி
ல் கையுடன் வெளியே (மேலாசிசத்தம் செய்யாம
ல்) செல்லக்கூடாது॥

76 — கால் அலம்பிய ஈரக்காலுடன் போஜனஞ் செ
ய்ய வேண்டும், ஈரக்காலுடன் சயனம் கூடாது,
ஈரக்காலுடன் போஜனம் செய்தால் ஆயுஸ் வ்ருத்

77 — தியாகும்॥ புதரான இடத்தில் செல்லக்கூடாது,
மலமூத்ரங்களை உற்றுநோக்கக்கூடாது (பார்க்கக்
கூடாது) கைகளால் [illegible] தலையைக் கடக்கக்கூ
டாது॥

78— தீர்க்ககாலம் ஜீவிக்க விரும்புபவன், தலை ரோமங்கள்
சாம்பல், எலும்புத்துண்டுகள், பருத்திவிதை, உமி இவைகளின்
79— மேல் உட்காரக்கூடாது॥ பதிதர்கள் சண்டாளர்கள்
புல்கஸர்கள், மூடர்கள், கர்விஷ்டர்கள் வண்ணான் முதலா
னவர்கள், அந்த்யாவஸாயிகள், இவர்களுடன் மரத்தின்
நிழல் முதலான இடங்களிலும், சேர்ந்து இருக்கக்கூடா
80— து॥ சூத்ரனுக்கு லௌகிகார்த்த உபதேசமும், தா
ஸனில்லாத சூத்ரனுக்கு உச்சிஷ்டான்னமும், ஹோமம்
செய்த சேஷமும், நேரிடையாக தர்மோபதேசமும், ப்ரா
யச்சித்த வ்ரதம் உபதேசித்தல் இவைகள் கூடாது॥
81— எவன் (ப்ராம்மணன்) சூத்ரனுக்கு தர்மோபதேசம்
வ்ரதோபதேசம் செய்கிறானோ அவன் சூத்ரனுடன்
அஸம்வ்ருதம் என்ற நரகத்தை அடைவான்॥
82— இரண்டு கைகளையும் சேர்த்து தன் தலையை
சொறியக்கூடாது, தலையை எச்சில் கையுட
ன் இருக்கும் பொழுது தொடக்கூடாது, அதுவுமின்றி
காதரச் செய்யும் நித்யநைமித்திக ஸ்நானம். ச
க்தி இருக்கும் பொழுது ஸ்நானம் (தலை முழுகி)
செய்ய வேண்டும்॥

83 கோபத்தால் தன்னுடையவோ பிறருடை
யவோ தலைமயிரை பிடித்து இழுக்கடாது,
தலையால் அடிக்கவோ அடித்துக்கொள்ள
வோ கூடாது, தலையில் எண்ணெய் தேய்த்துக்
கொண்டு அந்த எண்ணெயை உடம்பில் தேய்த்
துக்கொள்ளக்கூடாது॥

84 க்ஷத்ரியனுக்கு பொருக்காத அரசன், மாம்ஸம்
விற்று ஜீவிப்பவன், எண்ணெயாட்டுபவன், மத்
யம் விற்று ஜீவிப்பவன், தாஸியான பணத்தால்
ஜீவிப்பவன், இவர்களிடமிருந்து ப்ராமணன்
ப்ரதிக்ரஹம் வாங்கக்கூடாது॥

க்ஷேத்ர
85 மாம்ஸம் விற்பவனிடம் ப்ரதிக்ரஹ தோஷத்தைக்
காட்டிலும், வாணியனிடம் பத்து மடங்கு தோஷமும்
அதைக்காட்டிலும் பத்து மடங்கு மத்ய விக்ரயியி
டம், அதைக்காட்டிலும் பத்து மடங்கு தா
ஸி மேளம் பிழைப்பவனிடம் அதைக்காட்
டிலும் பத்து மடங்கு, க்ஷத்ரிய ராஜ ப்ரதிக்
ரஹ தோஷம்॥

86 க்ஷௌமங்ய வாயா பாரிபதிஷ்யாரம் ப்ராணிகின்

கொன்றவனுக்கு ஸமம அரசன், ஆகை
யால் அவனிடம் ப்ரதிக்ரஹம் செய்தல்
பயங்கர நரக ஹேதுவாகும்।

87— எவன் லோபமும் சாஸ்திரவாதியை மீறினவ
னுமான அரசனிடம் ப்ரதிக்ரஹம் (தானம்)
வாங்குகிறானோ அவன் வெவ்வொன்றிக்கே
லேஸாப் போகும் இருபத்தொரு நரகங்களையு

88— மடைவான்॥ அதாவது - தாமிஸ்ரம், அந்ததா

89-90— மிஸ்ரம், மஹாரௌரவம், ரௌரவம், கால
ஸூத்ரம், மஹாநரகம், ஸஞ்ஜீவநம், மஹாவீசி, தபந
ம், ஸம்ப்ரதாபநம், ஸங்காதம், ககோலம், குட்ம
லம், பூதிம்ருத்திகம், லோஹசங்கு, ருஜீஷம், பந்தா
நம், சால்மலி, நதீ, அஸிபத்ரவநம், லோஹதா

91— ரகம், என்று இருபத்தொன்று॥ இந்தத் தோஷத்
தை அறிந்தவர்களும் தர்மசாஸ்திரம் அறிந்தவர்
களும் வேதாத்யயனம் செய்தவர்களுமான ப்ராம்
மணர்கள், பரலோக ஸுகத்தை விரும்பி ரா
ஜாவிடமிருந்து ப்ரதிக்ரஹம் வாங்குவதில்லை,
ராஜப்ரதிக்ரஹம் மிகுந்த தோஷமென்பது கருத்து।

92 - அதிகாலையில் (ப்ராம்ம முகூர்த்தத்தில்) எழுந்திருந்து,
அன்று செய்ய வேண்டிய கார்யம், அர்த்தம், இவைகளை
யும் அதற்கு ஏற்படும் சரீர சிரமத்தையும், ஆலோசித்
து ப்ரம்மானுஸந்தானம் செய்ய வேண்டும்॥
93 - உஷக்காலத்தில் எழுந்து சௌசங்களை முடித்துக்கொ
ண்டு வெந்நீருடன் காலை மாலை ஸந்த்யாவந்தனம் கா
94 - யத்ரீ ஜபம் செய்ய வேண்டும்॥ ரிஷிகள் வெகுகால
ம் ஸந்த்யா காயத்ரீ ஜபம் செய்ததால் தீர்காயுஸ்,
நல்ல அறிவு புகழ் ப்ரம்ம தேஜஸ் இவைகளையடை
95 - ந்தார்கள்॥ ஆவணி அல்லது புரட்டாசியில் உபாகர்
மாவை ச்ரத்தையுடன் செய்து ப்ராம்மணன் நாலரை மாதங்களில் அத்
96 - யயனம் செய்ய வேண்டும்॥ புஷ்ய மாஸம் அல்லது
மாக சுக்ல ப்ரதமையில் கிராமத்திற்கு வெளியில் ப்ர
வாஹ ஜலத்தில் (மேற்பகல்) உத்ஸர்ஜனம் செய்யவும்॥
97 - உத்ஸர்ஜனம் செய்து அன்றும் மறுநாளும் அத்யய
98 - னம் செய்யாமல் பாரு செய்யவும்॥ பிறகு சுக்லப
க்ஷத்தில் வேதங்களையும் கிருஷ்ணபக்ஷத்தில் வேத
அங்கங்களையும் நன்றாய் படிக்கவும்॥
99 - ஸ்வர வர்ணங்கள் ஸ்பஷ்டமில்லாமலும், துரிதமு

னையையே பக்கத்திலும் வேதபடனம் கூடாது, பின் இரவில்
எழுந்து வேதம் படித்து விட்டு மறு தூங்கக் கூடாது॥
100— ப்ராமணன் காயத்ரீ முதலான சந்தஸ்ஸுடன் கூடிய மந்
திரபாகமாத்திரம் படிக்கவும், ஸௌகரியமிருந்தால்
மந்திர ப்ராமணம் இரண்டையும் படிக்கலாம்॥
101— முறைப்படி அத்யயனம் செய்பவரும், செய்து வைப்பவ
ரும் கூறப்போகும் அநத்யயன தினங்களில் வேதம் கூடாது॥
102— வர்ஷாகாலத்தில் இரவு காற்று சப்தம் பொழுதும் பகலில்
புழுதிக் காற்று வீசும் பொழுதும் அத்யயனம் கூடாது॥
103— மின்னல் இடியுடன் மழை பெய்யும் பொழுதும் ஆகாய
க் கொள்ளி விழும் பொழுதும் அநத்யாயம்॥
104— மேற்கூறிய மின்னல் இடி மழைகள் அக்னிஹோத்ர காலமான
ஸந்த்யாகாலங்களில் வந்தாலும் அகாலத்தில் வந்தாலும்
105— அநத்யாயம்॥ ஆகாயத்தில் பெரிய இடி சப்தம் கிரகங்களி
ன் ஸூர்ய சந்திர நக்ஷத்ரங்களின் சேர்க்கைகள் உண்டானாலும்
106— இவ் அநத்யாயம்॥ காலையில் இடி மின்னல் ஏற்பட்டால்
பகல் முழுவதும் மாலை ஏற்பட்டால் இரவு முழுவதும் அநத்யா
யம்
107— விசேஷமாக தர்மத்தை விரும்புபவருக்கு கிராமத்தி
லோ நகரத்திலோ துர்கந்தம் வீசும் பொழுதெப்பொழு
தும்

108 — அநத்யாயம்॥ கிராமத்தினுள் சவம் இருக்கும் பொ
ழுதும், பாபாத்மாக்களின் ஸமீபத்திலும், அழுகுரல் கேட்கும்
பொழுதும் கூட்டத்திலும் அத்யயனம் கூடாது॥
109 — ஜலத்திலும் நடுநிசியிலும் மலமூத்ரவிஸர்ஜனம் செ
ய்யும் பொழுதும், எச்சில் வாயுடனும் ச்ராத்த போ
ஜனம் செய்த தினத்திலும் மனதாலும் வேதம் கூடாது॥
110 — ஏகோத்திஷ்ட ச்ராத்த போஜனம் செய்தாலும், க்ஷத்ரிய
அரசனுக்கு புத்ர ஜனனம், கிரகணம் இவைகளுக்கு
111 — மூன்று நாள் அநத்யாயம்॥ சாஸ்திர ஞானமான
னானுடைய சரீரத்தில் [illegible] யோகித்து [illegible]
டையவராயினும், இவைகள் இருக்கும் வரையில்
112 — அநத்யாயம்॥ படுத்துக்கொண்டும், ஆஸனத்தில் கா
ப்ரௌடபாதம் ல்களை வைத்துக் கொண்டும் அவரில் சாய்ந்து கொ
ண்டும், மாம்ஸ போஜனம் செய்தும், ஆசௌச
அன்ன போஜனம் செய்தும், அத்யயனம் கூடாது॥
பண்டிகை
113 — ப்ரதிபத் பொழுதும் பானம் செய்தும் கேட்கும்
பொழுதும், ஸந்த்யாகாலத்திலும், அமாவாஸ்யை
சதுர்த்தசி, பௌர்ணமி, அஷ்டமி இவைகள் அந
114 — த்யாயம்॥ அமாவாஸ்யை இவைகளுக்கு முன்னை,

சதுர்த்தி சிஷ்யனுக் கெடுதலை, அஷ்டமி பௌர்
ணமிகள் வேதமறதியை உண்டாக்கும்; ஆகையால் இத்
தினங்களில் அத்யயனம் அத்யாபனம் கூடாது॥
115 — புழுதிமழை, திக்குகள் சிவக்கையில், நரிச்சத்தம், நாய் கழுதை
ஒட்டகசப்தங்களைக் கேட்கும் பொழுதும் பங்க்தியமாக
ர்களின் கூட்டத்திலும் அத்யயனம் கூடாது॥
116 — ஸ்மசானஸமீபத்திலும் கிராமஸமீபத்திலும், மாட்டுத்தொழு
விலும், ஸ்த்ரீஸங்கமத்தில் அணிந்திருந்த உடையுடன் சிராத்த
117 — தானம் செய்தும் அத்யயனம் கூடாது॥ கோ, வஸ்திரம் மு
தலான தானம் வாங்கும் பொழுதும் அத்யயனம் கூடாது, ச்ராத்த
118 — போஜனத்தை யெவராயாகிலும் கொள்பவன்॥ திருடர்களா
லும் கிராமத்தில் உத்பாதங்கள் ஏற்பட்ட காலத்தில் அத்ய
119 — யனம்॥ உபாகர்மா உத்ஸர்ஜனம் செய்தவர்களுக்கு மூன்
று நாள், அஷ்டகைகள், ருதுக்களின் கடைசி நாள்க
120 — ளுக்கும் ஒரு இரவு அத்யயனம்॥ குதிரை, யானை, ஒட்
டகம், தோணி, கழுதை, வண்டி, உயர்ந்த மரங்க
ளில் ஏறிக்கொண்டு அத்யயனம் கூடாது॥
121 — வாய்ச்சண்டை, கைச்சண்டை, ஸைன்யமத்தியத்தும்
இவைகளிலும் போஜனம் செய்த உடனும், அன்னம் ஜீர்ணமாகா

ஸமயத்திலும், வாந்தி செய்த உடனும் புளியேப்பம் வந்

122- த காலத்திலும் வேதம் ஓதக் கூடாது॥ அதிதியை வழியனுப்பி

ய உடனும், காற்று அதிவேகமாய் வீசும் பொழுதும், தன் சரீ

ரத்திலிருந்து ரத்தம் வரும் பொழுதும், காயம் பட்ட உ

123- டனும் அத்யயனம்॥ ஸாமகானத்தைக் கேட்கும்

பொழுது ருக்யஜுர் வேதபாடம் கூடாது, ஏக வேதம்

முடித்து, ஆரண்யகம் முடித்தோ அன்று வேறு வேதம்

124- ஆரம்பிக்கக் கூடாது॥ ருக்வேதம் தேவதைவத்யம்,

யஜுர்வேதம் மானுஷம், ஸாம வேதம் பித்ர்யம், அ

து ஆகையால் அசுத்தம் போன்றது ஆகையால் அதனா

லேயே ருக்யஜுர் வேதம் படிக்கக் கூடாது॥

125- மேற்கூறிய படி வேதத்தத்வத்தையறிந்த ஸாஸ்திரக்ஞர்கள்,

தினமும் ப்ரணவம் வ்யாஹ்ருதி காயத்ரிகளைச் சொல்

126- லி பிறகு வேதம் படிக்கவேண்டும்॥ பசுக்கள் தவளை

பூனை நாய் ஸர்ப்பம், கீரி எலி, இவைகள் அத்யயனகா

லத்தில் குறுக்கே சென்றால் அன்று அனத்யாயம்॥

(2)- வைத்யயால் தோர்க்கிரையாகும் பயனுக்கு, சுத்த

மான இடமும் தான் சுத்தமாக இருக்கவேண்டும்

இடசுத்தி இல்லையும் தான் அசுத்தமாயிருந்தாலும் அனத்

யாயம்

இவனுக்கு முன் கூறிய விதிகள் கிடையாது ||

128 — அமாவாஸ்யை அஷ்டமீ, பௌர்ணமி; சதுர்த்
தீ, இந்த திதிகளில் ஸ்நாதகன் எப்பொழுதும்
ப்ரஹ்மசர்யத்தை அநுஷ்டிக்க வேண்டும் இக்கா
லங்களில் ஸ்த்ரீஸங்கம் கூடாது ||

129 — போஜனம் செய்த பிறகும், ரோகியும்; நடுஇரவி
லும், அநேகவஸ்திரங்களுடனும், பழக்கமில்லாத
நீர்தேக்கங்களிலும் ஸ்நானம் செய்யக்கூடாது ||

130 — தேவதாவிக்ரஹங்கள், மாதா பிதா குரு ராஜா, ஸ்நாதகன்
பசு, தீக்ஷிதர், இவர்களுடைய நிழலை வேண்டுமென்
று மிதிக்கக்கூடாது (தாண்டக்கூடாது) ||
(சண்டாளனுடைய நிழலையும் மிதிக்க (தொட) க்
கூடாது ||

(129 - போஜனத்திற்கு பிறகு இப்படி ஸ்நானம்
கூடாது, தீட்டு ஏதாவது ஏற்பட்டால் செய்யலாம்.
சரீர அஸௌகரியம் இருந்தால் கழுத்துவரை ஸ்
நானம், அல்லது ஈரவஸ்திரத்தால் ~~[illegible]~~
துடைத்துக்கொள்வது அல்லது மந்த்ர
ஸ்நானம் செய்து ஆசமனம் ப்ராணாயாமம் செய்யலா
ம் மறுஉச்சரித்து ஸ்நானம் செய்து கொள்ளவும்)

இன்னொரு அந்த நோட்டு புக்கில்
பார்க்கவும்

இதில் ஏகதேச அனுவாதமாத்திரம்,
இவைகளைப் பின் வேறு பக்கங்களில்
பார்த்து நிச்சயிக்க வேண்டும்॥

உ

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீ குருப்யோ நம:।

சில வரைச் -

இந்த மநுஸ்ம்ருதியால் தமிழில் அநுவாதம் செய்யப்பட்ட நூலிடங்களில் ஒன்றும் தெளிவாக வாசாரித்திற்கு உரியது॥

ஸ்ரீ வ்யாக்யங்களில் மற்ற ஸ்ம்ருதிகளுடன் ஒப்பிட்டு தீர்மானம் செய்ய வேண்டும்।

இந்த மநுஸ்ம்ருதியால் கூறப்பட்டுள்ள சில விஷயங்கள் பொருந்தாமல் போகலாம் - இவ்வாறு சில விஷயமான ஸ்ம்ருதிகளைப் பொருந்த லத்திரத்தில் பெரியோர்கள் தெரியாததைச் சிந்தனை விட்டுச் செல்வதும் வேண்டாம்।

சில வேதங்களில் ப்ராமணர்களுக்கு சில சலுகைகள் அளித்திருப்பது உத்தம ப்ராமண விஷயம் இப்பொழுது அந்த ப்ராமண வாழ்வில்லை - இவை நெடிது தீர்த்தில் மனுவே கூறுகிறார்॥

அர்த்தீ — வாதி - அபியோக்தா
ப்ரத்யர்த்தி - ப்ரதிவாதீ
ப்ராட்விவாக: — ஜட்ஜ்
பந்தகம் - அடகு
ஆதி: - மவுஜனை
நிக்ஷேபம் — மவுஜனை (ஸீல்செய்யாதது)
ப்லெயின்
உபநிதி - ஸீலிட்டது (லக்குமுத்திரையுடன்)

~~ஸாஹஸம்~~ - தண்டனை, முதல் அபராதம் ரூ. 50 பணம்
மத்யம அபராதம் - 500 - பணம்
உத்தம அபராதம் - ஆயிரம்பணம் -
1 - கார்ஷாபணம் என்பது ஒரு பணம், தாமிரநாணயம் -
240 யவமணி எடை கொண்ட தாமிரநா
ணயம். கார்ஷாபணம் - 80 - பணம்.

அலோகம் மனுஸ்ம்ருதி - அத்யாயம்-4-

131- நடுப்பகல், நடுஇரவு, ஸந்த்யாகாலங்கள்,
இவைகளிலும் மாம்ஸத்துடன் சிராத்த போஜனம்
செய்த அன்று அதிக நேரம் வீதியில் நிற்கக்கூ
132- டாது॥ எண்ணெய்ஸ்நானம் செய்த ஜலத்தி
லும், மலமூத்திரங்களிலும், ரக்தம், கோழை,
சவைத்துத் துப்பிய தாம்பூலம், வாந்தி செய்தது,
இவைகளின் மேல் அறிந்து நிற்கக்கூடாது॥
133- விரோதி, சத்ருவான் ~~[illegible]~~ கூட்டாளி (ஸஹாயன்), பாபி,
திருடன், பரன்மனைவி இவர்களுடன் சேர
134- க்கக்கூடாது॥ இந்த லோகத்தில் மனிதனுக்கு
ஆயுளைக் குறைக்க பரதாரகமனத்தைக் கா
ட்டிலும் மேலான வேறு பாபம் கிடையாது॥
135- த்யுதிகளால் ஜ்வலித்தியவை நினைப்பவன்,
க்ஷத்ரியன், ஸர்பம், வேதசாஸ்திர ஸம்பன்ன
னான ப்ராம்மணன், இவர்கள் தன்காலம் செ
லாத்து (தளர்ந்து) இருந்தாலும் இவர்களை எப்
பொழுதும் அவமதிக்கக்கூடாது॥
136- இந்த மூன்றையும் அவமதித்தால் அவமதித்த
வனை

னரித்துவமே, ஆகையால் அறிவாளி அவமதிக்கக்கூடாது ||

137 — தனத்திர்க்காக முயற்சி செய்து அப்பொழுதகி
டைக்காவிட்டால் நான் பாக்யமில்லாதவன்
என்று தன்னை இழிவாக எண்ணக்கூடாது, ஆ
யுள் மரணம் வரையில் தனத்திர்க்காக முயற்
சி செய்ய வேண்டும் முயற்சித்தால் கிடைக்கா
மல் போகாது ||

138 — ஸத்யமே பேசவேண்டும் ஸத்யமாயினும்
ப்ரியத்தையே பேசவேண்டும் ப்ரியமெ
ன்பதற்காக பொய் பேசக்கூடாது இது ஸ

139 — நாதன தர்மம் || அமங்களமாயினும்
மேலானது என்றே, மங்களம் என்றே கூ
ற வேண்டும், உபயோகமற்ற விரோதத்தை
யோ விவாதத்தையோ எவரோடும் செ

140 — ய்யக்கூடாது || அதிகாலையிலும் இர
வும் வேளையிலும் நடுப்பகலிலும், ஊர்பெய
ர் தெரியாதவனோடும் சூத்ரர்களோடும்
தனியாகவும் போகக்கூடாது ||

141 — அங்கஹீனர்களையும், அதிகமான அவயவங்

கள் உள்ளவர்களையும், படிக்காதவர்களையும்
வயதில் பெரியவர்களையும், அழகில்லாதவர்கள்
பணமில்லாதவர்கள், தாழ்ந்த ஜாதிக்காரர்கள்
இவர்களை அவமதிக்கக்கூடாது॥

142— போஜனம், மலமூத்ர விஸர்ஜனம் செய்து சுத்தி செய்யாமல் ப்ராமணன், பசு, ப்ராமணன், அக்னிகளை தொடக்கூடாது, தான் அசுத்தமாக இருக்கும் பொழுது அசுகமில்லாமல் ஆகாயத்தில் சூரிய சந்திர நக்ஷத்ரங்களையும் பார்க்கக் கூடாது॥

143— அசுத்தனாக பசு ப்ராமணாதிகளைத் தொட்டால் ஆசமனம் செய்து கையால் ஜலத்தைத் தொட்டு இந்திரியங்கள் தோள் நாபி பாதங்களைத் தொட வேண்டும்॥

144-146 अविश्वसनीय

147— வேதத்தை நித்யம் தகுந்த காலத்தில் ஜபம் செய்ய வேண்டும், ஏனெனில் ப்ராமணனுக்கு அதை உயர்ந்த (முக்ய) தர்மமாக கூறுகிறார்கள், மற்றவை உபதர்மங்கள் எனப்படும்॥

148— எப்பொழுதும், வேதாப்யாஸம், சௌசம், தபஸ், அஹிம்ஸை, இவைகளால் முந்திய ஜன்மாவை

149- அறிவான் ॥ இந்திரிய ஜன்மாக்களையறிந்தால்
அதிலுள்ள கர்மவாஸனைத் துக்கத்தை யறிந்து
வைராக்யம், வேதாந்த இலவணமனனநிதித்யா
ஸனங்கள் செய்து பரிமம் ஸாக்ஷாத்காரம்
மோக்ஷத்தையு மடைவான் ॥

144- தான் ஆரோக்யமாக இருக்கும்போது
தன்னுடைய இந்திரியங்கள், மனம் வாணி இவை
களிலுள்ள ரோகங்களிவைகளைக் கா
ரணமில்லாமல் தொடக்கூடாது ॥

145- இஷ்டஸித்திக்காக கோரோசனை சந்தனம் பூசி
க்கொண்டும் இம்சேலை செய்து கொண்டும்,
சௌசம் இந்திரிய ஜயம் இவைகளுடனும்
தினந்தோறும் காயத்ரீ ஜபம் அக்னி ஹோம
மும் இவைகளை இச்சையுடன் செய்ய வேண்டும் ॥

146- நிச்சயபடி மங்கள ஆசாரத்துடன் நியம
ம் இந்திரிய ஜயம் ஜபம் ஹோமங்கள் செய்பவர்
களுக்கு தேவதைகள், மனுஷ்யர்கள் மேல்
உபத்ரவம் (இடையூறு) ஏற்படாது ॥

150- ஸாவித்ரீ ஹோமம், சாந்தி ஹோமம் இவை

த-ளை அமாவாஸ்யை பௌர்ணமாஸ்யை
காலங்களில் பூஜை செய்வதும்; அஷ்டகை
அன்வஷ்டகை சிராத்தங்களைப் பாதிக்கக் களைந்து
151— நூர் செய்ய வேண்டும்॥ மஹேந்த்ர ரேதஸ்வாமிக்கு
ஸம்பந்தமான அர்ச்சகர்கள், கால அமைப்புதல்
இவைகளை, கைக் கொடுத்துக் கொண்டியாவேலையே
செய்ய வேண்டும் (போட வேண்டும்)॥
152— மல~~ஹே~~வைர்ஜனம், அலங்காரம், ஸ்னானம்
பல் தேய்த்தல், (ளை) மை இட்டுக்கொள்ளல், தேவபூ
ஜை இவைகளை முறைப்படி வேலையே செய்ய வேண்டும்,
153— ஆலயபாத்ரங்கள், தாரமகர்களான பாரமண்ணு
த்திரர்களையும் ரக்ஷணைக்கு ராக அதாஹிரு
மாதாபிதா க்களிவர்களையும் பர்வகாலங்களி
ல் நேரில் காண வேண்டும்॥ (பர்வா அமாவாஸ்யாதி)
154— பெரியோர்களை ஆராதனம் செய்ய வேண்டும்
அவர்களுக்கு தேன் ஆஸனத்தைக் கொடுக்கவே
ண்டும், அநுஜனுவிலம் செய்து கொண்டு
பக்கத்தில் உட்கார வேண்டும், அவர்கள் செல்லு
ம் பொழுது பின் செல்ல வேண்டும்॥

155 — ச்ருதிஸ்ம்ருதிகளில் நன்கு சொல்லப்பட்ட
தும், தான் செய்யும் கர்மங்களோடு ஸம்பந்
தமுள்ளதும், தர்மத்திற்கு ப்ரமாணமான
துமான ஸாதுக்களுடைய ஆசாரத்தை ச்ர
த்தையுடன் நன்கு அனுஷ்டிக்கவேண்டும்॥

156 — ஸதாசாரத்தாலேயே, ஆயுர்வ்ருத்தி, நல்
ல புத்ர பௌத்ராதி பரம்பரை, குறைவில்லாத
தனம் இவைகள் கிடைக்கும், சரீரத்திலுள்ள
அவலக்ஷணம் தொலையுமென்றுங் கேள்॥

157 — துராசாரமுள்ள மனிதன் உலகத்தில் ஸாதுக்களால் நி
ந்திக்கப்படுவான், எப்பொழுதும் துக்கமுள்ளவனாக
வும் வியாதியுள்ளவனாகவும் ஆயுள் குறைந்தவனாக
வும் ஆவான்॥

158 — எவன் ஸதாசாரமுள்ளவனாகவு
ம் ச்ரத்தையுள்ளவனாகவும் இருக்கிறானோ, ~~ப~~
~~பி~~ பிறரைத் தூஷிக்காமலும் இருக்கிறானோ அவன்
லக்ஷணமில்லாதவனாகயிருந்தபோதிலும் நூறுவ
ருஷங்கள் ஜீவிப்பான்॥ (சர்மா)

159 — பிறரை எதிர்பார்த்து ஆகவேண்டியவை எல்லாவற்
றையும் கூடியவரையில் விடவேண்டும்;

எதுவோ (ஆத்மக்ஞானம் முதலியன) தன்னுடைய ஸ்ரேயஸாதன
மோ அவைகளை (அனுஷ்டானங்களை) ஊக்கத்துடன்
160 — செய்யவேண்டும்॥ இன்னொருவனை எதிர்பார்த்து-
இன்னொருவனுடைய ஸஹாயத்தை வேண்டுவனவெல்
லாம் துக்கம், தன்னுடைய ஸ்வாதீனத்துக்குட்பட்டவையெல்
லாம் சுகம், இதுதான் சுகதுக்கங்களுக்குலக்ஷ
161 — ணம்॥ எந்த கர்மாவை செய்யும்பொழுது மனதிற்கு
ஸந்தோஷம் ஏற்படுகிறதோ அதை ஊக்கத்துடன்
செய்யவேண்டும், தனக்கு பிடிக்காத காரியத்தைச்செ-
162 — ய்யக்கூடாது॥ உபநயனம் வேதாப்யாஸம் செய்து
வைக்கும் ஆசாரியர், வேதார்த்தவ்யாக்யானம் (ப்ரவ
சனம்) செய்பவர், மாதா பிதாக்கள், குரு, ப்ராம்ஹண
ர்கள், பசுக்கள், தபஸ்விகள், இவர்களுக்கு விரோ
163 — தமாக நடக்கக்கூடாது॥ நாஸ்திக்யம், வேதநி
ந்தை, தெய்வநிந்தை, த்வேஷம், டம்பம், கர்வம்,
கோபம், க்ரூரத்தனம், இவைகள் கூடாது॥
164 — புத்ரன் சிஷ்யன் இவர்களைத்தவிர மற்றவர்களைக்
குறித்து கோபத்துடன் தண்டத்தை ஓங்கவோ, அதால்
அடிக்கவோ கூடாது, புத்ரன் சிஷ்யன் யாராயினும் இவர்களை

தவறு செய்தால் அவர்களை இரக்ஷிப்பதற்க்காகத் திருத்
துவதற்க்காக லேசாக அடிக்கலாம்||
165— ஒருவன் பிராமணனைக் கொல்ல வேண்டுமென்று
தடியை ஓங்கினாலும் நூறு வருஷங்கள் தாமிஸ்ர
166— நரகத்தில் உழலுவார்கள்|| பிராமணனை கோ
பத்தினால் புல்லாலும் கூட தெரிந்து அடித்தால், நா
ய் முதலான இருபத்தொரு ஜன்மாவையெடுப்பா
167— ர்கள்|| அறியாமையால் யுத்தம் செய்யாத
பிராமணனுடைய தேகத்தினின்று ரக்தம் வரச்
செய்தால் பரலோகத்தில் மிகவும் அதிகமான துக்க
168— த்தை யடைவான்|| அடித்த பிராமணனுடைய
சரீரத்தினின்று ரக்தம் பூமியில் விழுந்து எத்தனை பு
ழுதிகளைக் கட்டுமோ அத்தனை வருஷங்கள், அ
டித்தவன் பரலோகத்தில் நாய் நரிகளால் சாப்
169— பிடப்படுவான்|| பிராமண விஷயத்தில் மேற்கூறிய
தோஷங்களை, அறிவாளி செய்யக்கூடாது||
170— பரதாரகமனாதி பாபம் செய்பவன், பொய் சாக்ஷி சொ
ல்லி பிழைப்பவன், எப்பொழுதும் பரஹிம்சை செய்ப
வன் இவர்கள் இவ்வுலகில் சுகமாக இருக்கமாட்டார்
கள்||

171 — பாபம் செய்து ஸம்பாதித்து தனவானாக ஒருவனிருந்தா
லும் பிறகு அந்த பாபத்தால் தனமிழந்து கஷ்டப்படும் நிலைமை
யை ஆலோசித்துத் தான் தர்மமாக நடந்து பணமில்லாமல் க
ஷ்டமடைந்தாலும் அதர்மத்தில் புத்தியை செல்லவிடக்கூ
172 — டாது॥ இவ்வுலகில் செய்த பாபம் உடனேயே பலனைக்
கொடுக்காது, அது நாளடைவில் தேகம் தனமிவைக
ளுடன் கூடவே அழிவான், எவ்வாறெனில், பசுவுக்குத்
தீனி வைத்தால் உடனேயே பால் கறப்பது போல் பலனளிக்கா
து, பூமியில் போட்ட விதை நாளடைவில் பலனளிப்பது
173 — போல் பலனளிக்கும்॥ ஒருவன் செய்த பாபம் அவ
னுக்கு பலனளிக்காவிடில், அவனுடைய புத்ரன், அல்லது
பௌத்ரன் இவர்களுக்கு பலனை அளிக்கும், செய்த பாபம்
174 — வீணாகாது॥ பாபத்தால் முதலில் வ்ருத்தியடைகிறான்,
அதனால் ஸௌபாக்யங்களைப் பெறுகிறான், சத்ருக்க
ளை ஜயிக்கிறான் பிறகு நாளடைவில் பூண்டோடு செல்
வங்களையுமிழந்து அழிவான்॥
175 — ஸத்யம் தர்மம் ஸதாசாரம் சௌசம் இவைகளை
எப்பொழுதும் ஸந்தோஷமாக அனுஷ்டிக்கவேண்டும்,
சிஷ்யர்கள் புத்ராதிகளிவர்களையும் முறைப்படி

அனுஷ்டிக்கச் செய்ய வேண்டும், பொய் பேசா
மை, வாயடக்கம், ஹிம்ஸை செய்யாமை, கைய
டக்கம், அபக்ஷ்யபக்ஷணம் செய்யாமல் கிடைத்த அ
ன்ன பொருளை வயிறு அடக்கம் இவைகள் வேண்டும்

176- தர்மத்திற்கு விரோத அர்த்த காமங்களையும்
பின்னால் துக்கத்தை உண்டுபண்ணக் கூடிய
தர்மத்தையும், லோகஜனங்கள் வெறுக்
கும் தர்மத்தையும் விடவேண்டும்॥

177- உபயோகமற்ற பொருளோடாடுதல், ப்ரயோஜன
மில்லாமல் ஊர் சுற்றுதல், பரஸ்திரீயைப் பார்த்தல்
கோணிய, வஞ்சகம், அனாவசியமாக அதிகம் பேசு
தல், பிறர்க்கு ஹிம்ஸை செய்ய எண்ணம் செய

178- ய்தல் இவைகள் கூடாது॥ பிதா பிதாமஹாதிகள்
அனுஷ்டித்த சாஸ்திரார்த்தத்தை யனு
ஷ்டிக்க வேண்டும், அவர்கள் சென்ற வழியில்
நடப்பவருக்கு பாபம் ஏற்படாது॥

179-180- ருத்விக், புரோஹிதர், ஆசாரியர், மாமா, அதிதி,
தன்னையண்டி பிழைப்பவன், பாலன், கிழவர், நோ
யாளி, பண்டிதர், ஞாதிகள், மாப்பிள்ளையான

ஸம்பந்திகள், தாயாரைச்சேர்ந்தவர்கள், மாதாப
தாக்கள், ஸஹோதரி, நாட்டுப்பெண், ஸஹோதரன்,
புத்ரன், பார்யை, (தன்) பெண், வேலைக்காரர்கள், இ
வர்களோடு விவாதம் கூடாது॥
181 — விவாதம் செய்யாவிட்டால் ஸர்வபாபநிவ்ருத்தியும்
மேல்சொல்லப்பட்ட (புண்ய) போகம் லோகப்ராப்தியும் கிடைக்
182 — கும்॥ மேற்கூறியவர்களுடன் விவாதம் செய்யாததால்
ம-185 அவர்கள் ஸந்தோஷமடைகிறார்கள், அதனால் புண்யலோக
ப்ராப்தியுமுண்டு। ஆசார்யரால் ப்ரும்மலோகம், பி
தாவால் ப்ரஜாபதிலோகம், அதிதியால் இந்திரலோ
கம், ருத்விக் தேவலோகம், (ஸஹோதரி நாட்டுப்பெண்கள்) பந்துக்கள் அப்ஸரஸ்
லோகம், மாதாவைச்சேர்ந்தபந்துக்கள் வைச்வதே
வலோகம், மாப்பிளை போன்ற ஸம்பந்திகள் வருண
லோகம், மாதா மாமா, பூலோகம், பாலன் வ்ருத்தன்,
ஏழை நோயாளி, இவர்கள் அந்தரிக்ஷலோகம், இவை
கள் கிடைக்கின்றன: மூத்த ஸஹோதரன் பிதாவுக்
கு ஸமம், பார்யை புத்ரன் தன் சரீரம், வேலைக்கா
ரர்கள் தன் நிழல், பெண் தன்னுடைய கிருபைக்கு
பாத்திரமானவள், ஆகையால் இவர்கள் தன்னிக்

இழிவாக அவமரியாதையாகப் பேசினாலும்
வகித்துப்படாமல் பொறுத்துக்கொண்டு அவா
ஒருவரொடும்
களுடன் விவாதம் செய்யக்கூடாது॥
186 — வித்யை தபஸ் ஆசாரம் இவைகளிருந்தால் ப்ரதிக்
ரகம் செய்ய யோக்யதையுண்டு, யோக்யதையிருக்கினு
ம் அதிலேயே அதிகம் இருக்கக்கூடாது, ஏனெனில்
ப்ரதிக்ரகம் செய்பவனுக்கு ப்ரம்ம தேஜஸ் சீக்கிரம்
187 — அழிகிறது॥ த்ரவ்யங்களை ப்ரதிக்ரகம் செய்யும்
விதியை - த்ரவ்யங்களுக்குரிய தேவதை அதற்குரிய
மந்திரம் இவைகள் தெரியாமல், விவேகி, பசியால்
வாடினாலும் ப்ரதிக்ரஹம் செய்யக்கூடாது॥
188 — தங்கம், பூமி, குதிரை, பசு, அன்னம், வஸ்திரம்,
எள், நெய், இவைகளை, வேதம் முறை அறியா
தவன் ப்ரதிக்ரகம் செய்தால் அக்நியால் மரம் எ
ரிக்கப்படுவது போல் அழிவான்॥
189 — வித்யை தபஸ் இல்லாதவன் ஸ்வர்ண ப்ரதிக்ர
கம் (தானம்) வாங்கினால் அவனுடைய அன்ன
ம் ஆயுஸ் இவைகளையும், கோதானம் பூமி
தானம், சரீரத்தையும், குதிரைகளையும்

வஸ்திரம் தோலையும், நெய் தேஜஸ்ஸையும் என்
190 – பந்த்திகளையும் எரிக்கும்॥ தபஸ் அத்யயனம்
இல்லாத ப்ராமணன் ப்ரதிக்ரஹம் செய்வதில்
ஈ. ஈடுபட்டால் கல்தோணியால் ஏறியவனுடன்
முழுகுவது போல் தானம் கொடுத்தவனுடன்
191 – நரகத்தில் விழுவான்॥ ஆகையால் அவித்வா
ன் இழிய ப்ரதிக்ரஹம் செய்தாலும் சேற்றில் அழுந்
தும் பசுவைப் போல் நரகத்தில் விழுவான்॥
192 – தர்மத்தை அறிந்தவன், பூனை போலும் கொக்குப் போ
லும் தார்மிக வேஷம் போடும் வேதார்த்தம் தெரியா
த ப்ராமணனுக்கு தீர்த்தம் கூட தானமாகக் கொ
193 – டுக்கக்கூடாது॥ ந்யாயமாக சம்பாதித்த பண
மாக இருந்த போதிலும், பூனை, கொக்கு வே
ஷம் போடுபவன் வேதம் படிக்காதவன், இவ்
வர்களுக்கும் தானம் கொடுத்தால் கொடுத்த
வன் வாங்கியவன் இவர்களும் நரகமடைவார்கள்
194 – தான சாஸ்திரம் தெரியாத தானம் கொடுப்பவன் வாங்கு
பவன் இவ்விருவர்களும் கல்தோணியால் செல்பவன் போ
ல் இருவரும் நாசத்தை அடைவார்கள்॥

195 — பரரறிய தர்மம் செய்பவன், பரர்பொருளில் ஆசையுள்ள
ளவன், வியாஜமாக தர்மம் செய்பவன், டம்பக்காரனா
கக் கொடுத்து பொருளை அபகரித்து ஜனங்களை ஏமாற்
றுபவன், பரஹிம்ஸை செய்பவன், பொறாமையால் எ
ல்லோரையும் தூஷிப்பவன், [ஆசாரமில்லாதவன்] பூனை போல் நடப்பவன், ॥
196 — தான் அடக்கமுள்ளவன் போல் கீழ்ப் பார்வையுள்ளவ
ன், கொடூரமான பாவமுள்ளவன், மற்றவனைக் கெடுத்துத்
தான் வாழ நினைப்பவன், போலியான அடக்கமுள்ள
197 — வன், கொக்குப் போல் நடிப்பவன், இவ்விதம் கொக்
கு விரதமும், பூனை விரதமும் உள்ள பிராமணர்கள் அந்த
பாபத்தால் அந்ததாமிஸ்ரமென்ற நரகமடைவார்கள்।
198 — பாபத்தைச் செய்துவிட்டு அந்த பாபத்தை மறைத்து
ஸ்திரீ சூத்திரர்களை அப்பாவிகளை ஏமாற்றி வ்ரதமனுஷ்
199 — டானம் செய்யக்கூடாது ॥ மேற்கூறப்பட்ட பிராமணர்க
ள் இவ்வுலகிலும் மறுலகிலும் வேதிகர்களால் நிந்
திக்கப்படுகிறார்கள். வஞ்சகமாக வேஷமாக
200 — ச் செய்த விரதம் ராக்ஷஸர்களை அடையும், தான்
பிரம்மசாரியல்லாமல் வேஷம் போட்டு பிக்ஷ
யெடுத்தால் அவன் மறுஜன்மமான பசுவே

சாரிகளுடைய பாபத்தை ஏற்கிறான், நாய்மூ
லமான பாப ஜன்மாவையும் அடைவான்॥

201 — புறத்தில் சொந்தமான கிணறு குளம் இவைகளி
ல் ஸ்நானம் செய்தால், அவனுடைய பாபத்தில் கா
ல் பாகத்தை ஸ்நானம் செய்தவன் அடைவான்॥
அனையாய்ஸ்டபாது।

202 — வண்டி குதிரை வாஹனம், படுக்கை, ஆஸனம்,
கிணறு, பூந்தோட்டம், வீடு, இவைகளை, சொந்
தக்காரரின் அனுமதியில்லாமல் உபயோகித்தா
ல், அவனுடைய பாபத்தின் கால் பாகத்தை உப
யோகித்தவன் அடைவான்॥ ஸ்நானத்திற்கு வேறுவழி
யில்லையானால் ஐந்து மண்ணை வெளியில் எடுத்
துப்போட்டுவிட்டு ஸ்நானம் செய்யவும், சொ
ந்தக்காரன் பொது உபயோகத்திற்காக கொ
டுத்துவிட்டிருந்தால் பாதகமில்லை॥

203 — நதிகளிலும், தேவஸம்பந்தமான தடாகங்களிலும்,
தீர்த்தங்களிலும், பெரிய ஓடைகளிலும், அரு
விகளிலும், ஏதாவது ஒன்றில் நித்யஸ்நானம்
செய்யவும்॥

204 — ப்ரம்மசர்யத்தை, தவம், த்யானம், ~~[illegible]~~ ஸத்யம்

வஞ்சகமின்மை, அழுக்கின்மை, அஸ்தேயம்,
தானம் அடக்கம்
மாதுர்யம், தமம், இந்த்ரபந்தம் யமங்கள்।
ஸ்நானம், மௌனம், உபவாஸம், யாகம், வேதாப்
யாஸம், இந்திரிய அடக்கம், குருசேவை, சௌச-
ம், கோபமின்மை, ஜாக்ரதை, என்ற பத்துநிய
மங்கள், விவேகி, எப்பொழுதும் யமங்களை
ப்ரதானமாக ஸேவிக்கவேண்டும். நியமங்கள்
அடுத்தபடியாக ஸேவிக்கவேண்டும்॥

205— வேதாத்யயனம் செய்யாதவன், செய்யும்யாகத்தில் கிராமபுரோஹிதன்,
ஸ்திரீ, நபும்ஸகன் இவர்கள் இவர்களுக்காக ஹோமம்
செய்யும்யாகத்திலும் உத்ஸவத்திலும் அருகாறும் போஜனம்
206— செய்யக்கூடாது॥ ஸ்ரோத்ரியபுரோஹிதன் ஸ்திரீ
நபும்ஸகன் இவர்கள் எந்தகார்யமாவது ஹோமம் செ-
ய்கிறார்களோ அந்த கார்யம் அமங்களமாம், தேவர்க
ளுக்கு விரோதமானது ஆகையால் அவ்விதத்திலோ
செய்யக்கூடாது॥

207— குருகுரோன், கோபமுள்ளவன், ரோகயானி, இவர்களுடை
ய அன்னத்தையும், ரோமம் கேசம் பற்றிப்பட்ட
அன்னத்தையும், காலால் மிதிபட்ட அன்னத்தையும்

ஒருங்கானும் வாங்கும் புசிக்கப்படக்கூடாது ॥

208— ப்ரம்மஹத்தி கோஹத்தி முதலான பா பாபங்கள் செய்த
பாபிகளால் பார்க்கப்பட்டதும், ருதுஸ்வலையால் தொ
டப்பட்டதும், காக்கை முதலான பக்ஷிகள் கொத்தினதும்,
209— நாய் தொட்டதும், பசுவால் மோந்து பார்க்கப்பட்டதும்
முக்யமாக கோஷம் செய்து கொடுக்கும் அன்னம், ஸங்கா
ன்னம் (கூட்டுச்சமையல்) வேசியின் அன்னம், இன்
னும் சாஸ்திரஞர்களால் நிந்திக்கப்பட்ட அன்னமும்
210— புசிக்கப்படக்கூடாது ॥ சோரான்னம், ஜீவனத்திற்கா
10-217 க பாடுபவன், தச்சன், வட்டிக்காரன், யக்ஞதீக்ஷிதன்,
கிருபணன், ஜயிலில் இருப்பவன், மஹாபாபம் என்று ஸபை
தெரிந்து கத்தினவன், நபும்ஸகன், வ்யபிசாரஸ்த்
ரீ, டம்பாசாரி, புளித்துப் போனது, அதிகாலையில் பழைய
அன்னம், சூத்ரன், சாப்பிட்ட மீதம், வைத்யன், வேட்
டையாடி மாம்ஸம் விற்பவன், க்ரூரஸ்வபாவமுள்ளவ
ன், உச்சிஷ்ட போஜனம் செய்பவன், பயங்கரமா
ன கார்யம் செய்பவன், ப்ரஸவாதி ருதுஸ்வலா ஸ்த்ரீயை
த் தொட்டுச் செய்யும் அன்னம் (ஸூதிகான்னம்) தெரிந்து
கொண்டிருப்பார் பக்திஇல்லாமல் போஜனம் செய்யும்

மின் அபோசனம் செய்தால் மற்றவர்கள் சாப்பிட்ட

டாது, ஸூதகஸம்பந்தியல், மரியாதையில்லாமல் கொடுக்கு

ம் அன்னம், தேவதைகளுத்தேசத்தில்லாத மா

ம்ஸம், புத்ரனில்லாத விதவையானவள் அன்னம், சத்ரு,

நகராந்நம், பதிதாந்நம், ஸூதகாந்நம், கோள்சொ

ல்லுபவன், பொய்யே பேசுபவன், யாகபலனை விற்ப

வன், நடன், தையல்காரன், நன்றிமறந்தவன்,

கொல்லன், வேடன், வேஷம்போட்டு ஆடுபவன், தட்

டான், மூங்கில்வெட்டி ஜீவிப்பவன் (குறவன்), ஆயுதங்கள்

விற்பவன், வேட்டைநாய் வளர்ப்பவன், மத்யம் விற்பவன்,

வண்ணான், சாயம்போடுபவன், தயை இல்லாதவன்,

அறியாமல் வ்யபிசாரியான பத்னியுடையவன், அறிந்து வ்யபி

சாரிபத்னியுடையவன், பார்யையாள் சொல்படியே

ஆசௌசான்னம்

நடப்பவன், பத்துநாள்களுக்குள் பட்டது அன்னம், ம

னதிற்கு பிடிக்காத அன்னம், இவர்களுடைய அ

ன்னமும் இந்த இந்த அன்னமெல்லாம் சாப்பிடத்தகாதது॥

218— ராஜான்னம் தேஜஸ்ஸை அழிக்கும், சூத்ரான்னம் ப்ர

ப-219— ஹ்மதேஜஸ்ஸை, தட்டானுடைய அன்னம் ஆயுஸ்,

சக்கிலியனின் அன்னம் யசஸ், தையல்காரனுடைய

அன்னம் ஸக்தியையும், வண்ணானுடைய அன்
னம் பலத்தையும், கூட்டமான அன்னம் வேசியின்
அன்னம் தின்றவனை ஸ்வர்க்கலோகத்திற்குரிய பு
ண்யத்தையும் கெடுக்கும்।
220 — வைத்தியனுடைய அன்னம் அவனுடைய சீக்கி(பஸ்)ஸம
ம், வ்யபசாரியின் அன்னம் ரேதஸ்ஸமமெனவும்,
வட்டிக்காரனுடைய அன்னம் மலம், ஆயுதம்விற்பவ
னுடைய அன்னம் கொழுப்புமுதலான அசுத்தங்களெனவும்,
221 — இங்கு வரிசையாக எவர்கள் அபோஜ்யான்னர்
கள் (எவர்களுடைய அன்னம் போஜனத்திற்குரியதல்லவோ)
என்று கூறப்பட்டார்களோ அவர்களுடைய அன்ன
ம், அவர்களுடைய தோல் எலும்பு ரோமங்களுக்கு
ஸமம் என்று அறிவாளிகள் கூறுகிறார்கள்॥
222 — மேற்கூறிய சாப்பிடத்தகாத அன்னத்தை அறியாமல் ஒரு
தடவை சாப்பிட்டால் மூன்றுநாள் உபவாஸம், அறிந்து
சாப்பிட்டால் கிருச்ச்ரானுஷ்டானம், இதுபோல் ரேதஸ்
மலமூத்ரங்கள் போஜனத்திலும் ப்ராயச்சித்தம்॥
223 — ப்ராம்மணன் சாஸ்திரமறிந்தவன் பஞ்சயக்ஞம் செய்யா
த சூத்ரனிடமிருந்து பக்வமான அன்னம் கூடாது,

ஜீவனத்திற்கு வேறு வழியில்லையாகில் ஒருதினத்துக்கு
வேண்டிய அளவு அரிசி வாங்கிக்கொள்ளலாம்॥

224 — ஒருவன் வேதாத்யயனம் செய்த ச்ரோத்ரியனானால்
கிருபணன், மற்றொருவன் வட்டி வாங்கி ஜீவிப்பவன்
ஆனால் தாதா,, இவ்விருவர்களையும் தேவர்கள் விசா
ரித்து (ஆலோசித்து) இருவர்களும் ஸமமென்று ஸ்தீர்

225 — மானித்தார்கள்॥ ப்ரம்மதேவர் தேவர்களிடம் வ
ந்து, இந்த இருவர்களையும் ஸமமாகச் செய்தீர்கள்,
தாதாவுடைய அன்னம் ச்ரத்தையால் பரிசுத்தமா
னது, கிருபணனுடைய அன்னம் ச்ரத்தையில்லாத
தால் அசுத்தமானது என்று கூறினர்॥

226 — இஷ்டங்கள் யாகாதிகள், பூர்த்தங்கள் தடாகம் வெட்டுதல் முதலியன
இந்த இஷ்டாபூர்த்தங்களை ச்ரத்தையுடனும் பலனை
உத்தேசிக்காமலும் நியாயமாக ஸம்பாதித்த பணத்தா
லும் செய்தால் மோக்ஷபலனைக் கொடுக்கும்॥

227 — [illegible]களையுடைய ஸத்பாத்ர ப்ராம்மணன்
கிடைத்தால் எந்த ஸமயத்திலும் யதாசக்தி தானம் இஷ்
டாபூர்த்தங்களையும் ஸந்தோஷ மனதுடன் செய்யவேண்டும்॥

228 — யார் யாசித்தாலும் இல்லையென்று சொல்லாமல் ஏதா

வஸ்து பொருணையில்லாமல் கொடுக்கவேண்டும்; இவ்
விதம் கொடுத்துக்கொண்டு வந்தால் ஒருபோதும் நரகத்தி
லிறங்கும் பாபாத்மாக்களுடைய ஸகலபாபத்தையும் நி
வர்த்தி பண்ணக்கூடிய மஹாபாத்திரமென்றறிக.
229— ஜலதானம் செய்பவன் பசி தாகமில்லாத திருப்தியை
to 232— யடைவான், அன்னதானம் செய்பவன் மிகுந்த சு
கத்தையும், தீபதானம் செய்பவன் திவ்யமானஸற்
கதியையும், தீபதானத்தால் கண்ணையும், பூமிதானத்
தால் பூபதிபதவியையும், ஹிரண்ய தவிசம் தானத்தால் தீர்
க்காயுஸ்ஸையும், திலதானத்தால் உத்தமமான
கிருஹத்தையும், வெள்ளிதானத்தானத்தால் நல்ல ரூ
பத்தையும், வஸ்திரதானத்தால் சந்திரஸாலோக்யத்
தையும், குதிரைதானத்தால் அச்வநிதேவலோகத்
தையும், காளை (ரிஷபம்) தானத்தால், அதிக ஐச்வ
ர்யத்தையும், கோதானத்தால் ஸூர்யலோகத்
தையும், வாஹனம் பல்லக்குதானத்தால் நல்ல
பார்யையையும், அபயதானத்தால் ப்ரபுத்வத்தையும்;
தான்யதானத்தால் நிலையான ஸுகத்தையும்,
வேதம், வேதாந்தம் தானத்தால் (கற்பிப்பதால்)

ப்ரம்மாவின் லோகப்ராப்தியையும், அடைவான்॥

233— ஜலம் அன்னம் கோ, பூமி, வஸ்திரம், திலம், ஸ்வர்ண
ம், நெய், இவ்வாறு எல்லா தானங்களைக்காட்டிலும்
ம் ப்ரம்மதானம் (வேததானம்) சிறந்தது॥

234— எந்தெந்த பலனை உத்தேசித்து எந்தெந்த தானத்தை
ச்செய்கிறானோ அந்தந்த பலனை மறுஜன்மாவில்
கௌரவமாக அடைவான் (ரிக்காமயோகல் யோக்யம்)।

235— தானம் கொடுப்பவரும் வாங்குகிறவரும் கௌரவ
மாக (மரியாதையாக) கொடுத்து வாங்குவோர் ஸ்வர்க்கத்
தை இருவரும் அடைவார்கள், மாறுபட்டால் நரகம்॥

236— தபஸ் செய்தவன் கர்வம் கொள்ளக்கூடாது, யாகம்
செய்தவன் பொய் சொல்லக்கூடாது, ப்ராம்மணர்க
ளால் பீடை (உபத்ரவம்) ஏற்பட்டாலும் அவர்களை நிந்திக்கக்
கூடாது, தானம் செய்துவிட்டு செய்தேனென்று

237— சொல்லக்கூடாது॥ பொய் சொன்னால் யாகபலனை
கொடுக்காது. கர்வத்தால் தபஸ் பலனளிக்காது
ப்ராம்மண நிந்தையால் ஆயுஸையும், தானம்,
கொடுத்தேனென்று சொன்னால் பலனளிக்காது॥

238— பரலோகஸஹாயத்திற்காக ப்ராணிஹிம்ஸை

செய்யாமல், கறையான் புற்றை வளர்ப்பது போல்
கொஞ்சம் கொஞ்சமாகத் தர்மத்தை சேகரிக்க
239— வேண்டும்॥ ஏனெனில் — பிதா, மாதா, புத்ரன், பார்
யை, ஞாதிகள் இவர்கள் எல்லாம் பரலோகத்திற்
கு உதவ செய்யமாட்டார்கள் (அவர்கள்) தர்மம் ஒன்
240— றே உதவ செய்யும்॥ ப்ராணியானவன், ஒருவனா
க வே பிறக்கிறான், மரணமடைகிறான், புண்ய பாப
லனை யனுபவிக்கிறான், மற்றவர்களோ இல்லை॥
241— மரணத்திற்குப் பிறகு இந்த சரீரத்தை பந்துக்கள் கட்
டை போலும் மண் போலும் வீசி எறிந்துவிட்டு திரு
ம்பிப் பாராமல் போய்விடுகிறார்கள், ஜீவனை தர்மம்
242— ஒன்றே தொடருகிறது॥ தர்மஸஹாயத்தால் தா
ன் கொடிய நரகதுக்கத்தைத் தாண்டுகிறான், ஆ
கையால், தர்மஸஹாயத்தை எப்பொழுதும் சம்பா
டவேண்டும் (கொஞ்சம் கொஞ்சமாக சேகரிக்க வேண்டும்)
243— தர்மத்தையே விடாது அனுஷ்டித்து வரும்பொழு
து எதிர்பாராமல் பாபம் நேர்ந்துவிட்டால் அந்த பாபத்
தை நிவ்ருத்தி செய்ய உபவாஸாதி தபஸ்ஸை செய்
யும் புண்யத்தின, பாபம் நீங்கியதால் ப்ரகாசமான

அவனே, தர்மமே சீக்கிரம் ஸ்வர்க்க ரூப
பரலோகத்தையடையச் செய்கிறது॥

244— தன் குலத்தை மேன்மைப்படுத்த விரும்புபவ
ன் கேவலமாகவே ஆசாரம் குணங்களையுடைய
உத்தமோத்தமர்களுடனேயே எப்பொழுதும்
கன்யாதானம் முதலான ஸம்பந்தங்களை
ச் செய்யவேண்டும், கீழ்க்கீழ் உள்ளவர்க
ளுடன் ஸம்பந்தத்தை விடவேண்டும்॥

245- மேன்மேலும் உத்தம ஸம்பந்தத்தைக் கொ
ண்டு தாழ்ந்த ஸம்பந்தத்தை விடும் ப்ராம்ம
ண் மேன்மையடைகிறான், மாறுபட்டால் சூ
த்ரனுக்கு ஸமமாகிறான்॥

246— ஆரம்பித்த காரியத்தை முடிப்பவனும், தயையுள்ளவ
னும், சீதோஷ்ணாதிகளை ஸஹிப்பவனும், கொடிய செயல்
உள்ள மனிதர்களுடைய சேர்க்கையை விடுபவனும்,
பரஹிம்ஸை செய்யாதவனும் உறுதியான இந்த்ரிய நி
யமம் தானம் உள்ள புருஷன் ஸ்வர்க்கத்தையடைகிறான்॥

அனிமுறையில்லாமல் நேர்மையாக நடக்கவேண்டும்,
சிறிய குற்றம் செய்த பிராம்மணர்களிடம் தயவு
33— உடையவனாக இருக்கவேண்டும்॥ மேற்கூறிய நல்லவனை
முன்ன அரசன் உஞ்சவிருத்தி ஜீவனம் செய்பவனாயினு
ம் (எளியவன்) அவனுடைய கீர்த்தி, ஜலத்தில்விட்ட எ
34— ண்ணெய்த்துளிபோல் உலகில் பரவும்॥ அதற்கு மாறாக
ஒழுக்கமில்லாத இந்திரியஜயமில்லாத அரசனுடைய கீர்த்தி
ஜலத்தில்விட்ட நெய்த்துளிபோல் குவியும்; பரவாது॥ (சுருங்கும்) -
35— வர்ணாச்ரமங்களாகிய ஸ்வதர்மங்களையனுஷ்டிக்கு
ம் பிராமணாதிவர்ணங்களையும் பிரம்மசர்யாதி ஆச்ர
மங்களையும் ரக்ஷிப்பதற்காக ராஜா பிரம்மா
36— வினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்॥ பிரஜைகளைக் காக்க
வேண்டிய அந்த அரசன் மந்திரிகளுடன் செய்யவே
ண்டியவைகளைத் தர்மங்களையும் கூறுகிறேன்॥

37 — தினந்தோறும் காலையில் எழுந்து அர்த்த தந்தி
ரம் வேதங்களையும் நீதி சாஸ்திரங்களையும் அறிந்
த பிராமணர்களை அரசன் சேவிக்க வேண்டும்;
அவர்கள் கூறும் உபதேசத்தைக் கேட்க வேண்டும் //
38 — வயதிலும் தபஸிலும் பெரியோர்களான வே
த்ரவித்யரான பிராமணர்களை (எல்லாம் புரிந்த சாஸ்திரா
ன) யோகிகள் கொடுத்த நிலையில் அரசன்
சேவிக்கவும்; அவ்வாறு அரசனை ராஜ்யலக்ஷ்மி
சூழ்ந்து நிற்பாள் (நிலைபெறுவாள்) //
39 — அரசன் எல்லா பாவத்திலேயும் நீதி ஸ்மிருதிகளையும்
அர்த்த சாஸ்திரக் ஞானத்தால் நீதிமான்களையும்
அடக்க வேண்டியவைகளையும் இருந்த போதிலும்
சாம அமைதியில் தேர்ச்சி பெற்ற வித்யா பிராமண
ர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும், வித்யையறி
விழியமுள்ள அரசனுக்கு எதிராலும் கெடுதல்
40 — ஏற்படாது // சதுரங்க சைன்யங்கள் கொண்டது
ம் அரசர்களும் வித்தியை யில்லாமையால் அழி
ந்துபோயினர், வினயத்தால், அரசர்கள், சைன்ய
ஸ்வமில்லாவிடினும் வனத்தில் வசித்தும் ராஜ்யத்தை

41 — அவரவர்களின் // ஸ்வபாவத்தினால், வேறான,
ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர
42 — ர்களின் அந்தந்தவர்களின் // ஸ்வபாவத்தால் பகுத்து ப்ராம்ஹ
ணன், மனோ நிக்ரஹத்தையும், இந்த்ரிய
நிக்ரஹ தபஸ் [illegible] யையும், ஆஸ்திக்ய புத்தியை
யும் ஞானத்தையும் அறியத்தக்கவர் //
43 — அரசனைப் போலவே தர்மத்தை விடாமல், வேதங்களை
படித்து வேதங்களின் அர்த்தத்தை தெரிந்து கொ
ள்ள வேண்டும், அறிந்தவர்களிடமிருந்து பர்
மார்த்த அர்த்த ஞானத்தையும், தர்க்க சாஸ்த்
ரத்தையும் [illegible] நியாய நியமத்தை
வருத்தும்
தவிர் [illegible] யோகத்தையோ அடையாமலி
ருக்க ஆத்மஞானத்தையும் [illegible]
[illegible] தெரிந்து கொள்ள வேண்டும்,
44 — க்ருஷி [illegible] கோரக்ஷ வாணிஜ்யம் எல்லா
ரும் செய்து கொள்ள வேண்டும், இந்த்ரியங்களை அ
டக்குதல் தான் [illegible] தொழில் [illegible]
45 — ஆனால் // காமத்தால் ஏற்படும் கார்யங்கள்,
கோபத்தால் ஏற்படும் கார்யங்கள், இவைகள், [illegible]

குலத்தில் ஸ்வர்க்கத்தையும் துக்கத்தையும் கொடுப்ப
வைகள், எளிதில் விடமுடியாதவைகள், இவைகளை அரசன்
முயற்சிசெய்து ஜெயிக்க வேண்டும் (படவேண்டும்॥)

46 - காமத்தாலுள்ள பாபகாரியங்களில் அதிகம் ஈடுபடும்
அரசன் அர்த்தம், தர்மம் இவைகளை இழப்பான், கோபகா
ரியங்களில் ஈடுபட்டால் ஜனங்களின் கைத்தால் கொ

47 - லையே இழக்கிறான்॥ வேட்டையாடுதல், சூதாட்ட
ம், பகல் தூக்கம், பரனைத்தூஷித்தல், ஸ்த்ரீஸம்போகம்,
மத்யபானம், நிருத்யம், கீதம், வாத்யங்கள், வீணாக ஊர்
சுற்றுதல், இந்த பத்தும் காமத்தால் உண்டாகிற [illegible]யானவை॥

48 - கோள் சொல்லுதல், ஸாதுவைத் துன்புறுத்தல் முதலியன,
(ஸாஹஸம்) நம்பகனைத் கொல்லுதல், பொறாமை, பிற
ருடைய நல்லகுணத்தை குற்றமாகச் சொல்லுதல், பொருளைப
றித்தல், கொடுக்க வேண்டியதைக் கொடாமை, கடு
மையாகப் பேசுதல், கடுமையாகத் துன்புறுத்தல், இந்த
எட்டும் கோபத்தால் உண்டாகும் கஷ்டம்॥

49 - இந்த இரண்டு கூட்டங்களுக்கும் மேலான லோபம் என்
று பெரியோர் கூறுகிறார்கள். ஆகையால் அதை முயற்சி

50 - யுடன் வெல்ல வேண்டும்॥ மதுபான சூதாட்ட ஸ்த்ரீ [illegible]

பத்தில், மத்யபானம்; சூதாட்டம், ஸ்திரீ போகம்; வே
ட்டை இந்நான்கும் அதிகமானதுக்குத் துக்கக் காரண
51 — மென்றும் அறியவும்॥ கோபத்தால் உண்டாகும் எட்டில்
கடுமையான தண்டனை, கடுமையாகப் பேசுதல், பொரு
ளை அபகரித்தல் கொடுமை, இந்த மூன்றும் அதிகமாகத்
52 — தீமைக்குக் காரணம்॥ மூன்றாவதான இடத்தில்
மெய்யானதாகக் கூறப்பட்டது இதில் யானைகளை
க் கட்டுதலும் என்றுமிவை கடுமையானவை என்றுக்கு
53 — மாறான அரசன் அறிய வேண்டும்॥ மூன்றுவிதமானவைக
ளில் இருபதும் அரசன் நடைமுறை வான், அதில் இருபது
தவம் சாஸ்திர அறிவால் செய்து பாடைச் செய்வதால்
54 — வர்க்கத்துடனே வான்॥ பரம்பரையாக சேவை செய்பவ
ர்களும், சாஸ்திரம் அறிந்தவர்களும், யுத்தத்தில் அறிந்தவர்க
ளும், உயர் குலத்தில் பிறந்தவர்களும்; (நல்ல) சோதனை செய்யப்
பட்டவர்களுமான மந்திரிகள், எட்டு அல்லது ஏழு பேர்க
55 — ளாகிய மிக்க வேண்டும்॥ ஸர்வபமான பெரியவர்களும்
பெருங்கஷ்டமடைவதுகளாக இருக்கிறோம், மிகுந்த
வருமான பெரிய ராஜ்யகாரியம் ஸாதனமில்லாமல் செ
வதாக எப்படிச் செய்ய முடியும்॥

56— அரசன், ஸமாதானம், யுத்தம் இந்த விஷயங்களில் மந்தி
ரிகளுடன் முறைக்காலம் மனம் விட்டுப் பேசவேண்டும்,
அவ்வாறே, நாதுரமாதனை த்யஸ்க்கிர போவதித் ஸ்ராஷ்ய
படையும், பணவரவுத்தேவைகளையும், தன்னுடைய ராஷ்ட்ரம்
தேசத்தினைக் காப்பாற்றுவதைக் தேவாணைக்கல
பாதுகாப்பது குறித்தும், தான்யம் தன்கம் தேவானதுக்
கின்றபத்திரமாகப் பெறப்பட்டவைகள் குறித்தும், தன்னையும் ரா
ஜ்யத்தையும் காத்துக்கொள்வது குறித்தும், ராஜ்யத்தில்
வருமானத்தை நல்ல விஷயத்தில் விநியோகம் செய்வ
57— து குறித்தும் ஆலோசிக்கவேண்டும்॥ தனிமையான இட
த்தில் மந்திரிகளுடைய தனித்தனி அபிப்ராயமறிந்து
பிறகு அவர்களனைவருடைய அபிப்ராயமறிந்து தனக்கு
எது நன்மையாகத் தெரிகிறதோ அந்தக்காரியத்தைச் செய்ய
58— வேண்டும்॥ இந்த எல்லா மந்திரிகளுக்குள்ளும், தார்மிக
னும் வித்வானுமான ஒரு ப்ராமணனுடன் ஸந்திவிக்ர
ஹம் முதலான விஷயங்கள் குறித்து ஆலோசிக்கவேண்டும்॥
59— எப்பொழுதும் அந்தப்ராமணனிடம் நம்பிக்கை வைத்து
தான் செய்யவேண்டிய காரியங்களெல்லாவற்றையும்
தெரிவிக்கவேண்டும்; அவனுடன் தீர்மானித்து எல்லாவ

60 — க்ஷையும் செய்ய வேண்டும்॥ சுத்தமானவர்களும், புத்
திசாலிகளும், ராஜ்யத்திற்கு தனம் ஸம்பாதிக்கக் கூடிய
வர்களும், தர்மவான்களா என்று பரீக்ஷை செய்யப்பட்
டவர்களுமான மற்றவர்களையும் மந்திரிகளாகக் கொ
61 — ள்ள வேண்டும்॥ அரசனுடைய ராஜ்ய கார்யங்களில்
எத்தனை காரியங்கள் அத்தனை மனிதர்களால் செய்து மு
டிக்க முடியுமோ அத்தனை பேர்களை நியமி
க்க வேண்டும்; அவர்கள் சோம்பலில்லாதவர்களாகவும்
காரியம் செய்வதில் உத்ஸாகமுள்ளவர்களாகவும்,
அந்தக் காரியங்களை அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்;
62 — பணவரவு உள்ள உத்யோகங்களில் அந்த மந்திரிகளுக்
குள், பராக்ரமசாலிகளும், சாமர்த்யம் உள்ளவர்களும், உய
ர்குலத்தில் (நல்ல குலத்தில்) பிறந்தவர்களும், பணத்தில் ஆசையில்லாத
வர்களுமானவர்களை மந்திரிகளாக நியமிக்க வேண்டும்;
தங்கச் சுரங்கங்கள், கரும்பு தானியங்கள் முதலியன சே
மித்துவைக்கும் இடங்களிலும், போஜனசாலை, சயனகி
ருகம், அந்தப்புரம் இவைகளில் பயந்தவர்களை நியமி
63 — க்க வேண்டும்॥ ஸகலசாஸ்திரங்களிலும் தேர்ச்சியு
ற்றவனும், குறிப்பறிபவனும், ஒருவனுடைய தோற்றம் சேஷ்டை
களை

அறிபவனும், பஞ்சஸ்திரீ சேவானந்தத்தில் பற்றாத
சத்தியமானவனும், ஸௌர்யசாலியும் நல்ல இலக்ஷ
ணமுற்றவனுமானவனே தூதனைப் பிரயோகிக்கவேண்டும்॥
64 — ஜனங்களிடம் பிரீதியுள்ளவன், தருமத்தில் ஆசையுள்ளவ
னாய் சத்தியன், உரிய காலத்தில் காரியத்தைச் செய்பவன், ஞா
பகசக்தியுள்ளவன் (மறதியில்லாதவன்) தேசகாலங்களையறிந்
தவன், நல்ல தேகமுள்ளவன், பயமில்லாதவன், நன்றியே
சம்திருப்தியுள்ளவன், இவ்வாறு தூதன் அரசனுக்குக் கீழ்
ப்படியானவன்॥ 65 — ஐஸ்வர்யம் ஸேநாபதிக்கே அடங்கிய
தாக இருக்கவேண்டும், ஐஸ்வர்யம் அடக்கமுடையதாக
இருக்கவேண்டும் (அடக்கக் கட்டுப்பாடு) பொக்கிஷமு
மந்திரியும் அரசனுடைய அதீனத்தில் இருக்கவேண்
டும், எல்லா யோக்யமான சேனாதிபதியுடைய வசமா
க இருக்கவேண்டும்॥ 66 — விரோதிகளாக உள்ளவரை அரச
ர்கள் வென்று செலுவதற்கும், வெற்றியடையாதுறிந்த
இரு அரசர்கள் விரோதிகளாக ஆவதற்கும் தூதனு
டைய சேவையே காரணம்॥ 67 — தூதன், விரோதியான
எதிரி அரசனுக்குச் செய்ய வேண்டிய தன் காரியங்களில்
அந்த அரசனுடைய பிரஜைகள், அவர்களில், கலகத்

கொள்ளாவன், பணக்குறையுள்ளவன், அரசனால் அவமதி
க்கப்பட்டவன் இவர்கள் மெய்யாகவும்; அரசனுடைய
அறிவு தோன்றும் செயல்களை மேலும் அறிந்து
68 — ~~செய்ய~~ கொள்ள வேண்டும். அரசன் தானே மேல்மந்திரி
அரசனுடைய அபிப்ராயமறிந்து அதனைக் கேட்பம்
நேராகவன்னியம் செய்யப்படவேண்டும்.
69 — ஸ்வச்சமான ஜலம் புல் உடையதும்; அதிகமான கா
று வெய்யல் உள்ளதும் அதிகதான்யாதிகள் உள்ளதுமானதே
சத் ஜாங்கலம் எனப்படும்; அல்லது, தேசத்தில் ஸஸ்யமு
நலான மென்மையான மிருகங்கள் அதிகமாக உள்ளதும்.
ரோகம் இல்லாத உபத்ரவமில்லாததும்; பசுக்கள் புஷ்பங்க
ள் நிறைந்ததாம் ஜலமிருகங்கள் உள்ள அழகானதும்
தனக்கு எட்டுப்பக்கத்திலும் அரணுடையதும்; அட
வியகாட்டு ஜந்துக்களுடையதும் வியவஸாயம்ப
யமாறுபவர்களுக்கு யோக்யமானதுமானதேசத்
தில் வசிக்கவேண்டும்.
70 — பாஷாணம்[1]; சொற்கல் அல்லது கல்கோட்டை[2], அகழ்[3],
அட்டாங்காரம்[4], நான்குதிக்கிலும் சதுரமாக ஸ்தம்பம்[5],
மலை[6], இந்த ஆறுவகை அரண்களில் ஏதாவதொன்றிலு

லாவது சூழப்பட்டதாக நகரத்தை அமைத்து அதில்
71 - அரசன் வசிக்க வேண்டும்॥ இந்த ஆறு அரண்களில்
பல அனுகூலங்கள் இருப்பதால் கிரிதுர்க்கம் என்ற
72 - மலை சூழ் அரண் மேலானது॥ அந்த ஆறு அரண்களில்
பாலைவனம் இருக்குங்களாலும், கோட்டைப் பள்ளங்களாலும்,
ஜல அகழிகளில் ஸஞ்சாரமான ஜந்துக்களாலும், வனதுர்க்கம்
வாநரம் முதலான மிருகங்களாலும, ந்ருதுர்க்கம் என்
ற மனித அரண் ஆயுதபாணிகளாலும், மலை-கிரிதுர்க்கம்
தேவர்களாலும் காக்கப்பட்டதாக இருக்க வேண்டும்॥
73 - இந்த அரண்களில் இக்கெட்டு (வனம் முதலான) மிருக
ங்களை வேடர்கள் எவ்விதம் ஸௌலபமாக ஹிம்ஸை செ-
ய்ய முடியாதோ அவ்விதம் அரணால் காக்கப்பட்ட அ
ரசனை சத்ருக்கள் ஹிம்ஸை செய்ய முடியாது॥
74 - ஏனெனில் - கோட்டையின் மேலுள்ள ஒரு வில்லாளி
நூறு சத்ருக்களை வெல்லுவான், கோட்டையில் நூறு
பேர்கள் இருந்தால் பதினாயிரம் சத்ருக்களை வெல்லு
வான், ஆகையால் அரண் அவசியமானது॥
75 - அந்த கோட்டை, ஆயுதங்கள் தனதான்யங்கள்,
வாஹனங்கள், ப்ராமணர்கள், சில்பிகள், யந்திரங்

கள், ஆஹாரவஸ்துக்கள் முதலியவைகள் நிறைந்து
76 — இருக்கவேண்டும்॥ அரசன், அந்த கோட்டை
யின் மத்தியில் (உள்ளே) ஸர்வருதுக்களிலும், தேவதாக்கிருகம்
ஆயுதசாலை, அக்னிஹோத்ரசாலை, இவைகளுடனும்,
அகழ் கோட்டைகளுடனும்; எல்லாவற்றிலும்
உண்டான பழம் புஷ்பம் முதலானவைகளுடனும், வெ
ள்ளையடித்து மிகவும் வெண்மையாகவும், வாய்க்
கால் முதலான ஜலவஸதி, மரங்கள் நிறைந்ததாகவு
ம் தன் கிருகத்தை அமைத்துக்கொள்ளவேண்டும்॥
77 — அந்த கிருகத்தில் வஸித்துக்கொண்டு, தனக்கு ஸமமான
வர்ணம் (ஜாதி) நல்ல லக்ஷணம், உயர்குலப்பிறப்பு,
நல்ல ரூபம், நல்ல குணம், தன் மனதிற்கு ப்ரீதியை
கின் அமைந்தவளான பார்யையாக மணக்கவேண்டும்॥
78 — நல்ல புரோஹிதரையும் ருத்விக்கையும் வரிக்கவே
ண்டும், அவர்கள் ஸ்ரௌத ஸ்மார்த்த கர்மாக்களை
79 — ச் செய்வார்கள்॥ அரசன் அதிக (போது)மான தக்ஷிணைகளு
டன் அச்வமேதம் முதலான பலயாகங்களைச் செய்ய
வேண்டும், தர்மத்திற்கு இதுவே ப்ராமணர்களுக்கு
போகவஸ்துக்கள் வஸ்திரம் தனம் யாவற்றையும் தானமாக

80— க்கொள்ளக்கவேண்டும்॥ அரசன் நல்லமந்திரிகள்
மூலமாக வருஷத்தோறும் கொள்க்கவேண்டிய தா
ன்யம் முதலான கரத்தை (கிஸ்து) ப்ரஜைகளிடமி
ருந்து வசூல் செய்ய வேண்டும், தன் ப்ரஜைகளிடம்
தகப்பன் போல் அன்புடன் இருக்க வேண்டும்॥

81— ஸைந்யம், தனவரவு செலவு முதலான அந்தந்தப் பிரிவுகளில்
(டிபார்ட்மெண்ட்) அறிவாளிகளும் அந்தந்த காரியங்களில் தேர்ச்
சி பெற்றவர்களுமான அத்யக்ஷர்களை (டைரக்டர்ஸ், ஸூபரின்டெண்
டென்ட்ஸ்) நியமிக்கவேண்டும், அவர்கள் அரச
னுடைய அந்தந்த வேலை பிரிவுகளில் வேலை செய்பவர்க
ளுடைய வேலைகளைக் கவனிப்பார்கள்॥

82— குருகுலத்திலிருந்து ஸமாவர்த்தனம் செய்துகொண்டு
கிருகஸ்தாச்ரமத்திற்கு வரும் ப்ராமணர்களை அவ
ஸியம் தனதான்யங்களால் பூஜிக்கவேண்டும், அவ்வி
தம் ப்ராமணர்களுக்குக் கொடுக்கும் தனம் அக்ஷயமா
ன நிதி அரசர்களுக்கு என்று சாஸ்திரம் கூறுகிறது॥

83— ப்ராமணர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த நிதியைத்தி
ருடர்களோ சத்ருக்களோ அபஹரிக்கமாட்டார்கள்,
அதாக அழியவும் செய்யாது, ஆகையால் அரசன்

இருந்த அழிவில்லாத நிதியை பிராமணர்களிடம் வைக்கவே
84 — ண்டும்॥ அக்கினியில் ஹோமஞ் செய்யப்பட்ட ஹவிஸ்ஸு சில ச
மயம் தவறி கீழே விழலாம், வரண்டு போகலாம், அழிந்து
போகலாம், ஆனால் பிராமணனுடைய கையில் கொடுக்க
ப்பட்ட தானம் இவ்விதம் ஒருக்காலும் ஆகாது ஆகை
யால் அந்த தானம் அக்கினிஹோத்திரத்தைக் காட்டிலும்
85 — மேலானது॥ பிராமணர்களைத் தவிர மற்றவர்களுக்கு
க் கொடுக்கும் தானம் ஸாதாரணபலனுள்ளது, அ
னுஷ்டானமில்லாத ஜாதிமாத்திர பிராமணனுக்குக் கொ
டுக்கும் தானம் இருமடங்கு பலனுள்ளது, அத்யயனஞ்
செய்த பிராமணனுக்குக் கொடுக்கும் தானம் நூறாயிரமட
ங்கு, ஸகல வேத சாஸ்திர பாரங்கதனுக்கு அளிக்கும்
86 — தானம் அளவில்லாத பலனுடையது॥ தானம் வாங்கும்
பாத்திரத்தினுடையவும், கொடுப்பவனுடைய சிரத்தை
யையும் அபேக்ஷித்து தானபலனும், பரலோகத்தில் அல்
பமாகவோ அதிகமாகவோ அடையப்படுகிறது॥
87 — பிரஜைகளை ஆளும் ராஜா தனக்கு ஸமமானவனோ, தா
ழ்ந்தவனோ மேலானவனோ எவன் யுத்தத்திற்கு
அழைத்தால் க்ஷத்திரிய தர்மத்தை நினைத்து பின்வாங்
கக்கூடாது॥ (மநுக்க)

88 — யுத்தத்தில் பின்வாங்காமை, பிரஜைகளைக் காத்
தல், பிராமணர்களுக்கு (சேவை) சுச்ரூஷை செ
ய்தல் இவைகள் அரசர்களுக்கு ஸ்வர்க்கத்தைக்
89 — க்கொடுக்கும்॥ அரசர்கள் யுத்தங்களில் ஒருவரைக்
கொல்வதற்கு விரும்பி தன் சக்திகொண்ட
வரையில் பின்வாங்காமல் யுத்தம் செய்தால் தனஜ
யாதிலாபங்களுடன் ஸ்வர்க்கத்தை அடைவார்கள்॥
90 — யுத்தத்தில், மறைத்துவைக்கப்பட்ட ஆயுதங்களாலும்,
கண்ணிகளாலும், விஷம் தோய்த்தவைகளாலும், பழுக்
க நெருப்பால் காய்ந்தவைகளாலும் சத்ருக்களைக்
91 — கொல்லக்கூடாது॥ தான் தேரில் இருக்கும்பொழுது
தரையில் இருப்பவனையும், நபும்ஸகனையும், கை
கூப்பி அஞ்சலி செய்பவனையும், அவிழ்ந்த தலைம
யிரை உடையவனையும், உட்கார்ந்திருப்பவனையும், நா
ன் உன்னைச் சேர்ந்தவன் என்று கூறுபவனையும்॥
92 — தூங்குபவனையும், யுத்தத்திற்கு தயாரில்லாதவனையு
ம், வஸ்திரமில்லாதவனையும், ஆயுதமில்லாதவனையும்,
யுத்தம் செய்யாதவனையும், யுத்தத்தைப் பார்க்க வந்தவனை
யும், மற்றவனோடு யுத்தம் செய்பவனையும்॥

93— அடிக்கப்பட்டு யுத்தத்தினையுடையவனையும், பந்துவை
ப்பறித்ததால் சோகமடைந்தவனையும், மிகுதியாக காயம
டைந்தவனையும், பயந்தவன், பின்வாங்குபவன், இவ
ர்களையும் பெரியோர்களின் தர்மத்தையனுஸரித்துக்

94— கொல்லக்கூடாது॥ எந்த யுத்தவீரன் பயந்து பின்வாங்கி
நேரும்பொழுது எதிரிகளால் கொல்லப்படுகிற
னோ அவன் தன் யஜமானனுடைய பாபம் முழுவதை

95— யும் அடைவான்॥ கொல்லப்பட்டவனுடைய புண்ணியம் மு
ழுவதையும் எஜமானன் அடைவான்॥

96— யுத்தத்தில், தேர், குதிரை, யானை, குடை, பணம், தான்யம்,
பசுக்கள், வேலைக்காரிஸ்திரீகள், மற்றுமெல்லாம் முதலான
பொருள்கள், தங்கம் வெள்ளி தவிர மற்ற லோஹங்கள்
இவைகளை, எந்த யுத்தவீரன் ஜயித்துக்கொள்ளுகிறானோ
அப்பொருள்கள் அவனவனுக்கே, சொந்தமாகும்

97— ஆயின் அரசனுக்கு॥ யுத்தவீரர்கள் ஜயித்துக்கொண்டு
வந்த பொருள்களில், வெள்ளி தங்கம், லோஹங்கள் யானை
குதிரை முதலான வாஹனங்கள் இவை சிறந்த பொருள்க
அரசனுக்கு
ள் அரசனிடம் ஒப்படைக்க வேண்டும், பலவீரர்கள் சேர்ந்து
ஜயித்துக் கொண்டுவந்த பொருள்களை, வேதவிதியையனுஸ
ரித்து

அரசன் அவர்களுடைய பராக்ரமத்துக்குத் தக்கபடி
98- பாகம் செய்து கொடுக்க வேண்டும்॥ இவ்விதம் பரம்ப
ரையாக வந்ததும் மேலானதுமான யுத்த வீரர்களுடை
ய தர்மம் சொல்லப்பட்டது, யுத்தத்தில் சத்ருக்களை
வதம் செய்யும் க்ஷத்ரியன் இந்த தர்மத்தை விடக்கூடாது॥
99- ஜயிக்கப்படாத பூமி முதல்களைகளை ஜயித்து அடை
வதற்கு விரும்ப வேண்டும், ஜயித்து கிடைத்ததை ப
யத்துடன் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றப்பட்
டதை திரவியாபாராதிகளால் வ்ருத்தி செய்ய வேண்
டும், வ்ருத்தி செய்யப்பட்டதை நல்ல விஷயத்தில் செல
100- வு செய்ய வேண்டும்॥ பொருளை சம்பாதித்தல் ரக்ஷித்தல்
வ்ருத்தி செய்தல் நல்ல பாத்திரத்தில் செலவு செய்தல் என்ற இந்
த நான்கு விதம் புருஷார்த்தமான ஸ்வர்க்கத்திற்கு ஸோபா
னம் என்று அறியவும், ஆகையால் சோம்பல் இல்லாம
ல் அவசியம் நன்கு அனுஷ்டிக்க வேண்டும்॥
101- தன்னிடம் இல்லாத பொருளை அடைய தண்டத்தால் ஜெ
யத்தால் அடைய விரும்ப வேண்டும், கிடைத்ததை கவ
னத்தால் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்றப்பட்டதை
வியாபாரம் முதலானதால் வ்ருத்தி செய்ய வேண்டும்,

(தொடர்)

வாக்கு செய்தல், தனக்குத் தீமை ஏற்படினும் நல்வழியிலேயே
102- செய்ய வேண்டும்॥ ஸைந்யங்கள் தன்னுடையவையாகவே
பெற்று எப்பொழுதும் யுத்தத்திற்குத் தயார் நிலையிலிருக்
க வேண்டும், எப்பொழுதும் தன் பராக்ரமத்தை வெளிக்
காட்டிக் கொண்டிருக்க வேண்டும், ராஜ்ய காரியங்களை
ஒற்றர்கள் மூலம் அறிந்து எப்பொழுதும் ஜாக்ரதையாக
இருக்க வேண்டும், வாரோதியை ஜயிப்பதற்கு எப்
பொழுதும் அவனுடைய ஏழ்மை பலஹீனஸமயத்தை
103- எதிர்பார்த்திருக்க வேண்டும்॥ எப்பொழுதும் தண்டனையை
நீதிப்படி விதிக்கும் அரசனுக்கு உலகம் முழுவதும் வயப்படும்,
ஆகையால் எல்லா ப்ராணிகளையும் தண்டனையாலேயே
தனக்கு ஸ்வாதீனமாக (அடிமைகளாக) செய்து கொள்ள
104- வேண்டும்॥ மந்திரிகளிடம் தன் அபிப்ராயத்தை மனந்
திறப் பேசக் கூடாது, தர்மத்தை ரக்ஷிக்க அவர்களுடன்
உண்மையுடனே பேசுதல் வேண்டும், தன்னைக் காப்பாற்
றிக்கொண்டு தன் ப்ரஜைகளிடம் இருப்பதை சத்ருக்
கள் உள்ளே நுழையாமல் சாரர் மூலம் எப்பொழுதும் நிச்ச
105- யமாக அறிந்து கொள்ள வேண்டும்॥ தன் சத்ருவின் ரா
ஜ்யத்தில் செய்யும் சூழ்ச்சியையாவும் அறியவேண்டு
ம்

சத்ரு செய்யும் சூழ்ச்சியை சாரர் மூலம் ஆராய
அறிந்து கொள்ள வேண்டும், ஆமை தன் அவயவங்க
ளை தனக்குள் அடக்கிக் கொள்வது போல் மந்திராலோசனை
தனி ரகசியமானால் தனக்கு அடங்கியவர்
களாகச் செய்து கொள்ள வேண்டும்॥

106— கொக்குப்போல், பாதுகாப்பான ஏற்றமான இடத்
தில் இருந்து கொண்டு சத்ருவை உபாயமாக ஆலோசிக்க
வேண்டும், சமயத்தில், சிம்மம் யானையைத் தாக்கி
அடிப்பது போல் சத்ருவை பலத்தால் தாக்கி அழிக்க
வேண்டும், ஓநாய் கோபாலன் ஏமாந்த சமயம் பார்த்
து பசுவை அபகரிப்பது போல் சத்ரு பாதுகாப்பான
இடத்திலிருந்தாலும் சமயம் பார்த்து அழிக்க வே
ண்டும், தான் பலவான்களானாலும் பலபேர்களால்
சூழப்பட்ட சமயத்தில், பல வேடர்களுடைய மத்தியி
ல் மெல்ல இடம் மாறிப் பாய்ந்தோடுவது போல் சத்ருக்க
ளிடமிருந்து வெளிவந்து தனக்கு அனுகூலமான அவ

107— [illegible] வேண்டும்॥ இவ்விதம் சமயத்திலே
ஐ பெட்டிக்குச் சத்ருக்களுக்கு எதிரியான ராஜாவி
அரசர்களை ஸாமதான பேத தண்ட உபாயங்களால்

தனக்கு அதீனமாகச் செய்து கொள்ள வேண்டும்॥

108 — விரோதி அரசர்களை மேலான ஸாமதானபேதங்களால் அடக்க முயலாமல் தண்டத்தாலேயே பலாத்காரத்தா ல் வசப்படுத்த (படையெடுப்பால்) ஸ்வாதீனஞ் செய்துகொள்ளவும்॥

109 — ஸாமதானபேதத்தைவிட நான்காவது உபாயங்களுக்குள் ஸாமம் தண்டம் சிறந்தது என்றையுமே, ராஜ்யத்தை மற்றைத் தேசத்து பண்டிதர்கள் மேலாக கூறுகிறார்கள்॥

110 — பயிர்களிடையே உள்ள புல்பூண்டுகளை (களை) அழித்து பயிரை வளர்த்து காப்பது போல் ராஜ்யத்தில் கொள்ளைத் துஷ்ட ர்களை ஒழித்து மற்றவர்களைக் காப்பாற்ற வேண்டும்॥

111 — எந்த அரசன் தன் ராஜ்யத்தில் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் யார் என்று அறியாமல் எல்லா ஜனங்களையும் நீதியினை யில்லாமல் பணத்தை அபகரித்தும் வதம் செய்தும் படுத் துகிறானோ அந்த அரசன் சீக்கிரத்திலேயே ஜனங்களின் கோபத்தால் புத்ராதிகளுடன் ராஜ்யத்தையும் தன் ஜீவனத்தை

112 — யும் இழப்பான்॥ ஆஹாரமின்மையால் ப்ராணிகளுடைய சரீரம் இளைத்து ப்ராணன் போவது போல் ப்ரஜைகளின் க்லேசத்தால் அரசன் ப்ராணனை இழப்பான்॥

113 — ராஜ்யத்தைக் காப்பாற்றுவதில் மேல் கூறப்போகும் விதி

முறைகளை அநுஷ்டிக்க வேண்டும், ராஜ்யத்தைக் காப்
பாற்றுவதால் இளைப்பில்லாமல் அரசன் ஸம்ருத்தியடை
114 வான்॥ இரண்டு அல்லது மூன்று, அல்லது ஐந்து, அல்லது
நூறு கிராமங்களுக்கு மத்தியில், ஸைந்யத்தை ப்ரதானமாகக்
கொண்டதும் அதிகாரியின் கீழுள்ளதும் காவல்படையை
ராஜ்யத்தின் ரக்ஷைக்காக ஏற்படுத்தவேண்டும்॥
115- ஒரு கிராமம், பத்து கிராமங்கள் இருபது கிராமங்கள் நூ
று கிராமங்கள் ஆயிரம் கிராமங்கள் என்ற முறையால் தனி
த்தனியாக அதிகாரிகளை நியமிக்க வேண்டும்॥
116- ஒரு கிராமத்தில் கெடுதலானவை ஏதாவது ஏற்ப
117- ட்டால் அந்த கிராமாதிகாரி தன்னால் தீர்க்க முடியாத
வலியதொன்றாயிருந்தால், முறையாக, பத்து கிராமாதிப
திக்கும், அவன் இருபது கிராமாதிபதிக்கும், அவன் நூறு
கிராமங்களுக்கு அதிபதிக்கும் அவன் எல்லா விஷயங்களை
யும் ஆயிரம் கிராமங்களுக்கு அதிபதிக்கும் தெரிவிக்கவே
118- ண்டும்॥ கிராமவாஸிகளின் நெல்லும், அன்னம் பா
னம் விறகு இவைகளை அரசனுக்குக் காணிக்கையாக ~~கள~~
கிராமாதிகாரியிடம் கொடுக்கவேண்டும், அவன் அதை
தன் ஜீவனார்த்திக்காக எடுத்துக்கொள்ள வேண்டும்॥

119— பத்துக்கிராமங்களுக்கதிபதியாக உள்ளவன் இரண்டு
ஏர்களால் உழக்கூடிய பூமியையும், அதைப்போல் ஐந்துமட
ங்கு பூமியை இருபது கிராமங்களுக்கதிபதியும், நூறுகிரா
மங்களுக்கு அதிபதி நூறு ஜனங்களுள்ள கிராமத்தையும்,
ஆயிரம் கிராமங்களுக்கு அதிபதி மத்தியமாயுள்ள பெருநகர
த்தையும், தங்கள் ஜீவனார்த்தமாக உபயோகித்துக்கொள்ள
120— வேண்டும்॥ மேற்கூறிய கிராமங்களிலுள்ள காரியங்
யங்களை, [illegible] பட்டணங்களிலிருந்து
ம், அரசனுக்கு நன்மை செய்பவனும் சோம்பலில்லாத
வனுமான தனி மந்திரி ஒருவன் கவனிக்கவேண்டும்॥
121— ஒவ்வொரு நகரத்திலும் அங்குள்ள காரியங்களை நன்கு கவ
னிப்பதற்காக, உயர் குலத்தில் பிறந்தவனும் பயங்க
ரமானவனும் ஜனங்களுக்கு பயத்தை உண்டுபண்ணுபவனு
ம், நக்ஷத்திரங்களுக்குள் சந்திரனைப்போல் தேஜஸ் உள்ள
வனுமான ஒருவனைக் காரியதரிசியாக நியமிக்கவேண்
122- டும்॥ அந்த நகராதிபதி கிராமாதிகாரிகளால் செய்யாத
காரியங்களைத் தானே நேரில் சென்று முடிக்கவேண்டும்,
தான் செய்த முடிவுகளை சகல ஜனங்களுக்குத்
தெரிவிக்கவேண்டும்॥

123 + அரசனால் ஜனங்களைக் காப்பாற்ற நியமிக்கப்பட்ட
அதிகாரிகள் அநேகமாக ஜனங்களிடமிருந்து பணம்
பறிப்பவர்களாகவே இருப்பார்கள். ஆகையால் அரசன்
அவர்களிடமிருந்து ப்ரஜைகளைக் காப்பாற்ற வேண்டும்।
124 — எந்த அரசாங்க அதிகாரிகள் காரியத்திற்காக வரும் ஜன
ங்களிடம் நியாயமல்லாமல் ஏமாற்றி பணம் பறிக்கி
றார்களோ அந்த பாபிகளை அரசன் ஸொத்து முழுவ
தையும் பறிமுதல் செய்து தேசத்தை விட்டு வெரட்ட வேண்
125 - டும்।। அரசன் அந்தந்த வேலைகளுக்குத் தகுந்தபடி ஸ்திரீக
ளையோ புருஷர்களையோ நியமித்து, கீழ், நடு, மேல், என்
று மூன்று தரமாக பிரித்து அதற்குத் தக்கபடி தினந்தோ
றும் சம்பளம் கொடுக்க வேண்டும்।।
126 — வீடு சுத்தம் செய்தல் ஜலம் கொண்டுவருதல் முதலான கீ
ழ்வேலை செய்பவர்களுக்கு, தினந்தோறும் ஒரு பணம்;
ஆறு மாதத்திற்கு ஒருதடவை (ஜோடி) இரண்டு வஸ்திரங்கள், ஒரு
மாதத்திற்கு ஒரு த்ரோணம் தான்யம் (அளவைக்குறிப்
பெயர்கள்) சம்பளம்। உத்தமாதிகாரிக்கு, தினந்தோறு
ம் ஆறு பணம், ஆறு மாதத்திற்கு ஒருதடவை ஆறு
(ஜோடி) வஸ்திரங்கள், ஒரு மாதத்திற்கு ஆறு த்ரோணம்

தான்யம் சம்பாவம்। மத்யமாதிகரிக்கிறதில் மென்று
பணம், ஆறுமாதத்துக்கு வேண்டியவை மென்று ஜோடி
வஸ்திரங்கள், மென்று தாமோதரன் தான்யம் அம்பவம்,
127 — வியாபாரிகள், பெருமைபெற்றோர், வாங்கிய வாங்கும்வி
லே, எவ்வளவு தூரத்திலிருந்து வரவழைக்கப்பட்டது,
தன் படைச்செலவு, அதன் சேதாரம், காப்பாற்ற வேண்டிய
செலவு, லாபம் இவைகளை கவனித்து அரசனுக்குரிய
தீர்வையைக் கொடுக்க வேண்டும்॥
128 — அரசன் ராஜ்யகாரியங்களைக் கவனிப்பதற்கான
பரமேசுவரத்துடன் வியவஸாயம் வியாபாரம்
அதன்
செய்பவர்கள் பரமேசுவரத்தை வளைவாக்கொள்
இவைகளை கவனித்து அதிகாரிகள் அரசனுக்கான தீர்
வையை வசூல் செய்ய வேண்டும்॥
129 — அட்டை, கன்று, வண்டுகளைப் போல், கொஞ்சம்
கொஞ்சமாக ஜனங்களிடமிருந்து அரசன் வரித்
130 — தீர்வையைப் பெற வேண்டும்॥ ஒரு பட்ட அளவுக்கு
மேல் அதிகமாக இருந்தால், பசுக்கள் முதலியவைகளி
ல் ஐம்பதில் ஒன்றாகவும், தான்யங்களில் பூமியை
இவைகளைக் கவனித்து, எட்டில் ஒன்றாகவும்
லக

ஆறிலொருபங்கு, பன்னிரெண்டிலொருபங்கு
என்றமுறையாய்த்தீர்வையாகவாங்கவேண்டும்॥
131, மரம், மாம்ஸம், மது, நெய், வாஸனைதிரவியம், ஓஷதிகள்,
132 — உப்பு முதலானரஸவஸ்துக்கள், பழம், புஷ்பம், வேர்கள், இலை
காய், புல், தோல், மூங்கில், மண்பாண்டம், கல்லால்செய்த
ஸாமான்கள், இவைகளின்லாபத்தில் ஆறிலொருபங்கை அ
ரசனுக்கு தீர்வையாகக்கொடுக்கவேண்டும்॥
133 — அரசன்எவ்வளவு ஏழ்மையானாலும் ச்ரோத்ரிய
ப்ராமணனிடம் தீர்வைவாங்கக்கூடாது, அந்தராஜ்யத்
தில்வஸிக்கும் ச்ரோத்ரியப்ராமணன்பசியால்வாடக்கூடாது॥
134 — எந்த அரசனுடையராஜ்யத்தில் ச்ரோத்ரியன்பசியால்வா
டுகிறானோ அந்தராஜ்யமே துர்ப்பக்ஷம் முதலானதால் சீக்
135 — கிரம் அழியும்॥ ச்ரோத்ரியப்ராமணனுடைய சாஸ்த்ர
ஞானம், அனுஷ்டானம்இவைகளையறிந்து அதற்கேற்
ற தர்மமானமுறையால் அவனுக்கு ஜீவனத்தை
ஏற்படுத்தவேண்டும்॥ அரசனால்காப்பாற்றப்படவேண்டி
136 — யவர்களில் முதலானவர்கள் இவர்கள்॥ அரசனால்காப்பாற்
றப்பட்ட ச்ரோத்ரியன் தினந்தோறும்செய்யும்தர்மா
னுஷ்டானத்தால் அரசனுக்கு ஆயுஸ், திரவியம், ராஜ்யம்

137 – இவைகள் வரத்தியனையும்॥ அரசன் தன் தேசத்தில்
இலகாய்க்கி தேவான இருத்தொழில் செய்து ஜீவிப்பவனி
டமிருந்தும் வரத்தில் இறிய தொகை திர்வையாக கட்ட
138 – ச் செய்யவேண்டும்॥ சுவையல்காரர்கள், கொல்லன் முதலா
ன தொழிலாளிகள், அலைதாக்கல் முதலான சரீர உழைப்பா
ளிகள் தவர்களே, அரசனுக்கு மாசத்தில் ஒருநாள் வேலை
திர்வை கிரமமாக
139 – செய்யும்படி அரசன் செய்யவேண்டும்॥ அரசன் பிரஜைகளி
டம் அன்பானால் திர்வை வாங்காவிட்டாலும், பேராசையால்
அதிகமாக திர்வை வாங்கினாலும் அரசனும் பிரஜைகளும்
140 – வாழ்க மேயாது॥ அந்தந்த காலங்களின் செய்திகளை யறிந்தறி
ந்து அரசன் இரேகைகளையும் சார்த்துகளையும் வைக்கவேண்
டும், அவ்வாறு அரசனை ஜனங்கள் மதிக்கப்படுவான்॥
141 – அரசன் தானே நேரில் ராஜ்யகாரியங்களைக் கவனிக்க
இயலாது போனால், தர்மத்தை யறிந்தவனும், நல்ல அ
றிவாளியும், ஜிதேந்திரியனும், குலத்தில் பிறந்த
வனுமான ஒருவனை மந்திரி அந்தஸ்தில் நியமி
142 – க்க வேண்டும்॥ எவ்வாறும் இல் வேறுபட்டவனாயினும்
தன்னுடைய பலகல காரியங்களையும் நிர்வகித்து உ
த்ஸாகத்துடன் ஜாக்கிரதையாக இருந்து பிரஜைகளைப்ப
ரிபாலனம் செய்யவே
ண்டும்॥

143 — மந்திரிகளோடு கூடியவனாய் அரசன் பார்த்துக்கொண்டு
இருக்கும்பொழுதே அந்த ராஜ்யத்திலிருந்து திருடர்க
ளால் அலறிக்கொண்டிருக்கும் ப்ரஜைகள் [illegible] அழைத்துச்செல
லப்படுகிறார்களோ, அந்த அரசன் இறந்தவனுக்கு ஸமம்॥

144 — க்ஷத்ரியனுக்கு ப்ரஜைகளைப் பரிபாலனம் செய்வதே
மற்ற தர்மங்களைக் காட்டிலும் மேலான தர்மம், முறை
யான தீர்வை வாங்கி அனுபவிப்பவன் தார்மிகன்॥

145 — ராஜா, இரவு கடைசி யாமத்தில் எழுந்து சௌசாதிகளை
முடித்துக்கொண்டு அக்நியில் ஹோமம் (அக்நிஹோத்ரம்)
செய்துவிட்டு ப்ராமணர்களைப் பூஜித்துவிட்டு மங்கள
மான ஸபாமண்டபம் செல்லவேண்டும்॥

146 — அங்கிருந்துகொண்டு தர்சனத்திற்காக வந்திரு
ந்த ப்ரஜைகளை, தெரிசனம் ஸம்பாஷணம் முதலியவைக
ளால் பதில் மரியாதை செய்து, அனுப்பிவிடவேண்டும்,
பிறகு மந்திரிகளுடன் ஸமாதானம் முதலானவைகளை

147 — ஆலோசிக்கவேண்டும்॥ மலையின் உச்சி, தனியாகவ
னத்திலுள்ள மாளிகை, நிர்ஜனமான அரண்யத்திலோ
எவருக்கும் தெரியாமல் மந்திரிகளுடன் மந்திராலோச
னை செய்யவேண்டும்॥ மந்திரம் என்பது — [illegible]த்தை

எவ்வாறும் ஆரம்பிப்பது, போதுமான மனிதர்கள் பணம்
உள்ளதா, தேசம் காலம், இவையூறு ஏற்பட்டால் எவ்வாறு
தவிர்ப்பது, காரியத்தை எவ்விதம் முடிக்கவேண்டும் என்பவை
148— எந்த அரசனுடைய மந்திரத்தை (ஆலோசனையை) மந்
திரிகளைத் தவிர மற்றவர்கள் அறியமாட்டார்களோ அ
ந்த அரசன் பணமில்லாத ஏழையாயினும் பூமி முழுவதை
149— யும் ஆளுவான் ॥ புத்தியில்லாதவன், ஊமை, செவிடன்,
குருடன், கிளிமைனாவானவைகள், கிழவி, மிலேச்சன்,
ரோகி, நொண்டி முதலான அங்கஹீனர்கள் இவர்கள்
மந்திராலோசனை காலத்தில் இருக்கக்கூடாது ॥
150— இவ்வகைய அங்கஹீனர்கள் அவமதிக்கப்பட்டிருந்தால
விஷயத்தை வெளியிட்டுவிடுவார்கள், அவ்வாறுமேல
த்தில் ஸ்திரீ கிளிமைனாவானவைகளும். ஆகையால் அவர்கள்
151— இருக்கக்கூடாது ॥ தப்புவகையிலோ நீதியிலோ மனது
க்கும் சரீரத்திற்கும் சோர்வு இல்லாத நிலையை மந்தி
ரிகளுடன் தனிமையாக தர்மார்த்தகாமங்களை அனுஷ்டிப்
152— பதற்காக ஆலோசிக்கவேண்டும் ॥ தர்மார்த்தகாமங்களுக்
கு ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாமல் இருக்கச்செய்த
வேண்டும்; காரிய ஸாதகமாகத்தான் வெளிவாராமலும், வாத

நீதிவாக்யங்களைப் போதிப்பதற்குத் தன் சொற்களைக் கா

153— ப்பாற்றுதல், தூதர்களை அந்ய தேசத்துக்கு அனுப்பும்

முறை, ஆலம் ஒப்புக்கப்பட்ட கார்யத்தை மீதியை முடிக்கவே

ண்டியவாதல், அந்தப்புரத்தில் ஸ்திரீகளுடைய நடத்

வாசார்
தை, சாரர்களுடைய வேலை, இவைகளை ஆலோசிக்க

154— வேண்டும் ॥ தீர்வை வருமானத்தின் மேல் ராஜ்யவரவு, வேலை

மரண
யாட்களின் சம்பளம் இவை, கார்யார்த்தம் பேசுகி

ளையனுப்புதல், ஸர்வேஷு கார்யத்தில் ராஜாக்களையாவகை

ம், பரஸ்பராக்களின் நீதிமசாரங்களை, தன்னுடையதாக்கப்பட்ட

வர்களிடமிருந்து பிணைப்பதனைப் பெறுவதில், யுத்தத்துக்கு

போய ~~சிசி~~த்தம் செய்தல், இந்த எட்டு, ஸர்வாங்கமாக யோ

சிக்குந்தலைக வேலையாளர்களாக வேண்டும். யோட்டுப

நகர்ராஜ்யவாவுயர்களையுடைய செய்தற்கு உரிய தரார்

களைக் கொடுப்பர் சித்திக்க வேண்டும், மந்திரிகளுடைய வா

ருப்பு வெறுப்புகளையும், அரசர்களில் யார் ஸஹாதான

புத்த
தை, யார் தன்னுடைய பிழைப்புக்கிடுகிறார்கள் என்று அறிந்து

அதற்கேற்றபடி இருந்துகொள்ள வேண்டும் ॥

155— இந்த ராஜ்யங்களுக்கு வெற்றியாய் இருக்கும் அரசன், ஜயாக்க

ஸர்வத்தை எதிர்பார்ப்பவன், தருமிஷ்டனானவனையே பிப்பவன், ஸத்ரு

(2) இருமை பெருதல்

இந்த அரசர்களின் செயல்களைக் கவனிக்க வேண்டும்॥

156 — அரச மண்டலத்தில், மத்யமன், விரோதி, (சத்ரு) விஜிகீஷு,
உதாஸீனன், என்ற நான்கு ப்ரக்ருதிகள் ஆதாரமானவை
மேலும் பார்ஷ்ணிக்ராஹன் (தொடர்பவன்) முதலானவை
157 — ஆகியனவாகும்॥ இந்த பன்னிரெண்டிலும், தனித்தனியாக
மந்திரி, தேசம், அரண், தனம், ஸைன்யம், என்ற ஐந்து
ப்ரக்ருதிகள் (சாதனங்கள்) ஆகமொத்தம் எழுபத்திரண்டு
158 — என்று கூறப்பட்டுள்ளன॥ ஜயத்தில் விருப்பமுள்ள அ
ரசன் விஜிகீஷு எனப்படுவான், அவனுடைய ராஜ்யத்
தைச் சுற்றி அடுத்திருக்கும் அரசர்கள் சத்ருப்ரக்ருதி
8- சேர்ந்தவர்களாவார்கள், இத்தகையவன், சத்ருவைச் சேர்ந்த
வனுமே சத்ருவே, அதற்கடுத்த அரசன் மித்ரன்,
அதற்கடுத்தவன் உதாஸீனன் எனப்படுவான்॥
159 — இப்படிக் கூறப்பட்ட அரசர்கள் எல்லோரையும் ஸாமதா
னபேத தண்டம் என்ற எல்லா உபாயங்களாலோ தனி
த்தனியாகவோ ~~உ~~ம் (ஸந்தர்ப்பம்) போல் வசமா
க்கி அவர்களைத் தன்வசமாக்கிக்கொள்ள வேண்டும்,
அல்லது தண்டஸாமம் என்றவைகளில் ஒன்றினா
லேயோ ஸ்வாதீனம் செய்துகொள்ள வேண்டும்॥

160— ஸந்தி-ஸமாதானம், விக்ரஹம்-யுத்தம், யானம்-
சத்ருவைக் குறித்துப் படையெடுத்தல், ஆஸனம்-உபேக்ஷித்
தல், த்வைதீபாவம்-ஸைன்யங்களைப் பிரித்து யுத்தம்,
ஸமாச்ரயணம்-மற்றொரு பலமுள்ள அரசனை அடை
தல், இந்த ஆறு உபாயங்களை இருந்தே செய்ய வேண்டும்
161— ஆஸனம் யானம் ஸந்தி விக்ரஹம் த்வைதம் ஸ
ம்ச்ரயம் இவைகளை ஸந்தர்ப்பத்தை (சூழ்நிலையை) அ
162— றிந்து உபயோகிக்க வேண்டும்॥ ஸந்தி விக்ரஹம்,
யானம், ஆஸனம், ஸம்ச்ரயம், த்வைதீபாவம் இந்த ஆறும்
எவ்வொன்றும் இன்ன பொழுதென்று அரசன் அறியவும்॥
163— தத்கால யோக்யமில்லாவிடில் போயினும் சத்ருவை எதிர்த்து வேறுவ
ரசனுடைய உதவியுடன் எதிரியின் மேல் படையெடுப்பது,
தனித்தனியாக யானம் செய்வது, என்று ஸநாதனமாகும்,
164— சத்ருவின் கஷ்டநிலைமையை தெரிந்து குறித்த காலத்திலோ
வேறுகால காலத்திலேதானே யுத்தம் செய்வது, தன்னை
பலுக்கு வேறு அரசனால் அபகாரம் ஏற்பட்டகாலத்திலும்
விக்ரஹக் குழுவு செய்ய யுத்தம் செய்வது, என்று வாக்யம்
165— அன்றோதம்॥ தன் சத்ருக்கள் எதிர்பாராத சமயத்தே
ஏற்றகாலத்தில் சக்தியிருந்தால் தானே வெகுவே

பகையை நோக்கிச் செல்லல், சக்தியில் குறைவேல் மற்றவனுடன்
சேர்ந்து செல்லல் என்று யானம் இருவகைப்படும்॥

166 — பின் ஜன்மத்திலோ இந்த ஜன்மத்திலோ செய்த பாபத்தால்
ஸைந்யபலம் இல்லாமலிருந்தவனே, அல்லது ஸைந்
யபலம் உள்ளவனே, அவனுடன் கொள்ளும் ஸந்தி
க மற்றவனுடன் சேர்ந்திருத்தல் ஸம்ச்ரயம் எனப்படும்॥

167 — ஸாத்யமான லக்ஷ்யத்தை உத்தேசித்து ஸைந்
யத்தின் ஒருபாகத்தை ஸேநாபதியுடன் சத்ருவின்
உபத்ரவத்தைத் தடுப்பதற்கும், அதிகாரிகளுடன் ஸைந்
யத்தின் ஒருபாகத்தைக் காப்பாற்றுவதில் அரசனை
நியமிப்பதற்கும் என்று த்வைதீபாவம் இருவகை॥

168 — சத்ருவினால் ஏற்பட்ட உபத்ரவத்தை நிவர்த்தி
செய்யவோ, அல்லது அவனால் உபத்ரவம் நேர்ப்படக்
கூடும் என்று ஸந்தேகிக்கையாலேயோ, தான் பலவானான
மற்றொரு அரசனைத் துணையாகக் கொள்ளவேண்
டுமென்று வெளியில் ப்ரகடனம் செய்வது என்றும்

169 — மாச்ரயம் இருவகை; யுத்தத்திற்குப் போருக்கு
தகுதியும் கிடைக்கும் என்று நிச்சயமாகத் தெரி
ந்தால் அந்த ஸமயம் கொண்டு பண்ணுவது ஏற்பட்டால்

ஸந்தி - ஸமாதானம் செய்து கொள்ள வேண்டும்॥

170 - எப்பொழுது தான் செய்த ஸமாதானத்தினால் மந்திரி முதலானவர்கள் தன் விஷயத்தில் பக்தியில்லாதவர்கள் என்று தெரிகிறதோ, ஸைன்யம் கோசம் (பணம்) இவைகளால் தன்னை பலவானாக என்றறிகிறானோ அப்பொழுது அவசியம் யுத்தம் செய்ய வேண்டும்॥

171 - எப்பொழுது தன்னுடைய மந்திரி முதலானவர்கள் ஸைன்யங்கள் செழிப்புடனும் ஸந்தோஷத்துடனும் இருக்கின்றனவோ அதற்கு மாறாக எதிரியின் ஸைன்யத்தில் இருக்கின்றனவோ அப்பொழுது எதிரியை நோக்கிப் படையெடுக்க வேண்டும்॥

172 - எப்பொழுது சத்ரு, வாஹனம் ஸைன்யம் இவைகள் கெட்டு தைன்யமாய் இருக்கிறானோ அப்பொழுது அவனுடன் பலவானாக ஸமாதானம் பேசி தான் ஸம்புஷ்டியாய் இருக்க வேண்டும்॥

173 - எப்பொழுது சத்ரு ஸைன்யத்தினால் மிகவும் பலவானாகவும் ஸமாதானத்திற்கு வரமாட்டான் என அறியப்படுகிறதோ அப்பொழுது ஸைன்யத்தின் ஒரு பாகத்தால் தன் ஸ்வாதீனத்துக் கொண்டு ஒரு பாகத்தால் சத்ருவுக்கு விரோதஞ் செய்ய வேண்டும்;

அதனையப் மித்ரர்களைத் தேடவேண்டும்॥

174 — எப்பொழுதும் ஜாக்ரதையாயிருந்து தனக்கு அநுகூல ரல்லாதவர்கள் மனம் ஒத்துப் பார்த்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டியது விளையாட்டு எதிர்ப்பதும் குணமும் என்று தோன்றினால் இக்கிஷம் பலவாறும் தாக்கிக்கொள்ளுமானவ

175 — ஒரு அரசனை அனுசரிக்கவேண்டும்॥ தனக்கு அனுகூலமில் லாத தன் மந்திரிகளையும் ப்ரஜைகளையும், தனக்குப் பெரியவரான மான தன் சத்ருவையும் அடக்கலமர்த்து தனது அரசனை இறைவைப் போல் நினைத்து சேவிக்கவேண்டும்॥

176 — இன்னொரு அரசனுடைய தயவை (உதவியை) நாடுவது புகலில்லாமை இழிவு என்று தோன்றினால் தான் பலவீ னாக இருந்த போதிலும் வெற்றி தேவைப்படாமல் தர்மமான

177 — யுத்தத்தைச் செய்யவேண்டும்॥ நீதியை அறிந்த அர சன் தன்னுடைய சத்ருவின் மித்ரன் உதாஸீனன் இவர்களைத் தன்னைக் காட்டிலும் மேலானவர்களாக மன்னமதா ஜாதியையும் ஸ்வபாவத்தையும் பார்த்துக்கொள்ளவேண்டும்॥

178 — கடந்த காலத்திலோ நிகழ் காலத்திலோ வருங்கால த்திலோ சிறிய பெரிய காரியங்களுடைய தோஷங்களை உணர்ந்திருக்கவேண்டும்॥

179— எவன் காரியங்களையெல்லாம் முக்காலங்களிலுமுள்ள
களை (நன்மை தீமைகளை) அறிந்தே அவன் நன்மை
யான காரியங்களை ஆரம்பிக்கிறான் தீமையானவைகளை
விலக்குகிறான்; வருங்காலத்தில் அறிந்தால் நன்மை
யான காரியங்களைச் செய்ய நிச்சயிக்கிறோம் யோசிக்கலாம்,
கடந்த காலத்தை ஆலோசித்தால் மீதியுள்ள காரியத்தை
முடித்து அதன் பலனை யடையலாம் ॥
180— இவ்விதம் அரசனை மித்ர சத்ருக்களாயுள்ளவர்கள் எவ்வித
ம் பாதிக்கமாட்டார்களோ அவ்விதம் எல்லாவற்றை
களையும் கவனமாக வேண்டும், இது சிறந்த நீதி ॥
181— எப்பொழுது அரசன் சக்தியுள்ளவனாக இருந்து சத்ருவின்
ராஜ்யத்தைத் தாக்கிப் படையெடுக்கிறானோ அப்பொழுது மேல்
நடப்போகும் முறையாக அவன் எதிர்ப்பாளர்கள் அறிவிக்க
182— வேண்டும் ॥ அரசன் யார் சூழ்ப்பவர்களால் சத்ரு ராஜ்யத்தை
தகர்த்து, தேர்ப்படை யானைப்படை ஹானமாக இருந்தால் சு
பலமானவர்களிடத்து [illegible] மாதத் திறம் தெரிந்த படைப்பதானவை
இருந்தால் பதினொரு அல்லது ஐந்து நிலையாய் படையை வகுக்க வேண்
183— டும் ॥ வெற்றியில் நம்பிக்கையும் தைரியமும் சேர்ந்து கொண்டு யுத்தம் செய்
கிறவன் முன்னே வருகிறானோ அப்பொழுது, எதிரிக்கு

தனக்கும் அவன் மந்திரிகளுக்கும் பாதுகாப்பை உண்டாக்கும்
வழியாக்கிப் பண்ணவை ஏற்கவேண்டும்॥

184,185— தன் ராஜ்யத்தைப் பாதுகாக்கவும் பண்ணவேண்டும். தன்
ஸைன்யத்திருவையும் வேண்டிய அதற்கேற்ற வருடன்
கிருத்திகையும், புஷ்யநக்ஷத்ரங்களில், ஆயுதங்களுடன்
கூட ஸைந்யங்களை ஏற்பாடு செய்து, எதிரியின் பல
வீரர்களை எதிரியினின் வேலையாட்களைத் தனக்கு அனுகூலமா
கச் செய்துகொண்டு, எதிரியைப் பார்த்துப் போக்குவர
வு, சுத்தமான தேசம் காட்டுவழி, நீர் நிலைகளான
தில் கோட்டைகளுக்கு செல்லவேண்டும். ஸைன்யத்தின்
ஆலோசனைப்படி இவைகளை தெரிந்து செய்து கொண்டு
பகை எதிரியின் ராஜ்யத்தைக் குறித்து படையெடுத்துச் செல்லவே
186— ண்டும்॥ அரசன் தனக்கு வேண்டுமென்றவைகளைக் கொண்டு
பயமான எதிரிகள் விழுகிறதே, அந்த வேலைக்காரன்
தன்னிடம் விரோதம் செய்து நேர்மையோடு இருப்பது
ன்னிடம் வருகிறது இந்த இரண்டு வழிகளின் ஸ்ருஷ்டி
மிக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்॥
187— (வ்யூஹம் - ஸைன்யத்தை அணிவகுத்து நிறுத்துதல்) தண்டவ்யூ
ஹம், சகடவ்யூஹம், வராஹவ்யூஹம், மகரவ்யூஹம்,

[illegible] வ்யூஹம், [illegible] வ்யூஹம், என்ற [illegible]
[illegible] வ்யூஹ [illegible]
188- [illegible]
அவ் [illegible] வ்யூஹ [illegible]
[illegible] வேண்டும்॥
189- [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] வேண்டும், [illegible]
190- [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] வேண்டும்॥
191- [illegible]
[illegible] வ்யூஹம்,

வஜ்ரவ்யூஹம் வகுத்து (வைராக்யத்தோ) யுத்தம் செய்ய
192— வேண்டும்॥ அப்பூமியில் தேர் தோரணப் பதாகைகளுடன் யுத்தம் வேண்
டும்; அதுப்போலவே ஜீவப்ரதேசத்தில் பாபங்களோடும், ஜ்வ
ரங்கள் புகார் நிறைந்திருக்கும், வல்லாளர்களோடும், பரம்பொ
ருள் பக்தர்கள் இல்லாதிருக்கில் வாளெடுத்து கேடயம் முதலான
ஆயுதங்களால் ஸம்ரம்யுத்தம் செய்யவேண்டும்॥
193— ஜிதேந்த்ரியத்தில் ப்ரவர்த்தர்கள், வராடதேசத்தில் ப்ரவர்த்த
கர்கள், பாஞ்சால தேசத்தில் ப்ரவர்த்தகர்கள், மதுரா தேசத்தில்
ப்ரவர்த்தகர்கள், பயமில்லாமல் ஜயம் பெறுமானவர்களாக
ஈத்தேசத்தார் கிளர்ச்சி யுத்தத்தில் ப்ரயோகிக்கக் கூடும்
ஸைந்யத்தில் முன்னணியில் நிறுத்தவேண்டும்॥
194— ஸைந்யத்தை அணிவகுத்து "ஜயம் கிடைத்தால் ஸ்வ
ராஜ்யம், மரணமடைந்தால் ஸ்வர்க்கம், இரண்டில் (பயமில்லை)
எஜமானன் செய்த உபகாரம் நினைக்கத்தக்கது" என்று
உபதேசிக்கிற யுத்தத்திற்கு உற்சாகப்படுத்தவே
ண்டும், அவர்களுக்குள் ஐக்கியத்தில் ஸஹ்ருதய மனைக
ளோடும், எதிர்பக்ஷத்தில் சேர வேண்டியவர்கள் எண்ணத்
தைப் பயமறிய வேண்டும், எதிர்ப்படையை யுத்தம் செய்யாக்
ஞானைய செய்வதைக் கிளர்ந்துபார்க்க வேண்டும்॥

195 — நற்காப்புடன், யுத்தம் செய்யாமலிருந்த போதிலும்
துர்க்கத்தில் இருக்கும் சத்ருவை ஸைந்யங்களால் சூழ்
ந்து அடக்க வேண்டும் (முற்றுகை செய்து) அவனுடை
ய ராஜ்யத்தை, பாழாக்க வேண்டும்; அவனுடைய புல் தானி
யம் பயிர் முதலியவை (விளைபொருள்) களைக் கெடு(த்து), ஜல
நிலைகளைப் ப்ரயோகிக்க வொட்டாமல் கெடுக்க வேண்டும்.
196 — சத்ருவுக்கு உதவியான மித்ர ஸைன்யங்களை அ
ழிக்க வேண்டும்; கோட்டை மதில்களைப் பிளக்
க வேண்டும்; அகழிகளில் ஜலம் இல்லாமல் செய்ய
வேண்டும்; இவ்விதம் சத்ருவின் பலத்தைக் குறைக்க வே
ண்டும்; இரவில் பயங்கரமான கோஷங்களால் ப
197 — யமுறுத்த வேண்டும். ராஜ்யத்தை விரும்பும் பகை
சோதியான் வம்சத்தைச் சேர்ந்தவர்களையும், அ
வனுடைய மந்திரிகளையும் உறவினர்களைக்
கொண்டு அவர்களால் சோதிகளிடம் சேர்ந்து பிரிக்
க வேண்டும். அவர்களின் வேவுகள் எதிரியின் செயலை
அறிய வேண்டும்; தனக்குத் துரோகிகளின் அறு
வலையை அறிந்து ஜயத்தை அடைய பயத்தை
விட்டு யுத்திக்க வேண்டும்.

198 – ஸாமதானபேதங்கள் மூன்றினாலும், அல்லது
நீதியென்றுகின்றதாவதொன்றினாலோ சத்ருக்களை
யடக்கப்பார்க்கவேணும், அதுவொழியும்
யுத்தத்தினாலே ஜெயிக்கவேணுமென்கக்கூடாது ||
199 – யுத்தஞ்செய்யும் இருவர்களுக்கும் ஜயம் அபஜயம்
இரண்டும் நிச்சயமில்லாததினால் யுத்தத்தைத் தவிர்க்கவே
200 – ண்டும் || ஸாமதானபேதம் என்ற மூன்று உபாயங்களு
ம் பலம்பலாக்காவிடில், ஸைந்யங்களுடனேயிசை
ந்து சத்துருக்களை ஜயிக்க யுத்தஞ்செய்யவேண்டும் ||
201 – சத்ருவை ஜயித்து அந்தராஜ்யத்தில் கிடைத்த பொருளா
ல் அங்குள்ள தேவாலயங்களிலுள்ள தேவதைகளைப் பூஜிக்கவே
ண்டும், தாழ்மையுள்ள ப்ராம்மணர்களுக்கெல்லாந் தக்ஷி
ணாதிகள் செய்யவேண்டும், இவ்வாறு அந்நாட்டின
ளர்களுக்கு ப்ரகடனஞ் செய்யவேண்டும், அந்த அரசனு
க்குத் தகுதியானவனை அதிகாரியாக வைக்கவேண்டும் தம்
பின் வேலைகளைச் செய்யும்படி ஆக்ஞை செய்யவே
202 – ண்டும் || சத்ரு அரசனுடைய எல்லா மந்திரிகளுடையவும் பொ
துவான அபிப்ராயத்தை அறிந்து அந்த அரசனுடைய வம்ச
த்தைச் சேர்ந்தவனை அரசனாக அபிஷேகஞ்செய்து, இன்னொ

நியமஞ்செய்யலாம்; இன்ன காரியம் செய்யக்கூடாது என்று
அந்த அரசனுடனும் மந்திரிகளுடனும் ப்ரமாணஞ் செய்து
203— கொள்ளவேண்டும்// சாஸ்திரப்ரமேயமான அந்த தே
ச தர்மங்களைக் குறித்து ப்ரமாணம் செய்யவேண்டும்,
அபிஷேகம் செய்யப்பட்ட அந்த அரசனுக்குத் தன் மந்திரிகளு
டன் ரத்னங்களைக் கொடுத்து மரியாதை செய்யவேண்டும்//
204— ஒருவரிடமிருந்து பொருளை எடுத்துக் கொள்வது அவருக்கு
ப்ரியமில்லாதது கொடுப்பது ப்ரியமானது, இரு
வரும் இஷ்டப்பட்ட சமயத்தில் ஒவ்வொன்றும் மேலானது//
205— மனிதனுடைய எல்லா தொழில்களையும் (செய்கையும்) மு
ன் ஜன்மத்தில் செய்த புண்ய பாபங்களான தெய்வத்தை
யும் இப்பொழுது செய்யும் ப்ரயத்னத்தையும் அனு
சரித்து பலனைக் கொடுக்கிறது, அந்த இரண்டில்
தெய்வம் சிந்திக்கப்படாதது, ப்ரயத்னமோ ஆ
லோசித்துச் செய்ய முடியும்; ஆகையால் காரியஸித்தி
க்கு மனுஷ்ய ப்ரயத்னமே அவசியம் வேண்டும்//
206— சத்ருவோடு யுத்தம் செய்ய படையெடுத்துச் சென்ற
ராஜன் அவன் மித்ரனாக ஸமாதானத்துக்கு வந்தால்
அவனிடமிருந்து பொன், பூமியாவும், வஸ்துக்கள்

பம், அப்பிரியையும் பொறுமையோதாரணம் செய்துகொ
ண்டு ஜாக்ரதையாகத் தன் ஸ்தானத்திலிருக்க வேண்டும்॥
207 — ஒரு அரசன் சத்ருவோடே யுத்தம் செய்யும் பொழுது
தன் ராஜ்யத்தைத் தாக்காதபடிக்கு பின்னால் உள்ள அரசனையு
ம், அவனுடைய ஸ்நேகிதர்களையும் கவனிக்க வேண்டும்;
மித்ரனிடமிருந்தோ சத்ருவிடமிருந்தோ பணமெய்த
208 — க்கூடியதாகவும் இருக்க வேண்டும்॥ அரசன் ஸ்வர்ணம்
பூமிலாபத்தைக் காட்டிலும், ஐஸ்வர்யமுள்ள ராஜாக்களை
ஜெயிப்பதிலும் ஸைன்யத்திலும் பெரிய அரசர்களுக்குக் கட்டு
ப்படுவதிலும் ஸந்தியமான மித்ரனை அடைவதால் செழிப்
209 — பமடைவான்॥ தர்மம் அறிந்தவனும், நன்றியுள்ளவனும்,
ப்ரஜைகளுடைய அபமானத்தைப் பொறுத்தவனும், தன்னிடம் ப
ரீதியுள்ளவனும், ஸ்திரமான காரியத்தைச் செய்பவனும்
210 — ஆன மித்ரன் மிக்கவும் மேலானவன்॥ ஸூர்வானும், உயர்
குலத்தில் பிறந்தவனும், பராக்ரமசாலியும், சாதுர்யமுள்
ளவனும், தானம் கொடுப்பவனும், நன்றியுள்ளவனு
ம், ஸுகதுக்கங்களில் மாறுபடாதவனுமான சத்ரு
வை எளிதில் வெல்ல முடியாதவனாக பண்டிதர்கள் கூறுகி
றார்கள், அவனுடன் ஸந்தியே செய்துகொள்ள
வேண்டும்॥

211— அவனை வசமாக்கவேண்டுமானால், லோகஸ்வபா
வம், மற்ற பணிகளுடைய குணத்தை அறியக்கூடிய அறிவு,
பராக்கிரமம், கருணை, எப்பொழுதும் கொடுக்கும் கொ
டையாளி ஸ்வபாவம், இவ்வித நற்குணங்கள் உ
டைய உதாரனை (நற்குணமுள்ளவனை) நாடவே
212— ண்டும்॥ அரசன், உபத்ரவமில்லாததும், நதியால் பா
சனமுள்ளதால் எப்பொழுதும் [illegible] பயிர்களுமுள்ள
[illegible], ஏராளமான புல்லினால் பசுக்க
[illegible] கொடுப்பதும், [illegible] பூமியையும், தன்னை
க் காப்பாற்றிக்கொள்ள வேண்டி [illegible]
213— தியாகம் செய்யவேண்டும்॥ ஏனெனில் - ஆபத்துவ
ராமல் தடுக்கத் தனத்தை ரக்ஷிக்கவேண்டும்; தனத்
தைத் தியாகம் செய்தாவது மனைவியைக் காப்பாற்றவே
ண்டும், எப்பொழுதும் தனம் மனைவியையும் தியாகம் செ
ய்தாவது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவே
214— ண்டும்॥ [illegible] ஆபத்துக்கிடங்கே
[illegible] அரசன் [illegible]
[illegible] அறிந்து [illegible]
[illegible] உபயோகிக்கவேண்டும்॥

215 — காரியத்தையடைய வேண்டியதானால், அடைய வேண்டு
மெனில், அதை அடையமாட்டாதோனென்னாலேயும்
கொண்டாலும் ஆகும்போது காரியத்தைச் சாதிக்க யத்த
216 — னிக்க வேண்டும். அரசன் வைசியர் ராஜகாரியங்களில்
புண்ணியத்திரிகைகளுடன் ஏவோதந்து, பூட்டு ஆயுதங்களை
க்கொண்டாகிறதால் செய்து, மருந்துகளை நன்கு செய்து
வைத்தியர்களால் செய்து பரிசோதனை செய்து கொடுத்து
217 — துப்புகளைச் செல்ல வேண்டும். அரசர் போன்றவர்களும்,
பொருளை உள்ள ஆசிரியர்களும், துரோகம் செய்யாதவ
ர்களும் மரண பரிசோதனைகளால் நன்கு செய்யப்பட்டதும், நன்கு
பரிசோதிக்கப்பட்டதும், வைத்தியர்களாலே தாமே
கண்டு போகப்பட்டதுமான அன்னத்தை புசிக்க வேண்
218 — டும். வைத்தியர்களால் கொல்லும் பிரயோகங்களால் போதி
பதார்த்தமும் எல்லாவற்றையும் கலக்க வேண்டும், வைத்தி
யர் பரிகாரம் செய்யும் ரத்னங்களையும் அவசியம் அணி
219 — ய வேண்டும். ராஜ்யமான எல்லாக்கண் மேலும் நன்கு பரி
சோதிக்கப்பட்ட ஸ்திரீகளுடன் சாமரம் வீசிக்கொண்டு
ம் ஸ்நானம் பானம் செய்கின்றவர்கள், தாம் பக்கங்களா
ல் அரசனுக்கு உபசாரம் செய்ய வேண்டும்.
+ வேஷம் உபகரணங்களால் சுத்தமானவர்களால் சோதி
க்கப்பட்ட

220 — இவ்வாறு பரிக்ஷை (சோதனை) செய்யான ஸ்னானம், வாஜ
நம்பவிக்கை ஆஸனம், போஜனம், ஸ்நானம், சாந்
நதி, இவ்வகுதிகளை அலங்காரப் பொருள்களிறும் செய்
221 — ய வேண்டும்॥ போஜனம் செய்தபிறகு அந்தப்புரத்தில்
மனைவிகளோடு விளையாடிக்கொண்டும், காலம்
கழித்தல்பகலிலேயே அயாகத்தில் கிருந்த் அவைட்டோடு
வஸ்யாகத்தில் மறுபடியும் ப்ராந்யகாரியங்களைச் செய்
222 — யவேண்டும்॥ பிறகு அலங்காரம் செய்துகொண்டு
ஆயுதபாணிகளையும் பாணிகளையும் வாஹனங்களை
யும், ஸர்வ ஆயுதங்களையும், (க்ஷத்ரியர்களான)
ஆயுதங்களையும் பார்வையிட வேண்டும்॥
223 — பிறகு அந்திப்போபாஸனம் செய்துவிட்டு தன்கிருஹ
224 — த்தில் தனிமையான ஒரு அறையினில் (ரஹஸ்) ஆயுத
பாணியாக இருந்துகொண்டு ரஹஸ்யமான வார்த்
தைகளையுடைய சாரர்களைக் கேட்கவேண்டும், பி
றகு அவர்களை அனுப்பிவிட்டு பரிசாரிகளைத் திரும்
ரும் போஜனம் செய்ய அந்தப்புரம் செல்லவேண்டும்॥
225 — அங்கு வாத்ய இசையோடும் ஸ்த்ரீகளோடும் கூடிக்கொண்டு
ம் போஜனம் செய்துவிட்டு காலம் தவறாமல் அரை

இந்த எட்டாவது அத்யாயம் ராஜநீதி தெரிந்த அனைவரும் எழுதவேண்டிய நிர்ணயமாகும்)

யாமம் (ஸுமார் மூன்று மணிநேரம்) கழித்து தூ
நித்ரை செய்ய வேண்டும், இவ்வாறு பரிஹாரம் செய்து கொண்
டு கடைசியாமத்தில் எழுந்திருக்க வேண்டும்॥

226 — இங்கு கூறப்பட்ட முறையாக ராஜா பரிபாலனம், அரசன்
ஆரோக்யமாக இருக்கும் பொழுது தானே செய்ய வேண்டும்;
தனக்கு ஆரோக்யமில்லாவிடில் ராஜ்யகார்யங்களை ப்ர
தான மந்திரிகளானவர்களிடம் ஒப்புவிக்க வேண்டு
ம்॥ ஏழாவது அத்யாயம் முற்றிற்று॥

அத்யாயம் எட்டு —

1 — அரசன், நீதி விசாரணைகளைக் கவனிக்க விரும்புவதுடன்,
சாஸ்திர நீதி அறிந்த ப்ராமணர்களுடனும், மந்திரிகளுடனும்
அடக்கத்துடன் ஸபா மண்டபத்தில் ப்ரவேசிக்க வேண்டும்॥

2 — அங்கு ஸபையில் பெரிய விசாரணையாக இருந்தால் உட்கார்
ந்து கொண்டும், இயல்பாக இருந்தால் நின்று கொண்டும்,
வலது கையை உயர்த்தி அடக்கமான (ஆடம்பரமில்லாத)
ஆடையாபரணங்களுடன் இருந்து கார்யங்களை விசாரி

3 — க்க வேண்டும்॥ விசாரணைக்குரிய வ்யவஹாரங்கள் பதினெட்டு,
அவைகளை, தேசம் ஜாதி குலம் இவைகளையும் சாஸ்திர
ங்களையும், ஸாக்ஷி, லேகை, இவைகளையும் ஆராய்

பலாத்காரமாக அபகரித்தல்

ந்து, காரணங்களுடன் தனித்தனியாக தினந்தோ
றும் விசாரிக்க வேண்டும்॥ அந்த பதினெட்டாவது —

4 to 7 — கடன் வாங்குதல், தன் பொருளை வேறொருவரிடம் அ
டைக்கலமாகக் கொடுத்து வைத்தல், தன்னுடையதில்லாத
தை விக்கிரயம் செய்தல், வியாபாரவாதயம், தானமாகக்
கொடுத்ததைத் திரும்ப வாங்குதல், வேலை செய்தவனுக்குச் சம்
பளம் கொடாமை, ஒப்பந்தத்தை மீறுதல், கிரயவிக்கிர
யங்களில் விவாதம், எஜமானனுக்கும் மாடு மேய்ப்பவ
னுக்கும் விவாதம், கிராம நகரங்களின் எல்லை தெரி
த்தல் வாதம், ஒருவனைக் கடுமையாக அடித்தல் முதலியன.
ஒருவனைக் கடுமையாகப் பேசுதல், களவு செய்தல் (வழி
ப்பறிப்பு) ~~[illegible]~~ பலாத்காரமாக, ஸ்திரீயானவள் பரபுருஷனைச் சேர்க்
கை, ஸ்திரீபுருஷர்களுக்குரிய தர்மம்,
பிதிராஸ்திபாகம், பணம் வைத்துச் சூதாட்டம், ஆடு
கோழிச்சண்டை, என பதினெட்டு வாதம் வாதவாதயம்॥

8 — மனிதர்க்கு மிக்கமானதால் இப்பதினெட்டு வாதவியவத்
தில் பரம்பரையாக வழக்கம் செய்து வருகிறார்கள்; ஆகை
யால் அரசன் சாஸ்வதமான தர்மத்தைக் கொண்டு தீர்ப்பளிக்
க வேண்டும்; தவறு பெறும் பிரதிவாதியின் வழக்குகளை॥

9 — அரசன், வேறு கார்யமிருந்தாலோ ரோகாதிகளாலே
யோ நீதிவிசாரணை செய்யமுடியாத ஸமயத்தில் தான் நீதி
யறிந்த ப்ராமணனை விசாரணை செய்ய நியமிக்கவேண்டு
10 — ம்॥ அந்த ப்ராமணன் ஸபைக்கு யோக்யர்களும் தார்மி
கர்களும் நீதியறிந்தவர்களுமான மூன்று ப்ராமணர்களுட
ன் ஸபையில் ப்ரவேசித்து நின்றுகொண்டோ உட்கார்ந்து
கொண்டோ அரசனுடைய கார்யங்களைக் கவனிக்கவே
11 — ண்டும்॥ எந்த ஸபையில் ருக்யஜுஸ்ஸாமவேதமறிந்த மூ
ன்று ப்ராமணர்களும், ராஜாவின் அதிகாரியாக வித்வா
ன ப்ராமணனும் இருக்கிறார்களோ அந்த ஸபையை ப்ர
ம்மாவின் ஸபைக்கு ஸமானமென்று கூறுகிறார்கள்॥
12 — பா, என்றால் ப்ரகாசம் அதோடு கூடியது ஸபை — வாதிவாதிக
ளுடைய கூட்டத்திற்கு ஸபையென்று பெயர்,
எந்த தேசத்தில் ஸத்யஸமயத்தைத் தேடி அதர்மத்தா
ல் அடிக்கப்பட்டு தர்மம் வருகிறதோ அவ்வளவு ஸபை
யோர்கள் மேல் போனால் அதர்மமாகிற தர்மத்தின் முளை
ளை நிவர்த்தி செய்யவேண்டும், இல்லாவிடில் அதர்மம்
13 — ஸபையோர்களையே சேரும்॥ ஸபையில் நடக்கக்கூ
டிய விவஹாரங்களில் ஸபைக்குப் போகாமலிருக்க

வேண்டும், ஸபைக்குச் சென்றவன் கேட்டதற்கு
ஸத்யத்தையே சொல்லவேண்டும்; தெரிந்துசொல்
லாமல் மௌனமாக இருந்தாலும் பொய்சொன்னாலும்
14— உடன்பாபியாவான்॥ எந்த ஸபையில் வாதி ப்ரதி
வாதிகள் வாதம்செய்த அதர்மத்தால் தர்மம் தோல்
வியடைகிறதோ, ஸாக்ஷிகளின் பொய்யால் ஸத்
யம் பாதிக்கப்படுகிறதோ அங்கே அந்தப்பாபம்
தெரிந்தும் நியாயம் சொல்லாமல் பார்த்துக்
கொண்டிருக்கும் ஸபையோரையே சேரும்॥
15— தர்மத்தை மீறினால் அது வேண்டியதைக் கொடுக்
காமல் வேண்டாததைக் கொடுத்து நம்மை அழிக்கும்,
மீறாமல் காப்பாற்றினால் அது வேண்டியதைக் கொ
டுத்து வேண்டாததை விலக்கி நம்மைக் காப்பாற்றும்;
ஆகையால் தர்மத்தை மீறக்கூடாது, காப்பாற்றப்பட
16— டதர்மம் நம்மைக் கொல்லாது॥ தர்மம் வேண்டிய
இஷ்டங்களையெல்லாம் கொடுப்பதால் அதை
வ்ருஷம் என்று சொல்லுகிறார்கள், அதைத் தடுப்பவ
னை வ்ருஷலன் என்று தேவர்கள் சொல்லுகிறார்
கள். ஆகையால் தர்மத்தைக் கெடுக்கக்கூடாது॥
(ஸாதாரணமாக சூத்ரனுக்கு வ்ருஷலன் என்றுபெயர்)

17 — தர்மம் ஒன்றுதான் மரணத்திற்குப் பிறகும் து
ணை செய்யக் கூடச் செல்லுகிறது, மற்றயாவையும் அத்
தனிகள் சரீரத்துடன் மறைந்துபோகின்றன॥

18 — ஸபையில் அதர்மம் நேர்ந்தால், அந்தப் பாபத்தின் கால்
பாகம் செய்தவனுக்கு, ஸாக்ஷிக்கு கால்பாகம், ஸபை
யோர்களுக்கு கால்பாகம், அரசனுக்கு கால்பாகம் வரும்॥

19 — எந்த ஸபையில் நியாயமாக தீர்ப்பளித்து குற்றவாளி
நிந்திக்கப்படுகிறானோ அந்த ஸபையில் அரசனுக்கோ
ஸபையோர்களுக்கோ பாபமில்லை செய்தவனுக்கே பா

20 — பம்॥ அரசனுக்கு ஸந்தேஹவிஷயத்தில், ஸ்வகர்மா
னுஷ்டானமில்லாமல் ஜாதியைக் குறித்துப் போதி
ஐயம் நியாய அநியாயம் அறியாத ப்ராம்மணனா
ந்யம் தெரிந்தால் தர்மத்தை எடுத்துக் கூறுவதற்கு
ப்ராம்மணனே வேண்டும் (நியமிக்கவேண்டும்)
ப்ராம்மணன் கிடைக்காவிட்டால் க்ஷத்ரியன், அல்லது வை

21 — ச்யன், சூத்ரன் கூடாது॥ எந்த அரசனுக்கு சூத்ர
ன் தர்மோபதேசம் செய்கிறானோ அந்த அரசன் பார்
த்துக்கொண்டிருக்கும் போதே, சேற்றில் விழுந்த பசுப்
போல் கஷ்டத்துக் குள்ளாகும்॥

31-8—

௨௨ — எந்த ராஜ்யம் சூத்ரர்களால் மிகவும் அதிகமாகவும்,
நாஸ்திகர்களால் ஆக்ரமிக்கப்பட்டும் த்விஜர்களி
ல்லாமலும் இருக்கிறதோ, அந்த ராஜ்யம் முழுவதும்
துர்பிக்ஷம் வியாதிகளால் பீடிக்கப்பட்டு சீக்கிரத்தில்
23 — அழியும். அசன் தர்மாசாரம் செய்ய வேண்டிய ஸ்தா
னத்தில் மற்றும் சரீரத்தைப் போஷித்துக்கொண்டு இருமை
அடன் லோகபாலதேவதைகளை வணங்கி வாட்டுவிக்க
24 — சரீரத்தை ரக்ஷிக்க வேண்டும். இவ்வுலகில் பிரா
ணிகளுக்கு நன்மை தீமைகளை அறிந்து, பரலோகத்தி
ற்கான தர்மாதர்மங்களை செய்யாமல் ஆசாரம் இல்லாம
ல் இருப்பவர்களின் அபாயங்களை போக்குவதிலாக்
25 — மாகவே ரக்ஷிக்க வேண்டும். வாதிப்ரதிவாதிகளுடை
ய, வெளிப்படையான குரல், எழுத்து, முகம், தோற்றப்
பு முதலானவைகளிலும், சரீரத்திலுள்ள லக்ஷணங்களா
லும், கைகளை ஆட்டுதல் முதலான சேஷ்டைகளினாலும்
ல் அவர்களுடைய மனோபாவத்தை அறிய வேண்டும்.
26— எனெனில் — மனுஷ்ய அங்கங்களாலும், நடை, செயல், பேச்
சு, கண் முகம் இவைகளின் மாறுதல் இவைகளால் மன
திலுள்ளதை அறிய வேண்டும்.

27— அநுகுணனான பாலனுடைய சொத்தை அவனுடைய தா
யாதிகள் அபகரிக்காமல் அவனுடைய பால்யாவஸ்
தை முடிந்துபோகோ, அல்லது பதினாறு வயசு ஆனபோதோ அர
சன் அந்தப் பாலனைக் காப்பாற்றி அவனிடம் ஒப்படைக்கவே
28— ண்டும்॥ மலடி, புத்திரனில்லாதஸ்திரீ, வீட்டை விட்டு வேறுவி
வாஹம் செய்துகொண்டவனுடைய பத்தினிஸ்திரீ, ஸ்ரீவனத்தி
க்குக் கொடுக்காமல்) அயல் தேசம் சென்ற ~~ஒருத்த~~வனுடைய
புத்திரனில்லாதஸ்திரீ, ஞாதிகளில்லாதஸ்திரீ, பதிவிரதை
கள், விதவைகள், ரோகமுள்ளஸ்திரீ இவர்களுடை
ய சொத்தையும் அரசன் காப்பாற்றிக் கொடுக்கவேண்டு
29— ம். ஞாதிகளானவர்கள் உயிருடனிருக்கும்போதே அவர்க
ளுடைய ஸ்திரீகளின் சொத்தைக் கைப்பற்றித் தேவதாக
ர மனுஷ்யரை அபகரித்தால் அவர்களுக்குத் தர்மிஷ்டனான அர
சன் திருடனுக்குரிய தண்டனையை அளிக்கவேண்டும்॥
30— யாதாவது உரிமையாட்டமல்லாவிட்டால் அரசன் மூன்று வரு
ஷம் காப்பாற்றி வைக்கவேண்டும், தொலைந்துபோனவர்
கள் அதற்குள் திரும்பி சரியான அடையாளங்கள் கூ
றி கேட்பவர்களிடம் கொடுக்கவும் மூன்று வருஷங்களுக்கு
ப்பிறகு அரசனைச் சேர்ந்தது॥

31 — தவறவிட்டு அவனிடமிருக்கும் பொருளை எவன் எனது
என்று கூறுகிறானோ அவனிடம் அந்தப் பொருள் எந்த மாதி
ரியானது, எத்தனை, எந்த தேதியது, என்பது முதலான
வைகளைக் கேட்க வேண்டும்; சரியாகச் சொன்னால் அ
32 — வனிடம் கொடுக்க வேண்டும். தேசம், காலம், நிறம், ரூபம்
அளவு, இவைகள் சரியாய்ப் பேசாதவன் பொய் சொ
ல்லுகிறான் என்று அந்தப் பொருளுக்குச் சமமான தெ
33 — ண்டனை விதிக்க வேண்டும். அந்தப் பொருளைத் தவ
றவிட்டவனுடைய யோக்யதையை அனுசரித்து அந்த
ப் பொருளுடைய மதிப்பில், ஆறில் ஒரு பாகம், பத்தில்,
பதினைந்தில் ஒரு பாகம் அரசன் அவனிடமிருந்து
பெற்றுக்கொண்டு அந்தப் பொருளைச் சேர்ப்பிக்க வேண்டு
34 — ம். தவறவிட்ட பொருளை அரசாங்க அதிகாரிகள் கண்
டெடுத்தால் அதைக் காவலாளிகள் பாதுகாத்து வைக்
க வேண்டும்; அந்தப் பொருளை அரசாங்க அதிகாரி
களோ திருடனோ அபகரித்தால் அரசன் யானையால் மி
35 — தித்துக் கொல்ல வேண்டும். வேறுவகைக்கு உரி
ய பங்கையும் கிடைத்தாலும்; மற்றவர்களுக்குக் கிடைத்த
து என்றாலும் அது என்னுடையது என்று சொல்லி

யாகத் தெரிந்தால், அவன் கவ்வகைகளையில்லாதவனாகக் கொ
தால் ஆறிலொருபாகமேனும் கவ்வகைகளையுடைத்திருந்தால்
பன்னிரண்டிலொருபாகமேனும் அரசன் பெறவேண்டும் ||
36— அந்நிதிப்பொருள் தனக்குடையதல்லாததைத் தன
தென்று எவன் பொய்சொல்லுகிறானோ அவன் நிர்த்
னனாகக் கிடைத்திருந்தால் அவனுடைய பொருளில் எட்டில்
ஒருபங் கொண்டையாகவும், நோவாகக் கிடைத்தால்
அந்தப் பொருளுக்கொத்த அளவையளவுடைத்தியா
ம் தண்டனையாகப் பதிக்கவேண்டும் ||
37— வேதசாஸ்திரவித்வானான பிராமணன் நிதியைக் கண்டெடுத்தா
ல் அந்நிதி முழுவதும் அவனுக்கே, அரசனுக்கு பாகமி
ல்லை, ஏனெனில் எல்லாப்பொருளுக்கும் அவனே உரிய
38— வனில்லையா || புதைத்து வைக்கப்பட்டிருந்த பொருளை அ
ரசன் கண்டெடுத்தால் அதில்பாதியை ப்ராமணர்களுக்கு
க்கொடுத்து பாதியை தன்கஜானாவில் சேர்க்கவேண்டும் |
39— யாருக்குச் சொந்தம் என்று அறியப்படாத நிதி பூமியை
யிற் புதைந்திருப்பவைகளைக் கண்டெடுத்தால் கண்டெடுத்த
வனுக்குப் பாதியும் அரசனுக்குப் பாதியும், ஏனெனில் ராஜ்ஜ
த்யம் சேர்வானவைகளில் கிடைப்பதில் பாதி அரசனுக்கு

31-8-

ஏனெனில் அவன் பூபதியல்லவா ||

40 — திருடர்களால் திருடுபோன பொருளைக் கொடுத்தால்
அந்தப் பொருளின் பேரிலுள்ள உடைமை அவருக்கே
கொடுக்கவேண்டும், அதில் அரசன் பற்று கொடுத்தால் திருட்டு

41 — பாபம் உண்டு || அரசன் வர்ணாச்ரமஜாதிகளுக்கு
உரிய தர்மங்களையும் தேசதர்மம் ஜாதிதர்மம் குலதர்மம்
வியாபாரதர்மம், இவைகளை அறிந்து வேதத்தில் வகுக்
கப்பட்ட தர்மங்களுக்கு விரோதமில்லாமல் தீர்ப்பளிக்

42 — கவேண்டும் || மனிதர்கள் தங்கள் தேசகுலஜாதிதர்
மங்களைச் செய்து கொண்டு அவரவர்களுக்குரிய
நித்யநைமித்திக தர்மங்களை அனுஷ்டித்துக் கொ
ண்டிருப்பவர்கள் தூரத்திலிருந்தாலும் லோகத்தி
ற்கு இனிமை செய்பவர்கள் || (பாதிவர்கள்) ||

43 — அரசனோ, அரசனைச் சேர்ந்த அதிகாரிகளோ தானாக
வியவகாரத்தை உண்டு பண்ணக்கூடாது, வாதிப்ரதிவா
திகளால் வந்த (அவர்களால் கொண்டுவரப்பட்ட) வ்ய
வஹாரத்தை கவனியாமல் ஒதுக்கக் கூடாது ||

44 — வேடனால் அம்பு எய்யப்பட்டு ஒழுகும் உதிரத்தில் பதுங்கியோடு
கின்ற மிருகத்தை வேடன் அதன் ரத்தத்துளிகளால் கண்டு

கேட்டதை அறிவது போல் அரசன் அனுமானத்தா
லும் வேறுப்ரமாணத்தாலும் தர்மத்தின் உண்மையை
45 — அறிந்து தீர்ப்பளிக்கவேண்டும்॥ நீதிவிசாரணை செய்
யும் அரசன், வேறுபலவினைக்கருதாமல், சத்யம் வ்யவஹா
ரத்திற்கு விஷயமானபொருள், நியாயமானதீர்ப்பளி
த்தல்தனக்கு ஸ்வர்கம் உண்டென்பதையும், ஸாக்ஷிகளின்
ஸத்யவாதிகளா என்பதையும், உசிதமான காலதேச
ங்களையும், சிறியது, பெரியது என்ற வ்யவஹாரத்தின்
46 — தன்மையையும் கவனிக்கவேண்டும்॥ வேதசாஸ்த்ரமறி
ந்த தர்மாநுஷ்டானம் செய்யும் த்விஜர்களால் அனுஷ்டி
க்கப்பட்ட தர்மங்களில் தேசஜாதி குலதர்மங்களுக்
கு விரோதமில்லாதவைகளை எடுத்துக்கொண்டே வ்ய
வஹார நிர்ணயம் செய்யவேண்டும் (இதுவேது)॥
ததால்
47 — கடன்கொடுத்தவன், வாங்கியவன் தருதல் வழக்குப்
போட்டால், வேதனங்களில் (மொட்டுத்திலே) கவனித்
து அதன்படி தரவேண்டிய பணத்தைக்கொடுக்கும்படி
48 — செய்யவேண்டும்॥ எந்தெந்த உபாயங்களால் வாங்கி
யவனிடமிருந்து கடன்கொடுத்தவன் பணத்தைப் பெறு
வனோ அந்தந்த உபாயங்களைப் ப்ரயோகித்து கொடுக்க
ச்செய்யவும்॥

49— அர்த்தஸம்ஸாதநம் — கடன் வாங்கியவ
னைச் சேர்ந்தவர்கள் நேசர்கள் முதலியவர்களின் உதவி
மித்திரங்கொண்டு கேட்கும்படி செய்வது தர்மம்,[1] வாங்கிய
ன் வாங்கியதை ஒப்புக்கொண்டு கையில் பணமில்லையெ
ன்றால், அவனை வ்யாபாரம் முதலியவைகளில் இணைந்து செ
ய்யச் சொல்லிக் கடனை வசூலிப்பது வ்யவஹாரம்,[2] பல
வானை மத்யஸ்தன் மூலமாய் கடனாளியிடமிருந்து
தனக்காக வென்று வாங்கி (வஞ்சனையாக) கடன் கொடுத்
தவனுக்குக் கொடுப்பது சலம்,[3] கடனாளியுடைய பத்னீ
புத்ர பசுக்களைப் பிடித்துச் சென்று வாசலில் மறியலிருந்து
ம் வசூலிப்பது ஆசரிதம்,[4] கடன் வாங்கியவனைக் கட்
டித்து வீட்டுக்குக் கொண்டுவந்து அடித்து வசூலித்துப்
பெறுவது பலம்,[5] இவ்வாறு ஐந்து உபாயங்கள்॥

50— கடன் கொடுத்தவன், பலாத்காரம் முதலான ஏதோ ஒரு
உபாயத்தால் வாங்கியவனிடமிருந்து, அரசனி
டம் செல்லாமல் தானே வசூல் செய்துகொண்
டால் அந்த அரசன் ஆக்ஷேபிக்கக்கூடாது॥

51— கடன் வாங்கியவன் ஸபையில் நான் வாங்கவில்லையெ
ன்று மறுத்தால், அரசன் கோட்டுப் பத்திரம் (லேகனம்)

முதலானவைகளையும் ஸாக்ஷி, பராமர்சம் செய்து
கொடுவான் உபாயங்களால் அறிந்து பணத்தைக் கொடுக்கச்
செய்ய வேண்டும்; அவனுடைய சக்தியறிந்து இருந்தவண்
52- ணையும் ஸாதிக்க வேண்டும். பணம் கொடுக்க வேண்டு
மென்று ஸமயமந்திரம் பண்ணித்துப் பாதிகொடுக்க வேண்டு
மதில்லையென்று வாதிக்கிறவன் முறைத்தால், கொடுக்கும்
போது அந்தந்த இடத்திலிருந்த ஸாக்ஷிகளையும் பத்திரங்களை
53 — யும் சொல்ல வேண்டும். கடன் கொடுத்தவன் வாங்கிய
10-56 வன் மேல் வியவஹாரம் தொடர்ந்து, அதிகாரி கேட்கும்
போது, நான் கடன் கொடுக்கும்போது அவனிருந்த
ஊரில் அவன் ஸ்திரமாக இருக்கவில்லை, என்றும், ஒரு கு
திரத்தைக் கொடுக்கப்பட்ட ஸாக்ஷி என்றால் கொடுக்கப்படவில்லை
